# வரவுசெலவுத்திட்ட உரை – 2022

## 1. முன்னுரை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.1 இன்று என்னால் சமர்ப்பிக்கப்படுவது சுதந்திர இலங்கையின் 76 ஆவது வரவுசெலவுத்திட்டமாகும். இந்த வரவுசெலவுத்திட்டம் அதிமேதகு கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களது அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் இரண்டாவது வரவுசெலவுத்திட்டம் என்பதுடன் நிதி அமைச்சர் என்ற வகையில் எனது கன்னி வரவுசெலவுத்திட்ட உரையுமாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.2 நாம் தற்பொழுது கடந்து சென்றுகொண்டிருப்பது மனித நாகரீகத்தின் மிகவும் வேதனைமிக்க காலப்பகுதியொன்றினையாகும். இக்கசப்பான உண்மையினை உணர்ந்துகொள்ள முடியாதவர் எவரும் இருப்பாரென நான் நினைக்கவில்லை. எவ்வாறாயினும், நாம் இந்த சவால்மிக்க காலத்தினை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.3 பொதுமக்களின் நலனுக்காக *சவால்களை சவாலாக எதிர்கொள்ளும்* விடயத்தினை நான் முதலில் கற்றுக்கொண்டது எனது பூர்வீக இல்லமான மெதமுலனையிலாகும். சவால்களுக்கு அஞ்சுகின்ற வரலாறு ராஜபக்ஷகளிடத்தில் இருந்ததில்லை. 1936 இல் இலங்கையின் இரண்டாவது அரச சட்ட சபையில் பிரதிநிதித்துவம் வகித்த *"ருஹுணு சிங்கம்"* என அழைக்கப்பட்ட டி.எம். ராஜபக்ஷ அவர்களை முழு நாடும் அறிந்திருந்தது. அவர் எனது தந்தையின் மூத்த சகோதரர் *(பெரியப்பா)* ஆவார்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.4 1945 இல் எனது தந்தை அரச சட்ட சபைக்கு தெரிவானது ருஹுணு கிருவாவின் அரசியல் மாற்றத்திற்கான திருப்புமுனையாக அமைந்தது. டி.ஏ. ராஜபக்ஷ அவர்கள் எதிர்காலத்துக்குரிய நாட்டுப்பற்றாளர் என்பதனை ருஹுணு மண்ணும் மக்களும் இன்றுவரை சான்றுபகர்கின்றனர்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.5 ராஜபக்ஷ அரசியல் பரம்பரையில் இந்த நிமிடம்வரை மேலுச்சியில் இருப்பது இந்த அதியுயர் சபையினை அலங்கரித்திருக்கின்ற கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களாவார். சுதந்திர இலங்கையின் மிகவும் நெடுக்கடியான தசாப்தமாக 2005 இல் இருந்து 2015 வரையான 10 வருட காலம் காணப்பட்டது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.6 உலகில் எந்தவொரு நாட்டிலும் அதிகாரத்திற்கு வருகின்ற அரசாங்கத்தினால் நிறைவேற்ற வேண்டிய சகல கடமைகளும் மூன்று பிரதான விடயங்களுக்குட்பட்டதாகும். அவையாவன, தேசிய பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி என்பனவாகும். இந்த மூன்று முக்கிய கடமைகளையும் சம காலத்தில் நிறைவேற்றிய ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சனாதிபதி அவர்களாவார். அவ்வாறான தலைவர் ஒருவரினை உலக அரசியல் வரைபடத்தில் எம்மால் இலகுவாக கண்டுகொள்ள முடியாது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1.7 எமது அரசியல் பயணத்தில் மற்றுமொரு அத்தியாயம் 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியின் மூலம் எமக்கு தண்டனை வழங்கப்படாதிருப்பின் நாம் இவ்வளவு தூரம் முதிர்ச்சி

அடைந்திருக்கமாட்டோம். இருந்தபோதிலும், அவ்வாறான வேதனை மிக்க நினைவுகளை எம்மாலும் எமது அன்புக்குரிய போராளிகளினாலும் மறக்க முடியாது. தோல்வியின் போது அனுபவிக்கின்ற வேதனைகள் மீண்டும் வெற்றிபெறுகின்ற நாளில் எதிர்ப்பினை வெளிப்படுத்தும் தாக்குதலாக மாறுவது சாதாரண நடைமுறையாகும். எவ்வாறாயினும், அவ்வாறு நிகழ்வதற்கு நாம் இடமளிக்கவில்லை.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**1.8** நல்லாட்சி காலத்தின் வெறுப்புமிக்க அரசியல் மூலம் தளர்ந்துபோகாத நாம் காட்டுமிராண்டித்தனமான அரசியல் சூழ்நிலைக்குள் ஆசியாவின் மிக உன்னதமான அரசியல் சக்தியினை உருவாக்குமளவு நாம் தைரியமிக்கவர்களாக மாறினோம். அதுவே ஸ்ரீலங்கா பொதுசன முன்னணியாகும். எமது இப்புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டு 15 மாதங்கள் கடப்பதற்குள் முதலாவது தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அது 2018 பெப்ரவரி 10 ஆந் திகதி இடம்பெற்ற மாகாண சபைகள் தேர்தலாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**1.9** அனைத்து எதிர்முகாம்களினையும் தோல்வியடையச்செய்து நாம் இத் தேர்தலில் மகத்தான வெற்றியினைப் பெற்றோம். பின்னர் சனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அதுவரை இந்த நாட்டில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லாத ஒப்பற்ற அரசியல் காரணிகள் மூன்று எம்மிடம் காணப்பட்டது. அதில் முதலாவது, மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் நிகரற்ற அரசியல் தலைமைத்துவமாகும். இரண்டாவது, மிகவும் ஒழுங்காக கட்டமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுசன முன்னணியாகும். மூன்றாவது, மக்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட வெற்றி வேட்பாளரொருவர் எமது அரசியல் முகாமிற்குள் இருந்ததாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**1.10** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்கள் பலவற்றுக்கு மத்தியில் 2019 சனாதிபதித் தேர்தலில் அதிமேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் அமோக வெற்றியீட்டினார். அறுபத்தொன்பது இலட்சம் மக்கள் அதிமேதகு கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களுக்கு வாக்களித்தனர். அது பதின்மூன்று இலட்சத்தினை விஞ்சிய அதிகப்படியான வாக்குகளின் மூலம் கிடைக்கப்பெற்ற சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த மக்கள் ஆணையாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**1.11** கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்தின் மகத்துவத்தினை மீண்டும் சான்றுபகரும் வகையில் சனாதிபதித் தேர்தல் இடம்பெற்று 9 மாதங்களின் பின்னர் 2020 பாராளுமன்ற தேர்தலிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி கிடைத்தது. இது எதிர்க்கட்சிகளை நடுங்கச் செய்யுமளவு மக்கள் வழங்கிய பதிலடியாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2. இந்த வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவது நாம் உலகளாவிய ரீதியில் நெருக்கடிகள் ஐந்துக்கு மத்தியில் வாழ்கின்ற சந்தர்ப்பமொன்றிலாகும்.

**2.1** **முதலாவது,** உலகில் என்றுமில்லாதவாறு சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகள் அதிகமாகக் காணப்படுவதாகும். அல்லது செல்வந்தர்கள் மற்றும் கம்பனிகள் மென்மேலும் தொடர்ந்து செல்வந்தர்களாக இருக்க, வறியவர்கள் மென்மேலும் வறியவர்களாகவே இருக்கும் நிலையாகும்.

**2.2** **இரண்டாவது,** நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்கின்ற முன்னேற்றம் குறைவடைகின்றமையாகும். இது எம்மைப் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு மிகவும் கடுமையானதாகும்.

2.3 அதிகளவு புவி வெப்பமடைவதனால் அதிகரித்த சுற்றாடல் பேரிடரானது, **மூன்றாவது** நெருக்கடியாகும். தற்பொழுது அபிவிருத்தியடைந்த அல்லது அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற பாகுபாடின்றி பெரும்பாலான நாடுகள் பல்வேறுபட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

2.4 **நான்காவது,** நெருக்கடியானது, வரலாற்றில் இதற்கு முன்னர் என்றுமில்லாதவாறு இருதரப்பு மற்றும் பல்தரப்பு உதவிகள் வரையறுக்கப்பட்டிருப்பதாகும். இதற்குக் காரணம் அனைத்து செல்வந்த நாடுகளும் தமது உள்ளக நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு விசேட முன்னுரிமை வழங்கியுள்ளமையாகும்.

2.5 **ஐந்தாவது,** நெருக்கடியானது, கொறோனாவின் பின்னர் ஏற்பட்டுள்ள ''புதிய சாதாரணநிலை'' க்கு ஏற்ப தகவமைக்க வேண்டியுள்ளமையாகும். பயணத் தடை, வீட்டிலிருந்து வேலை செய்தல், பொருட்களின் விலையேற்றம் மற்றும் உற்பத்தித் தொழிற்றுறையின் வலையமைப்பு உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றமை போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு நாம் சமகாலத்தில் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2.6 இந்நிலைமையானது பல்வேறு நாடுகளுக்கு பல்வேறு வகையில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்திப் பொருளாதாரங்களில் கவனம் செலுத்துகின்ற நாடுகளின் பாதிப்புடன் ஒப்பிடுகையில் எம்மைப் போன்ற சேவைகள் சார்ந்த பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு அதிகமாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2.7 இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேவைகளை வழங்குவதன் மூலம் எமக்கு கிடைக்கும் வருமானம் இழக்கப்படும் சந்தர்ப்பமொன்றாகும். இதன் விளைவாக, நாட்டுக்கும் திறைசேரிக்கும் கிடைக்கின்ற வருமானமும் இதற்கு முன் என்றுமில்லாதவாறு குறைவடைந்துள்ளது. எமது மதிப்பீடுகளின் அடிப்படையில் ரூபா 200 பில்லியனை விட அதிகமாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2.8 நாம் வாழ்ந்து கொண்டிருப்பது மக்களின் வாழ்வு, வாழ்வாதாரங்கள், வருமான மூலங்கள் மற்றும் தொழிற் பாதுகாப்பு என்பன தொடர்பான வரலாற்றில் மிகவும் சவால் நிறைந்த காலப்பகுதியிலாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2.9 இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் எமது பொருளாதாரத்தினை முகாமை செய்வதற்கு தேவையான அனைத்து சக்திகளும் எம்மிடம் இருப்பதாகவும் அவற்றினை மிகைப்பதற்கான ஆற்றல்கள் இருப்பதாகவும் நான் நம்புகின்றேன்.

## 3. எமது பலம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எம்மிடமுள்ள பலம் குறித்து இந்த உயர்சபைக்கு சுருக்கமாக விபரிப்பதற்கான சந்தர்ப்பமாக இதனை நான் கருதுகின்றேன்.

### 3.1 துணிவுமிக்க தலைமைத்துவமும் அரசியல் ஸ்திரத்தன்மையும்

இப்பிராந்தியத்தில் உயர்ந்த சனநாயக அரசியல் ஸ்திரத்தன்மையுடன் கூடிய நாடு எமது நாடாகும். மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதியொருவர் இருக்கின்றார். அந்த சனாதிபதி நேர்மையான, உறுதியான தீர்மானமெடுக்கும், ஊழல், மோசடி மற்றும் வீண்விரையத்தினை

ஒழிக்கின்ற எளிமையான தலைவராவார். இது எமது எதிர்கால பயணத்திற்கான மனஆறுதல் என்பதுடன் உந்துசக்தியுமாகும். அதேபோன்று எமக்கு மூன்றிலிரண்டு பாராளுமன்ற பெரும்பாண்மையும் காணப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்த பாராளுமன்றத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குவது ஆசியாவின் மிகவும் முதிர்ச்சியுற்ற அரசியல் தலைவர் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களாவார். அவர் இந்நாட்டுக்கு அதிவிசேடமான பணிகளை புரிந்த தலைவராவார்.

இதற்கு மேலதிகமாக, எமது நாடு சுயாதீனமான நீதித்துறையினையும் விழுமியங்களைக் கொண்ட அரசாங்க சேவையையும் கொண்டுள்ளது. நீதித்துறை மற்றும் அரசாங்க சேவை இரண்டும் இதற்கு முன்னரைப் போன்றல்லாது இன்று நாம் பெருமைப்படக்கூடியதாக உள்ளன.

## 3.2 சர்வதேச தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உட்கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரை நாம் மிகவும் உயர்ந்த இடத்திலிருக்கின்றோம். துறைமுகங்கள், விமான நிலையங்கள், தொலைத் தொடர்பு வசதிகள், அதிவேகப் பாதைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சார வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அதேபோன்று 100,000 கி.மீ பாதைக் கருத்திட்டம் மற்றும் 5,000 பாலங்கள் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினூடாக உபபாதை வலையமைப்புகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு முழு நாடும் ஒரு வலையமைப்பின் கீழ் கொண்டுவரப்படும். இதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சர்வதேச தரம் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் நாம் முன்னணியில் திகழ்கின்றோம்.

## 3.3 அணிசேரா, நட்புரீதியான சர்வதேச உறவுகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது நட்புரீதியான இருதரப்பு மற்றும் பல்தரப்பு இராஜதந்திர உறவுகளை வரலாற்றில் என்றுமில்லாதளவு சிறந்த முறையில் நாம் விரிவுபடுத்தியுள்ளோம். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை, குவைட் நிதியம், சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் அமைப்பு அத்துடன் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்படும் முகவராண்மைகள் போன்ற அனைத்தும் தற்போது எம்முடன் மிக நெருக்கமாக பணியாற்றுகின்றன. இதற்கு மேலதிகமாக, அவசியமான நேரத்தில் எமது நாட்டுக்கு உடனடியாக உதவுவதற்கு இந்நிறுவனங்கள் தயாராக உள்ளன என்பதை நான் கௌரவத்துடன் நினைவுகூறுகின்றேன்.

## 3.4 ஆரோக்கியம்மிக்க அறிவார்ந்த மனித வளம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நாம் அதிர்ஷ்டமிக்கதொரு நாட்டில் வாழ்கின்றோம். எமது மக்கள் பல்தேர்ச்சிகளைக் கொண்டவர்கள் என்பதுடன், ஆரோக்கியமான, கற்றறிந்த, அறிவார்ந்த, மரியாதைமிக்க மற்றும் நன்றியுணர்வுடையவர்களாகவும் இருக்கின்றனர். இதன் காரணமாக மனிதவள அபிவிருத்தியின் மரபுரீதியான மூலப்பிரமாணமாக கருத்திற் கொள்ளப்படாத பண்புகளை எமது மனிதவளம் கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகின்றேன். எனவே, எவ்வித சவால்களையும் எதிர்கொள்வதற்கு எம்மிடம் வலிமையுள்ளது. கொவிட் உலகளாவிய பெருந்தொற்று காலப்பகுதியிலும்கூட உயர் உணர்திறன்மிக்க மனிதவளத்தைக் கொண்டிருக்கவேண்டிய

முக்கியத்துவத்தை நாம் நடைமுறை ரீதியாக எதிர்கொண்டோம். ஆகையினால், அனைவருக்கும் தேவையான உடனடி பராமரிப்பினை வழங்குவதற்கான வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறோம்.

### 3.5 சுற்றாடலை நேசிக்கும் ஒரு தேசம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எம்மைப்போன்று சுற்றாடலை நேசிக்கின்ற வேறொரு சமூகம் இருக்கமுடியாது. 2,500 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட நாகரீகம் முழுவதிலும் அதற்கான போதிய சான்றுகளுள்ளன. இலங்கையின் நிலத்தோற்றமானது வனங்கள், ஈரநிலங்கள், விவசாயக் காணிகள், கரையோரம் மற்றும் கடல்சார் அமைப்புகளைக் கொண்டு செழிப்புமிக்கதாகத் திகழ்கின்றது.

அதன் தன்மையும் பரம்பலும் காலநிலை, புவியியலமைப்பு மற்றும் மண்வகைகள் என்பவற்றில் தங்கியுள்ளது. தாழ்நில மழைக்காடுகள் பவளப்பாறைகள் போன்ற எமது நாட்டின் உயிர்பல்வகைமை செழிப்புமிக்க உயிரியல் சூழல் அமைப்பு பௌதீக ரீதியாக வரையறுக்கப்பட்ட புவியியல் பிரதேசங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.6 நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் தொலைநோக்கு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சூழல் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டும் முரண்படுகின்ற இருதுறைகள் என்பதே கடந்த காலப் பொருள்கோடலாகும். ஆனாலும் இரண்டும் ஒன்று மற்றொண்டுக்கு நன்மைபயக்கும் விதத்தில் ஒருங்கிணைக்கப்படக்கூடியன என்பதை ஒட்டுமொத்த உலகமும் இன்று நம்புகின்றது. நிலைபெறத்தக்க அபிவிருத்தியின் நோக்கில் உலகம் நகர்ந்துகொண்டிருக்கின்ற வேளையில் செழிப்புமிக்க இயற்கை வளங்களையும் உயிர்பல்வகைமை முறைமையையும் கொண்ட எமது பாரம்பரியத்தை நாம் பேணிக்காக்க வேண்டும். எமது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி உபாயங்களும் சூழல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் முரண்படுகின்ற குறிக்கோள்களை உகப்பான விதத்தில் முகாமை செய்வதனூடாகத் தூண்டப்பட்டுள்ளன என்பதை இங்கு நான் பிரகடனப்படுத்துகின்றேன். ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தினூடாக பசுமைப் பொருளாதாரமொன்றினை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தினை நாம் ஏற்கனவே பிரகடனப்படுத்தியுள்ளோம். 2022 வருடத்திற்கான வரவுசெலவுத்திட்டமானது இவ்வெண்ணக்கரு பற்றிய நீடிப்பொன்றேயாகும்.

### 3.7 தேசிய பாதுகாப்புக்கான முன்னுரிமை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சமாதானத்தினையும் தேசிய பாதுகாப்பினையும் இலங்கையில் நாம் உறுதியாக ஒருங்கிணைத்திருக்கின்றோம். நாட்டில் தீவிரவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் இனிமேலும் இடமில்லை. இன்று எமது நாடு உலகிலுள்ள மிகவும் சமாதானம் மிக்க உறுதியான நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சமாதானத்தின் நன்மைகருதி நாம் தற்போது அறுவடை செய்கின்றோம்.

பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான இயலுமையை நாம் கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், உலகளவிலான சில அச்சுறுத்தல்களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளதனை அவதானத்தில் கொண்டுள்ளோம். அத்தகைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதும் தேசிய பாதுகாப்பினை உறுதி செய்வதும் எமது முதற்பொறுப்பு என நாம் கருதுகின்றோம்.

சுதந்திரத்தினதும் சுபீட்சத்தினதும் அடித்தளமாகவுள்ள தேசிய பாதுகாப்பிற்கான எமது பொறுப்புடமையிலிருந்து நாம் விலகமாட்டோம். தேசிய பாதுகாப்பினை, மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்றவிதத்தில் காணப்படுகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய பூரண பாதுகாப்பாக மாற்றுவதற்கு எமக்கு இயலுமாகவுள்ளது. இதற்காக பொதுமக்களிடமிருந்து அளவுகடந்த ஆதரவுள்ளது. எனவே, நாம் நாட்டில் இன ஐக்கியத்தினையும், அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டினையும் சிறப்பாக வலுப்படுத்தி பயங்கரவாதத்தை இல்லாதொழித்து தீவிரவாதத்தை முறியடித்துள்ளோம் என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## 3.8 தடுப்பூசி வழங்குவதில் முன்னணியில்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது அரசாங்கமானது 2020 மே மாதத்திலிருந்து கொவிட் உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலை தடுப்பதற்கு கடுமையான வழிமுறைகளை முன்னெடுக்கவேண்டியிருந்தது. எமது மக்களைப் பாதுகாப்பதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

நாடு பூராகவும் பயணத்தடைகள் விதிக்கப்பட்ட அதேவேளை, பிரதேசங்களைத் தனிமைப்படுத்தலும் அமுல்படுத்தப்பட்டது. மூன்றாவது அலையின்போது நோய்த்தொற்றினைத் தடுப்பதற்கு சுகாதார ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல் தீவிரப்படுத்தப்பட்டது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நாம் நாடுமுழுவதும் கொவிட் சிகிச்சை மையங்களையும் அதற்கான வசதி வழங்கல்களையும் வலுப்படுத்தினோம். தடுப்பூசி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விசேடமாக அதிக ஆபத்துமிக்க பிரதேசங்களிலும் உயர் ஆபத்து மிக்க குடித்தொகையினையும் நோய் எதிர்ப்புக்குட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட சுகாதார மற்றும் பொருளாதார சவால்களுக்கு பதிலிறுத்துவதற்கான வளங்களை திரட்டிக் கொள்வதற்கான நடவடிக்கையினைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடனும் இணைந்து பணியாற்றியது. ஏறத்தாள அரை மில்லியன் மக்களை தொற்றுநோயிலிருந்து காப்பதற்கு எமக்கு இயலுமாக இருந்தது.

நாமே சொல்லை செயலில் காட்டிய அரசாங்கமொன்றாவோம். இன்று நாம் தடுப்பூசி இலக்குகளை எய்தியுள்ளோம். எனவேதான் ''ஆசியாவில் தடுப்பூசியேற்றிய தேசம்'' என்ற பெருமையுடன் விளங்குகின்றோம். தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தலைமைத்துவம் வழங்கியமைக்காக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு நாம் விசேட கௌரவத்தையும் நன்றியையும் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

## 3.9 கொவிட்டினைத் தோற்கடித்து பணிக்குத் திரும்புதல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கொவிட் நோய்த்தொற்றிலிருந்து எமது நாட்டைக் காப்பதன் மூலம் தனித்துவமான அனுகூலத்தினை எய்துவதற்கு எமக்கு இயலுமாக இருந்தது. எமது மக்களின் வாழ்வை புத்துயிரளிப்பதற்கும் சுற்றுலாத்துறை உள்ளடங்களாக பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை மீட்டெடுப்பதற்கும் எமக்கு இயலுமாகவிருந்தது. மேலும் பிராந்தியத்தில் வேறு நாடுகளுக்கும் முன்னர் கொரோனாவுக்குப் பிந்திய பொருளாதார மீட்சியொன்றுக்காக முன்னணியிற் செல்வதற்கு இது எமக்கு வலிமையைத் தந்துள்ளது. மக்களின் அதிக எண்ணிக்கையானோர் அவர்களது வழமையான வாழ்க்கை முறைக்கு திரும்புகின்றனர். அவர்கள் தாம் பணியாற்றும் இடங்களுக்கு பயணிக்கின்றனர். வருமானம் உழைக்கும் வழிகள் திறக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. எனவேதான் எமது நாடு மீண்டுமொருமுறை பணியாற்றுமிடமொன்றாக உருவெடுக்கின்றது.

### 3.10 உள்நாட்டு தொழில்முயற்சியினை வலுப்படுத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கொவிட் தொற்று காலப்பகுதியில் எம்மைக் கவனிப்பதற்கு முன்னணியிலிருந்த மருத்துவர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் அரச ஊழியர்கள் இன்றும் எம் கண்முன் தோன்றுகின்றனர். எமக்குத் தெளிவாகத் தென்படவில்லையாயினும் இன்னுமொரு அணியினரும் எமக்குப் பின் பக்கபலமாக நின்றனர். அவர்கள் எமது வர்த்தக சமூகத்தினராவர். அவர்கள் தமது ஊழியர்களை தொழிலிருந்து வெளியேற்றவில்லை. சாத்தியமான எல்லாவழிகளிலும் உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மூலம் அத்தியவசிய சேவைகளினை மக்களுக்கு வழங்குவதற்கு ஆதரவளித்தனர்.

ஏற்றுமதி தொழிற்றுறைகளும் அவற்றின் தேசிய பொறுப்புடமையினை நிறைவேற்றின. இது வர்த்தக மீதியினை முகாமைசெய்வதற்கு உதவியது. சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் எமது வர்த்தக சமூகத்திற்கு நாம் அவசியமான சேவைகளை வழங்கியதுடன் அவற்றை நாட்டின் இன்றியமையாத துறைகளாக்கினோம். இந்தவகையில், எமது அரசாங்கம் அவர்களுக்கென சாத்தியமான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இவ்வாறு, எமக்குள் மறைந்திருக்கும் அத்தகைய வலிமைகள் பலவற்றை இனங்காணக் கூடியதாகவுள்ளது. எனினும், இவைபற்றி மேலும் நான் விபரமாக தெளிவுபடுத்த விரும்பவில்லை.

## 4. எமக்கு முன்னுள்ள சவால்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

துரதிஷ்டவசமாக எமது அபிவிருத்தி பயணத்திற்கு தடையேற்படுத்தக்கூடிய பல இடையூறுகளும் சவால்களும் காணப்படுகின்றன. அவற்றை நாம் சவால்களாக எடுத்துக் காட்டுவதில் எவ்வித தவறும் இல்லையென நான் நம்புகின்றேன். இச்சவால்கள் பற்றி இச்சபைக்கு தெரியப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை நாம் குறைத்து மதிப்பிடவுமில்லை. ஆதலால் இச்சவால்கள் பற்றி சுருக்கமாக குறிப்பிட விளைகின்றேன்.

### 4.1 சர்வதேச போதைப்பொருள் மாபியா

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சர்வதேச போதைப்பொருள் கடத்தலில் இலங்கையினை ஈடுபடுத்துவதற்கான முயற்சியே அனைத்து சவால்களுக்கும் முன்னணியில் காணப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். எமது நாட்டைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களே இத்துயரத்தின் முக்கிய இலக்காகும். சனாதிபதி, முப்படைகள் மற்றும் பொலிஸ் உள்ளடங்களாக ஒட்டுமொத்த அரச இயந்திரமும் சர்வதேச போதைப் பொருள் மாவியாவுக்கெதிராக துணிச்சலாக போராடிவருகின்றது. அதற்காக நாம் அவர்களுக்கு நன்றிகூறவேண்டும். போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான போராட்டத்தில் அண்மைக் காலங்களில் தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொண்டவாறு இலங்கை சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

### 4.2 மோசடியான வியாபார தொழிற்பாடுகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய மற்றுமொரு தீவிர பிரச்சினை சட்டத்திற்குப் புறம்பான இலாபங்களை நாடுகின்ற தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் மோசடியான வியாபார நடவடிக்கைகளுக்கூடாக இந்நாட்டுமக்களின் வாழ்க்கை மீதான தாக்கமாகும். விசேடமாக பொருட்களைப் பதுக்கல், செயற்கையான பொருட் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தல், உயர் விலைகள் ஊடாக கறுப்புச் சந்தையினை தோற்றுவித்தல் என்பன காலத்திற்குக் காலம் இந்நாட்டு மக்களினால்

முகங்கொடுக்கப்படுகின்ற துயரங்களாகும். அத்தகைய நியாயமற்ற வர்த்தகர்களுக்கெதிரான எமது போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், மக்கள் சார்பில் உபாயமுறைகள் பின்னடைவுக்குட்பட்டமை உண்மையாயினும், இதனை பலவீனமொன்றாகக் காணவேண்டாமென உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். இதற்கு நிரந்தர தீர்வொன்றினை உருவாக்குவதற்கு மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதினூடாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுடன் இணைந்து தனியார் துறையினைப் போன்று போட்டிச் சந்தையில் நிறுவனத்துறையின் ஏகபோகத்தினை மாற்றியமைத்து சுதந்திரமான சந்தை நிலைமையொன்றினை உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

### 4.3 நாட்டுக்குத் தீங்குவிளைவிக்கும் சக்திகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அதேபோன்று சமூக செயற்பாட்டாளர்களாக இனங்காட்டிக் கொள்கின்ற வெளிநாட்டுச் சக்திகளின் முகவர்கள் எமது சமூகத்தின்மீது மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்திவருகின்றனர். இன்னுமொருபடி மேல்சென்று, இன்று அத்தகைய பெயரளவிலான செயற்பாட்டளர்கள் உறுதியானதும் மக்கள்சார் அரசாங்கங்களையும் கவிழ்த்துவிட முடியுமானவரகளாக தோற்றம் பெற்றுள்ளனர். அரசாங்கம் மாத்திரம் இதனை முகாமை செய்வது சாத்தியமற்றதாகும். எனவே, பொறுப்புள்ள குடிமக்கள் என்றவகையில், இந்நிலைமைபற்றி விழிப்பாக இருக்குமாறு இந்நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

### 4.4 பொதுவான உலகளாவிய சவால்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உலகிலுள்ள அநேகமான நாடுகள் எதிர்கொள்ளுகின்ற பல சவால்களை விதிவிலக்கின்றி நாமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உணவு உற்பத்திச் சங்கிலிக்கான இடையூறுகள், காலநிலை மாற்றம், இயற்கை பேரனர்த்தங்கள், சக்தி நெருக்கடிகள் உள்ளக ரீதியாக கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் விளைவாக பொருட்களின் விலைகளில் தளம்பல்கள் என்பன பொதுவானவையாகத் தோற்றம் பெற்றுள்ளன. இவை உள்நாட்டு வழிவகைகளில் மாத்திரம் தீர்க்கப்பட முடியாதவையாகும். இவை சர்வதேச ஒத்துழைப்பினையும் வேண்டிநிற்கின்றன. உள்நாட்டு மற்றும் சர்வதேச தலையீடுகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன. நாம் இவ்வணைத்துத் தரப்பினர்களுடனும் பங்காளர்களாகவிருத்தல் வேண்டும்.

### 4.5 அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு பற்றிய சவால்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நீண்டகாலமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் தொடர்ச்சியான தளம்பல்கள் பற்றி நாம் பேசியுள்ளோம். ஆயினும், ஒவ்வொரு அரசாங்கமும் இறுதித் தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு தவறியுள்ளன. அதனை நாம் நேர்மையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். சந்தையில் விலைகள் மற்றும் அளவுகளில் அத்தகைய தளம்பல்கள் ஏன் காணப்படுகின்றன என நாம் வினவவேண்டும். நுகர்வு வடிவங்களின் மாற்றல்கள், உற்பத்தி விளைவுகளில் அதிகரிப்பு போதாமை நவீன தொழில்நுட்பத்தை பின்பற்றுவதற்கு இயலாமை போக்குவரத்துச் செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலுடனான பிரச்சனைகள், இடைத்தரகர்களின் செல்வாக்கு, உற்பத்திச் சங்கிலியினுள் செம்மையான தரவுகளைப் பரப்பாமை என்பன பொருட்களின் விலை அதிகரிப்புக்கு பங்களித்துள்ளன.

## 4.6 வழக்கொழிந்த பொருளாதாரக் கருவிகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சனத்தொகை வளர்ச்சியுடன் சமாந்தரமான தயாரிப்புத் துறைகளில் போதிய வளர்ச்சியொன்றினை அடைவதற்கு எமக்கு இயலாதிருக்கின்றது. இந்நிலைமைகளை சரியாகப் புரிந்து கொள்ளாது மரபுசார்ந்த கருவிகளிலிருந்து சந்தை விலைகளையும் நிரம்பல்களையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தவிர்க்கமுடியாத விதத்தில் விமர்சிக்கப்படும். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மரபுசார்ந்த கருவிகள் போதாதுள்ளது என்பது எமது நம்பிக்கையாகும். இதனாலேயே அண்மை காலத்தில் எமது அரசாங்கமும் வர்த்தமானி அறிவித்தல்களை அச்சிடுவது தொடர்பில் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது. அதேபோன்று விலையினையும் நிரம்பலையும் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளில் சிலவும் நிச்சயமற்ற ஐயப்பாடுகளை தோற்றுவித்தன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உற்பத்தியினை அதிகரித்தல் தயாரிப்பாளர்களை போதியளவு ஊக்குவித்தல், வழங்கல் சங்கிலி பற்றிய சரியான தகவல்களைப் பரப்புதல் அத்துடன் விஞ்ஞான ரீதியான முறைகளைப் பின்பற்றி தீர்மானங்களை மேற்கொள்ளாமை போன்றவற்றுக்காக அரசாங்கம் அதிகளவு விமர்சனத்துக்குள்ளானது. ஆதலால் நாம் தற்போது இருட்டில் துளாவுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பொருட்கள் பற்றாக்குறை, இறக்குமதி வரையறைகளை விதித்தல், இறக்குமதிகள் மீது முற்றாகத் தங்கியிருத்தல், ரூபா மதிப்பிழத்தல் அத்துடன் தயாரிப்பாளர்களை போதியளவு ஊக்குவிக்கத் தவறியமை என்பன விலை அதிகரிப்பிற்கான காரணங்கள் என்பதனையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைகளின் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்கு கிடைக்கப்பெறுகின்ற தீர்வுகள் நீண்டகாலத்திற்காக இருக்க வேண்டும் என்பதனை கட்டாயம் புரிந்து கொள்ளவேண்டும்.

## 4.7 வர்த்தகப் பொருளாதாரத்தில் அதிகளவு கவனம் செலுத்துதல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தற்போது எமது பொருளாதாரமானது வர்த்தக சேவைப் பொருளாதாரத்திற்கு அதிகசார்பினைக் கொண்ட பொருளாதாரமாகக் காணப்படுகின்றது. இந்நிலைமை நிலைபேறானதன்று. இது சவால் மிக்கதானது. எமது பொருளாதாரத்தினை முன்னேற்றமடைந்த வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றுகின்ற திட்டமொன்றினை நோக்கி நாம் நகர வேண்டியுள்ளது. அது நவீன மயமாக்கப்பட்ட புத்தாக்கங்களுடன் கூடிய ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைத் திட்டத்தின் மீது கட்டியெழுப்பப்படுவதற்கு நாடப்படுகின்ற பொருளாதாரமாக இருத்தல் வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மிகச் சிறிய (Micro) உற்பத்தியாளரிடமிருந்து சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான உற்பத்தியாளருக்கு தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு இடைத்தடங்களற்ற வசதிகளை வழங்குகின்ற பொருளாதார முறைமையொன்றினை நாம் உருவாக்க வேண்டியுள்ளது. இது மரபு சார்ந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் மாற்றமொன்றுக்கு அழைப்பு விடுக்கின்றது. தகவல் மற்றும் தொடர்பாடல் வழிமுறைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஒட்டுமொத்த அரசாங்க சேவையும் உற்பத்திப் பொருளாதார செயன்முறையின் வசதிப்படுத்துநராக இருக்க வேண்டும்.

## 4.8 வெளிநாட்டுச் செலாவணி சம்பாத்தியம் தொடர்பான சவால்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது வெளிநாட்டு ஒதுக்குகள், வெளிநாட்டுச் செலாவணி வீதத்தினை முகாமை செய்தல் அத்துடன், நாட்டின் தற்போதைய படுகடன் நெருக்கடி என்பன பற்றிக் கலந்துரையாடுவது மிகவும் முக்கியமானதென நான் கருதுகின்றேன். அரசாங்கம் என்ற வகையில், எமது வெளிநாட்டு ஒதுக்குகள் சவால்களுக்குட்படுவதனையும், அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிப் பயன்பாட்டில் சில வரையறைகளை விதிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது என்பதனையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சுற்றுலாத்துறையிலிருந்து ஏறத்தாள ஐ.அ.டொலர் 5 பில்லியன் கொண்ட வருடாந்த வருவாய்கள் கடந்த இரண்டு வருடங்களாக அல்லது இதுவரையிலும் நாட்டுக்குக் கிடைக்கவில்லை. போதுமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் நாட்டினுள் உட்செலுத்தப்படவில்லை. வெளிநாட்டு தொழில் மூலம் எமது மக்கள் பெற்றுக் கொண்ட வருமானம் வரையறுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் வருமானமீட்டுகின்ற பல வழிகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

இவ்வாறு ஏற்றுமதி வருமானம் மற்றும் இறக்குமதிச் செலவினங்களுக்கிடையில் நாட்டின் தேசிய நெருக்கடிகளைவிட பல தசாப்தங்களாக தீர்க்கப்படாதுள்ளதுடன் பொருளாதாரமும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளது. 2018 வரையான ஒரு தசாப்தத்திற்குள் சுற்றுலா வருமானம் அதிகரித்தமை, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் மூலம் எமது நாட்டு மக்கள் சம்பாதித்து வழங்கிய உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி, குறிப்பாக ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதியின் மூலம் பெற்ற வெளிநாட்டுச் செலாவணி மூலம் ஏற்றுமதி செலவினத்தினைச் செலுத்தியதுடன் மாத்திரமன்றி அபிவிருத்தியடைந்த நடுத்தரவருமான நாடொன்றாக மாற்றப்பட்டதுடன் பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதி மிகையினை ஏற்படுத்துவதற்கு எமக்கு முடியுமாகவிருந்தது.

## 4.9 அரச படுகடன் விரிவாக்கம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தொடர்ந்து ஏற்படுகின்ற அரசிறைப் பற்றாக்குறை காரணமாக எமது நாட்டின் கடன் தாங்கிக் கொள்ளமுடியாத அளவு சுமையாக அதிகரித்தது. அது தேசிய வருமானத்தில் 100 சதவீதம்வரை முதற்தடவையாக அதிகரித்தது. 1988-1989 காலப்பகுதியில் நாடு முழுவதும் பரவிக் காணப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளினாலாகும். 1998 முதல் 2004 வரை வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது மீண்டும் 100 சதவீதம் அதிகரித்தது. இதன் மூலம் தெரியவருவது என்னவெனில், எமது மொத்த தேசிய உற்பத்திக்கு அதிகமாக நாம் கடன் பெற்றுள்ளோம் என்பதாகும்.

2014 இல் மஹிந்த ராஜபக்ஷ சனாதிபதி அவர்கள் கடந்த அரசாங்கத்திடம் நாட்டை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் நாட்டின் ஒட்டு மொத்த கடன் ரூபா 7,487 பில்லியன் ஆகும். அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 72.3 சதவீதமாகக் காணப்பட்டது. தற்போதைய சனாதிபதி 2019 இன் இறுதியில் அதிகாரத்திற்கு வரும் போது அது ரூபா 13,032 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. இவ்வாறுதான் நல்லாட்சி அரசாங்கம் கடனை உருவாக்கியது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதன் காரணமாக பொது படுகடன் மீதான வட்டிச் செலவினம் வரவு செலவுத்திட்டத்தில் தனியொரு பாரிய செலவினமாக மாறியது. இதற்கு மேலதிகமாக கடன் தவணையை திருப்பிச் செலுத்துதல் வேண்டும். ஊள்நாட்டு சேமிப்பு மற்றும் வங்கிகளிலிருந்து அரசாங்கம் எடுக்கின்ற கடன் அதிகரித்துள்ளதனால் மக்களின் சேமிப்பை அவர்களின் தேவைக்குப் பெற்றுக் கொள்வது வரையறுக்கப்பட்டது. வட்டி வீதம் அதிகரித்தது. அதேபோன்று மொத்தக் கடன் தொகையில் 50 சதவீதத்திற்குக் கிட்டிய அளவு வெளிநாட்டுக் கடன்கள் ஆகும். செலாவணி வீதம் தேய்மானமடைகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் வரவு செலவின் மூலம் ரூபா 50 பில்லியன் கடனைச்

செலுத்துவதற்காக நிதியைப் பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. அதனால் செலாவணிச் சந்தை, நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகள், வட்டி மற்றும் அன்னியச் செலாவணி வீதாசாரம் என்பன ஒன்றுக்கொன்று தாக்கத்தை ஏற்படுத்தி வரவுசெலவு முகாமைத்துவமும், வங்கி மற்றும் நிதி முகாமைத்துவமும், சிக்கலாகியுள்ளது என்பது நாம் புரிந்துகொள்ள வேண்டிய பிரதான சவால் ஆகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கொவிட் தொற்றுக்கு மத்தியில் சகல வருமான வழிகளும் வரையறுக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசிறை நடவடிக்கைகளின் மீது கடும் தாக்கம் ஏற்படும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்க சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசாங்க ஊழியர்களினதும் ஓய்வூதியம் பெறுநர்களினதும் சம்பளங்களை உரிய நேரத்தில் வழங்குவதற்கும் கடன் தவணை மற்றும் வட்டி ஆகியவற்றை உரிய விதத்தில் செலுத்துவதற்கும் வருமான வழிகளை இழந்த குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் உள்ளிட்ட ஏனைய நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் பாரிய செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அதேபோன்று இக் காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் இரண்டு பில்லியன் பெறுமதியைக் கொண்ட நாட்டுக்கான பன்னாட்டு முறி இரண்டினை தீர்ப்பனவு செய்து நாட்டின் படுகடன் தீர்ப்பனவு இயலுமை பற்றிய சர்வதேச நம்பிக்கையினை நாம் உறுதி செய்துள்ளோம். எமது வங்கித் தொழில் முறைமையை நாம் பாதுகாத்தோம். சிறிய மற்றும் நடுத்தர அளவிலாள கைத்தொழில்களுக்கு அவசியமான நிவாரணத்தினை வழங்குவதற்கு ரூபா 300 பில்லியன் சலுகை வட்டி வீதத்தில் தொழிற்படு மூலதன வசதிகளை வழங்கினோம். கடன் மற்றும் குத்தகைக் கட்டணங்களை காலந்தாழ்த்தி செலுத்துவதற்கு சலுகை வழங்கியதன் மூலம் தனியார் தொழில்முயற்சியாளர்களை பாதுகாப்பதற்கு சுமார் ரூபா 700 பில்லியனை வழங்கினோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அது மாத்திரமல்லாமல், 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து 2019 ஜுலை 15 ஆம் திகதி வரை 15 மாத காலத்தில் கடந்த அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 6.9 பில்லியன் பாரிய கடன் தொகையைச் செலுத்தும் பொறுப்பும் எமது அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை இந்த உயர் சபைக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

### 4.10 வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

சுதந்திரத்தின் பின்னர் சகல அரசாங்கமும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தில் எதிர்கால நோக்கைக் கொண்டதாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை என்பது 1970/71 வரவுசெலவுத் திட்ட உரையை மேற்கொண்டு நிதி அமைச்சர் கலாநிதி என்.எம். பெரேரா அவர்கள் மிகவும் ஆழமாக விவரித்துள்ளார். அந்த வரவுசெலவுத் திட்ட உரையின் 5 முதல் 15 வரையான பக்கங்களில் செய்துள்ள விபரிப்பை இந்த உயர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர் கூறுவதைப் போன்று ஆரம்பத்திலிருந்தே வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அதனை இறக்குமதிக்காகப் பயன்படுத்தி ஒதுக்க நெருக்கடியொன்றை ஏற்படுத்திகொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் தயவைப் பெறுவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டுள்ளனர். 1961 இற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் கடன் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து இந்த நடைமுறைக்கு சகல அரசாங்கங்களும் பிரவேசித்தபடியினால் நாட்டின் குறுகிய கால சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களன்றி நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பிரவேசிப்பதற்கு எமது தலைவர்களினாலும் நிதித்துறை அதிகாரிகளினாளும் முடியவில்லை. அதிமேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்துக்கு மேலதிகமாக வேறு ஒதுக்கங்கள் பலவற்றைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கின்றது. அவற்றுள்

முதலாவது இயற்கையினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள நிலம், நீர் ஹமற்றும் எரிசக்தி மூலம் கட்டியெழுப்பக் கூடிய நீர், உணவு மற்றும் எரிசக்தி ஒதுக்கமாகும்.

### 4.11 ஏற்றுமதிகளுக்கான ஆற்றல்களை இனம்காணல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதிப்பதற்காக நாம் புதிய வழிகளைக் கண்டறிதல் அவசியமாகும். இப்பிரச்சினையினை சர்வதேச கடன்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மாத்திரம் தீர்த்துக்கொள்ள முடியாது. அதனால் நாம் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொள்வதற்காக வர்த்தகப் பண்டங்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை பின்பற்றுதல் வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

புடைவை மற்றும் ஆடை, இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் அதேபோன்று பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகள், மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகள், வாசனை திரவியங்கள், பதனிடப்பட்ட உணவு, பழங்கள் மற்றும் குடிபானங்கள், அலங்காரப் பூக்கள் மற்றும் தாவர வகைகள், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உற்பத்திகள், படகுத் தயாரிப்பு, பொறியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகள் போன்ற துறைகள் குறித்து நாம் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதை நான் நம்புகிறேன்.

### 4.12 கடன் அல்லாத வழிகளில் போதிய கவனம் செலுத்துதல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக பற்றாக் குறையைத் தீர்ப்பதற்காக சேவைத் துறையின் பங்களிப்பை பரந்த அளவில் பெற்றுக் கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம். சேவை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. விசேடமாக சுற்றுலா வியாபாரத்தை இற்றைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பத் துறையை விரிவுபடுத்துதல், வியாபார செயல்முறைக்கு புறவடிவம் கொடுப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் சார்ந்த சேவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது அதுபற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தின் போது நாம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளோம்.

### 4.13 இறக்குமதி பதிலீடுகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நாம் நீண்ட காலமாக இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழிலை மேம்படுத்துதல் சம்பந்தமாக பல அனுபவங்களை பெற்றுள்ளதொரு நாடாகும். ஒரு சில துறைகளில் நாம் வெற்றி அடைந்து இருப்பது போன்று அரச கொள்கையுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக தோல்வியடைந்த சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்தில் இறக்குமதி பதிலீடுகளாக அடையாளம் காணப்பட்ட விவசாய மற்றும் கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பரந்துபட்ட இடவசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

காலநிலை மாற்றத்திற்கான பசுமைப் பொருளாதாரம் ஒன்றுக்கு அதிமேதகு சனாதிபதி அவர்கள் முன்னெடுத்துள்ள சேதனப் பசளை கைத்தொழில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, பால், சீனி மருந்து உற்பத்தி என்பவற்றினை எமது நாட்டின் வலுவான இறக்குமதி பதிலீட்டு கைத்தொழிலாக மாற்றுதல் வேண்டும். இதன்மூலம் வெளிநாட்டுச் செலாவணியை சேமிக்கும் அதேவேளை, உள்நாட்டு வருமானத்தினை மேம்படுத்துவதற்கான உறுதியான திட்டங்கள் பற்றி எமது கவனத்தை செலுத்துதல் வேண்டும். அதன் மூலம் வெளிநாடுகளுக்கு வெளிப்பாய்ச்சப்படுகின்ற பாரிய தொகையை இந்நாட்டு

விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், அந்தத் துறைகளில் சேவையாற்றுகின்ற மக்களுக்கும் செல்லக்கூடியதாக வசதிகளை ஏற்பாடு செய்ய முடியும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அது மாத்திரமல்லாமல், புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இதன் மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். இருப்பினும் செயற்படுத்துகை மட்டத்தில் இது நாம் முகங்கொடுக்கின்ற குறிப்பிடத்தக்க சவாலாகும்.

### 4.14 வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கு வரையறைகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

வெளிநாட்டு நேரடி முதலீட்டை இந்நாட்டுக்கு கவர்ந்தீர்ப்பது பற்றிய எமது அனுபவம் மூன்று தசாப்தத்திற்கும் மேலானதாகும். இருப்பினும் அது எப்போதும் சவால் மிக்கதாகக் காணப்பட்டது. சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் எனைய உபாயத்திட்ட முதலீடுகளாக அவை இந்நாட்டுக்கு உட்பாய்ச்சப்பட்டன. இருப்பினும் நாம் எதிர் பார்த்த மட்டத்திற்கு அதனை விரிவாக்க முடியாமற் போயுள்ளது. கடந்த ஒன்றரை வருடங்களுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பில் ஓரளவு முன்னேற்றமொன்றை எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஏற்கனவே ஐ.அ.டொலர் 1,076 மில்லியன் பெறுமதியான முதலீட்டுக் கருத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இருப்பினும் முதலீடு என்றால் என்ன, விற்பனை என்றால் என்ன, அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் யாவை, என்பது குறித்து எமது சமூகத்திலுள்ள சில பிரிவினரும் அரசியல் குழுக்களும் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

### 4.15 பொதுவான சமூக மற்றும் பொருளாதார சவால்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கீழ் உழைப்பு, வேலையின்மை, வறுமை மற்றும் போசாக்கின்மை போன்ற சவால்களை எமது சமூகம் மிக நீண்டநாட்களாக எதிர்நோக்கிவருகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் இப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், இதன் விளைவுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. எனவேதான், இன்றுவரை சமுர்த்தி பயனாளர்களை நாம் பராமரித்து வருகின்றோம். இது மொத்த சனத்தொகையில் 23 சதவீதமாகும். 2021 இல் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட மொத்த சமூக நலன்புரிச் செலவினமானது மீண்டெழும் செலவினத்தில் 20 சதவீதமாகக் காணப்பட்டது. அடுத்த சில தசாப்தங்களில், அதிகரித்து வருகின்ற வயது முதிர்ந்தோர் சனத்தொகையுடன், குடிசனத்தொகைப் பரம்பலில் ஏற்படும் மாற்றங்களும் எமக்கு சவாலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.16 உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உணவுப் பாதுகாப்பானது, பாதுகாப்பான போசாக்கு நிறைந்த உணவினை எவ்வித தடங்களுமின்றி நாட்டின் பிரசைகள் அனைவருக்கும் வழங்குவதாகும். குடும்பமொன்று அதன் உறுப்பினர்கள் பட்டிணியின்றி வாழுதல் அல்லது பட்டிணி பற்றிய பயமின்றி வாழுதல் என்பதுவே உணவுப் பாதுகாப்பு என்பதாகும். கொவிட் தொற்று நோய் காரணமாக எமது நாடு முன்னெப்பொழுதும் இல்லாதவாறு உணவுப் பாதுகாப்பு தொடர்பான அக்கறை கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. ஏனெனில் உணவு பாதுகாப்பற்ற நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் எமக்கிடையில் காணப்படுகின்றமை அதிகமாகும்.

வருமானமீட்டுகின்ற மூலங்கள் கிடைக்கப்பெறாத முறைசாராத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் வாங்கல் விற்றல் செயற்பாடுகளில் முழுமையாகத் தங்கியுள்ள சமூகங்களும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றனர்.

**4.17 பொருளாதாரத்திற்கு சுமையாகவுள்ள அரச தொழில்முயற்சிகள்**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது நாட்டில் ஏறக்குறைய 300 அரச தொழில்முயற்சிகள் காணப்படுகின்றன. அத்தொழில்முயற்சிகள் பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ளன. இத்தொழில் முயற்சிகளில் அரசாங்கம் ரூபா 670 பில்லியனுக்கு அதிக முதலீட்டினைச் செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஏறக்குறைய 75 பில்லியன் அவற்றினை பராமரிப்பதற்காக செலவிடப்படுகின்றது. இந் நிறுவனங்களில் பெரும்பாலானவை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கான வருமானங்களை திருப்பிச் செலுத்துவதில்லை.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்த வகையில் எமது நாடு தற்பொழுது எதிர் நோக்குகின்ற சமூகப் பொருளாதார நிலைமைகளை தற்பொழுது விரிவாக விளக்குவதற்கு முனைகின்றேன்.

**5. கொள்கைப் பொழிப்பு**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**5.1** நாடு எதிர்கொள்கின்ற சவால்களைப் பற்றியும் அத்தகைய சவால்களை வெற்றி கொள்வதற்கு எம்மை இயலச்செய்கின்ற எமது வலிமைகள் பற்றியும் நான் குறிப்பிட்டேன். இச்சவால்களை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு நாட்டை அபிவிருத்தி செய்வதில் பிரயோகிக்கப்பட வேண்டிய சாதனங்களை தகுந்தவிதத்தில் முகாமைசெய்வதில் பின்பற்றப்படுகின்ற கொள்கைகள், வழிகாட்டல்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்ற அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பில் இந்த உயரிய சபைக்கு தெரியப்படுத்த வேண்டியது எனது பொறுப்பாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**5.2** தலைவர்கள் என்று வருகின்ற போது, தலைவர்கள் அவர்களை பின்பற்றுபவர்களைவிட முன்னோக்கி இருக்கவேண்டும் என ஒரு காலத்தில் சொல்லப்பட்டதுடன், அவர் பின்பற்றுவோருக்கு இணையாக இருக்கவேண்டும் என வேறொரு காலத்தில் சொல்லப்பட்டாலும், அவரை பின் தொடர்பவர்களுக்குப் பின்னால் இருக்க வேண்டும் என வேறு சில காலத்தில் சொல்லப்பட்டது. தலைவர் என்பவர் எப்போதும் இலக்குகளை எய்துகின்ற பொதுவான குறிக்கோளுடன் கடமைபொறுப்புடனும் தைரியத்துடனும் நேர்மையாகவும் பணியாற்ற வேண்டும். அதிமேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதியாக நியமிக்கப்பட்டதிலிருந்து எப்போதும் இக் கொள்கையினையே கடைப்பிடித்துவருகின்றார்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**5.3** வரவுசெலவுத் திட்டத்திற்கான முன்மொழிவினைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் அனைத்து குழுக்களுடனும் எல்லாக் கோணங்களிலும் ஆலோசனை பெற்றோம். வெகுசன ஊடகம் மற்றும் சமூக வலைத்தளம் என்பன ஊடாக பல்வேறு ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் நாம் செவிமடுத்தோம். அம்முன்மொழிவுகளை தற்போது நாம் நிறைவேற்றக் கூடியவையாக, நிறைவேற்றுவதற்கு கடினமானவையாக மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியவையாக வகைப்படுத்தினோம். அதற்கமைய, நாம் அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கைகளைக் கொண்ட தொடரொன்றை தொகுத்துள்ளோம். அத்தகைய

அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கைத் தொகுதியினைப் பின்பற்றுகின்றபோது குறுகிய காலத்தில் சில இடர்பாடுகள் தோன்றக் கூடியதாயினும் நடுத்தரகால மற்றும் நீண்டகால குறிக்கோள்கள் ஆற்றல்வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன என்ற ரீதியில் பின்னடைவுடனும்கூட யதார்த்தத்தினைப் புரிந்து கொள்வது எமது கூட்டான கடமையாகக் காணப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

''சுபீட்சத்தின் நோக்கு'' தேசியக் கொள்கைக் கட்டமைப்பானது 2022 வரவுசெலவுத்திட்டத்தினைத் தயாரிக்கையில் முழுமையாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதனை ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அரசாங்க செலவினத்தினை முகாமைசெய்வதற்குத் தவறியமை, அரசாங்கச் செலவினத்தை அரசியல் மயமாக்கல் மற்றும் உற்பத்தித்திறனற்ற உயர்வான அரசாங்க செலவினம் என்பன காரணமாக அரசாங்க நிதி முகாமைத்துவம் நலிவடைந்துள்ளது. அநேகமாக ஒவ்வொரு அரசாங்கமும், குறைவான அரசாங்க வருவாயினைக் கருத்திற் கொண்டு வரி வீதங்களை அதிகரித்துள்ளதுடன் பல்வேறு புதிய வரிகளை அறிமுகப்படுத்தின. வரி செலுத்துவோரின் வருமானத்தின் ஒருபாகம் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதை மாத்திரம் இது குறித்துக் காட்டுவதுடன் மொத்த, தனியார் மற்றும் அரசாங்க வருவாய் அதிகரித்துள்ளது என்பதாக அர்த்தம் தரவில்லை. இதனாலேயே, அரசாங்க வருவாயை அதிகரித்து அதனூடாக சேமிப்புகளையும் முதலீட்டினையும் அதிகரிக்கின்ற கட்டமைப்பு சார்ந்த மாற்றமொன்றினைக் கொண்டுவருகின்ற விதத்தில் தேசிய வரவுசெலவுத்திட்டக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

**5.4 ஆகையினால், செலவின முகாமைத்துவத்திற்கான பல முன்மொழிவுகளை இந்த உயரிய சபைக்கு நான் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

5.4.1 அத்தகைய முன்மொழிவுகளில் முதலாவது பாராளுமன்றத்தினால் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முழு ஆண்டுக்குமான அரசாங்க நிறுவனங்களின் செலவினம் தொடர்பில் நிதி அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த ஆணைப்பத்திரத்திற்குப் பதிலாக காலாண்டு ஆணைப்பத்திரமொன்றை வழங்குவதாகும். அதற்கமைய, பெறுகை, சம்பளங்கள் மற்றும் படிகள், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு என்பன தொடர்பில் அவர்களது திட்டங்களை நன்கு முன்கூட்டியே தயாரிப்பதற்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் வேண்டுவதன் வாயிலாக நிதியியல் ஒழுக்கத்தினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்திக்கு அமைவாக செலவுக் கட்டுப்பாடு மற்றும் பெறுகைச் செயன்முறையினை வழிநடாத்தல் என்பன அனைத்து செலவின அலகுகளினதும் நிறுவனத் தலைவர்களினாலும் வேண்டப்பட்டுள்ளன.

5.4.2 அரசிறைக் கொள்கை தொடர்பில் எனது இரண்டாவது முன்னுரிமையானது நாட்டில் அனேகமானோர் மத்தியில் சேமிப்பு கலாசாரத்தை மணதிற் பதியச்செய்வதாகும். அனைத்து பிரசைகளும் அதாவது, பணியாற்றுகின்ற சமூகம், உயர் வருமானமீட்டுவோர் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் அனைவரும் தமது இயலுமைக்கேற்ப சேமிப்பதனையும் இதன் மூலம் முதலீட்டு இயலளவொன்றினை உருவாக்குவதனையும் இயலச்செய்கின்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பதை இது குறிக்கின்றது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மீண்டெழும் செலவினத்தை சமாளிப்பதற்குப் பதிலாக மூலதனச் செலவின ஆதரவின் வாயிலாக அரசாங்கம், தனியார் நிர்மாண நடவடிக்கைகளை பொறுப்பேற்று ஏனைய சேவைகளை வழங்குவதன் மூலம் வருமானமீட்டுவதற்கு அவற்றுக்கு இடமளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.3 தேசிய பொருளாதாரத்திற்கு சுமையைச் சேர்க்கின்ற தொடர்ச்சியாக நட்டமேற்படுகின்ற குறைவாகத் தொழிற்படும் அரசாங்க தொழில்முயற்சிகளை மையப்படுத்தி தற்கால காரணிகளின் அடிப்படையில் அரசாங்க தொழில்முயற்சிகளின் தொழில் கவனத்தினையும் நிதியியல் ஒழுக்கத்தினையும் அதிகரிக்கும் பொருட்டு குறிப்பான கால வரையறையினுள் பல்துறை ஆலோசனைக்குழுவொன்றின் கீழ் உபாயகரமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.4 இத்தொழில்முயற்சிகளில் அனேகமானவை அவற்றின் சொத்துக்களை குறைவாகவே பயன்படுத்துகின்றன. அவற்றின் சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு தமது செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் எனது சக அமைச்சர்கள் வழிகாட்டல்களை வழங்குவார்களென எதிர்பார்க்கின்றேன். தற்போது நிர்மாணம் முன்னெடுக்கப்படுகின்ற அலுவலகக் கட்டடங்கள் தவிர புதிய அலுவலக வளாகங்களை நிர்மாணிப்பதை இரண்டு வருடங்களுக்கு இடைநிறுத்துவதற்கு முன்மொழிகின்றேன். பொதுமக்களுக்கு நேரடியாக நன்மையளிக்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தை பயன்படுத்துகின்ற அதேவேளை ஏற்கனவே காணப்படுகின்ற அலுவலக வசதிகளை உற்பத்தித்திறன் மிக்கவாறு பயன்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து அமைச்சுக்களாலும் 2022 ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு மதிப்பீடுகளுக்கான கோரிக்கைகளை தடுக்கின்ற ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான திருத்தங்களை உள்ளடக்குவதற்கும் நான் மேலும் முன்மொழிகின்றேன்.

5.4.5 **தேசிய சேமிப்புகளை ஊக்குவிக்கின்ற** போது அரசாங்கத் துறையும் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இது தொடர்பில், மீண்டெழும் செலவினத்தை குறைப்பதற்கும் வேண்டப்பட்டுள்ளது. எனவே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவை மாதமொன்றுக்கு 5 லீற்றர்களினால் குறைப்பதற்கும், அரசாங்க நிறுவனங்களின் தொலைபேசி செலவினங்களை 25 சதவீதத்தினால் குறைப்பதற்கும் சூரிய சக்தி பலகங்களினூடாக மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு மின்சாரத்திற்கான நிதி ஏற்பாடுகளை 10 சதவீதத்தினால் குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். இச்செயற்பாடுகளுக்கு சமாந்தரமாக, நகர சேவைநிலையங்களில் கடமைபுரிகின்றவர்களை கிராமிய பிரதேசங்களுக்கு அனுப்புவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

5.4.6 பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 5 வருடங்களுக்கு தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவது தற்பொழுது போதுமானதாகவுள்ளது. குறித்த **ஐந்து வருடங்களை 10 வருடங்களாக நீடிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.** இம் முன்மொழிவானது திரட்டு நிதியத்தின் கீழ் சம்பளங்கள் கொடுப்பனவு செய்யப்படுகின்ற சனாதிபதி உள்ளடங்களாக அனைத்துப் பதவிகளுக்கும் செல்லுபடியானதாகும். இம் முன்மொழிவினை செயல் வடிவம் கொடுப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டிய தேவையுள்ளது.

5.4.7 எமது நாட்டின் **அரசாங்க சேவையானது** ஒட்டுமொத்த பொருளாதாரத்தினையும் உள்ளடக்கியுள்ளது. அரசாங்க சேவையின் வினைத்திறனும் தனியார் துறையின் வினைத்திறனை பாதிக்கின்றது. பொதுமக்கள் எளிதாக அணுகக்கூடிய விதத்தில் அரசாங்க சேவையினை வினைத்திறன்மிக்க சேவையொன்றாக மாறுதலடையச் செய்வதன் முக்கியத்துவத்தினை நாம் உறுதியாக அங்கீகரித்துள்ளோம். அனைத்து அரசாங்க நிறுவனங்களும் சிநேகமிக்கவையாகவும் சேவையினைப் பெறுபவருக்கு முன்னுரிமை அளிப்பவையாகவும் இருக்கவேண்டும். எனவே, ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்திற்குமென அரசாங்க சேவை வாக்குப்பத்திரமொன்றினைத்

தயாரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் பொதுமக்களின் தகவலுக்காக அது வளாகத்தில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

5.4.8 சேவை பெறுநர்களின் திருப்தியினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவைக்கான மதிப்பீட்டு முறைமையொன்றினையும் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளையும் அறிமுகப்படுத்துவதற்கும் அதனூடாக அரசாங்க சேவையின் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் உகந்த மட்டமொன்றுக்கு அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

5.4.9 முரண்பாடுகளை இல்லாதொழித்து, அரசாங்க சேவையின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பில் திருத்தங்களைக் கொண்டுவருவதும் சம்பள கட்டமைப்புகளைத் தாபிப்பதும் தேசிய சம்பள ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்பதை நான் மீளவும் வலியுறுத்துகின்றேன். அத்தகைய நிறுவனங்கள் பொதுவான கட்டமைப்பிலிருந்து விலகும் போது சம்பளக் கட்டமைப்பினுள் வேண்டாத சம்பள அளவுத்திட்டங்களும் முறைகேடுகளும் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதனால், அடுத்த நிதியாண்டு தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அரசாங்க சேவை சம்பளங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகளை அகற்றுவதன் மூலம் அரசாங்க சேவைக்கான **புதிய சம்பளக் கட்டமைப்பு** ஒன்றினை நிறுவுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் தவிர, அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் மதிப்பீட்டு அறிக்கைகளின் தேவையின்றி சம்பள ஏற்றத்திகதியன்று சம்பள ஏற்றத்தினை வழங்குவதன் மூலம் சம்பள நிர்வாக நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படவுள்ளன.

5.4.10 நடுத்தரகால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பு 2022–2024 இற்குள் இலங்கை எதிர்பார்க்கின்ற அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலட்சியங்கள் மற்றும் இலக்குகளின் முன்னேற்றத்தினைக் கண்காணிகின்ற அதேவேளை, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் அத்துடன் அவ்விடயப்பரப்புகள் தொடர்பிலான விடயங்களில் காணப்படும் முன்னுரிமைகள் என்பவற்றுக்கு அமைவாக எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தின் அடைவுகளை பின்தொடர **ஒருங்கிணைக்கப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையிலான முகாமைத்துவ முறைமை** ஒன்றினைத் தாபிப்பதற்கும் அமைச்சுக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தற்போது தாபிக்கப்பட்டுள்ள ஐந்து (5) தேசிய ஒருங்கிணைப்பு உப குழுக்களூடாக இம்முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.11 பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்க்கை அதிகரித்துள்ளது. அதேவேளை, வயதுமுதிர்ந்த சனத்தொகையும் அதிகரிப்பும் இடம்பெற்றுவருகின்றது. இதன் விளைவாக வயது முதிர்ந்தோர் முன்னரைவிட மிக நீண்டகாலம் செயலூக்கமிக்க சேவையில் தொடர்ந்திருப்பதற்கான இயலுமையைக் கொண்டுள்ளனர். அவர்களின் முயற்சியினை உற்பத்தித்திறன் மிக்கவாறு உபயோகப்படுத்துவது மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். எனவே, தொழிற்படையினை வலிமைப்படுத்தும் பொருட்டு **அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் வயதினை** 65 வருடங்களாக நீடிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.12 நடைமுறைசார்ந்த சமூக நிலைமைகளைக் கருத்திற்கொண்டு *சமுர்த்தி* இயக்கத்தினை நவீனமயப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன். சமுர்த்தி இயக்கத்தினை வெறுமனே வறுமை நிவாரணத்தின்மீது கவனம் செலுத்துமொன்றாக மட்டுப்படுத்தாது, பொருளாதார மீட்சியினையும் உணவுப் பாதுகாப்பினையும் உறுதிசெய்கின்ற அதேவேளை, நவீன போக்குகளுடன் ஒத்துசேர்ந்ததாக இருக்கின்ற கிராமிய அபிவிருத்தி இயக்கமொன்றாக அதனை மாற்றியமைப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். இது தொடர்பிலான பொறுப்பினை இயக்கத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் ஒப்படைக்கின்றேன். சமூக நலன்நோம்புகைக்கும் உதவி

நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான பயன்பெறுநர்களை தர்க்கரீதியான மற்றும் விஞ்ஞான பொறிமுறையொன்றின்கீழ் தெரிவுசெய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

5.4.13 கிராமிய சமூகத்தின் நிதியியற் தேவைகளை நிறைவேற்றுகின்ற **அருகாமையிலுள்ள நிதியியல் சேவை வழங்குநராகக் காணப்படுகின்ற** ***சமுர்த்தி*** வங்கித் தொழில் இயக்கத்தினை மீள்கட்டமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கிகளை நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கான நிதியியல் வசதிகள் மற்றும் வியாபார ஆலோசனை என்பன உள்ளடங்களாக அனைத்து சேவைகளையும் வசதிகளையும் வழங்குகின்ற ஒரு இடத்திலான மையங்களாக மாற்றுவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

5.4.14 கூட்டுறவு மற்றும் கிராமிய வங்கிகளின் வைப்பாளர்களுக்கு நேர்ந்ததாகக் கூறப்படுகின்ற மோசடிகள் பற்றி முறையான விசாரணைகளை நடாத்துவதற்கும் அத்தகைய மோசடிகள் இடம்பெற்றிருப்பின் நிதியியல் சேதங்களுக்கு இழப்பீடளிப்பதன் மூலம் அத்தகைய வைப்பாளர்களுக்கு உதவுவதற்கும் அதேபோன்று **கூட்டுறவு அமைப்பினை** மேலும் வலிமைப்படுத்துவதற்கும் தேவையான மீள்கட்டமைத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலை விரைவாகத் தொடங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.15 **அரசுக்கு சொந்தமான ஊடக நிறுவனங்கள்** தொழில் மீது கவனம் செலுத்தல், மற்றும் நிதியியல் ஒழுக்கம் என்பவற்றை உறுதியான அடிப்படையில் மீளாய்வுசெய்தல் அத்துடன் குறுகிய காலப்பகுதியொன்றினுள் உபாயத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வேண்ப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்தல் ஆகிய பொறுப்புகள் அத்தகைய நிறுவனங்களின் முகாமைத்துவத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

5.4.16 புதிய காப்புறுதித்திட்டமொன்றின் கீழ் **இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்** வியாபார நுழைவினை விரிவுபடுத்துவதன் மூலம், இன்றுவரை காப்புறுதித் துறையினால் புறக்கணிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு பெறுவெழியினை வழங்கி போட்டிச் சந்தையின் கீழ் காப்புறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொருவரையும் இயலச்செய்வதற்கு காப்புறுதித் துறையினை மேலும் ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் மற்றும் ஆதனக் காப்புறுதியை ஒன்றுசேர்க்கும் பொருட்டு தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

5.4.17 **இலங்கைச் சுங்கத்தினால்** தற்பொழுது பயன்படுத்தப்பட்டுவருகின்ற எச்எஸ் குறியீட்டு முறைமையினை இற்றைப்படுத்துவதன் மூலம் அறவிடப்படுகின்ற சுங்கத் தீர்வைகளில் ஏற்படுகின்ற அல்லது ஏற்படக்கூடிய குறைபாடுகளை தவிர்ப்பதற்கும் இதனூடாக இலங்கைச் சுங்கத்திற்கான சுங்கத் தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படும் உலகளாவிய முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, இலங்கைச் சுங்கத்துடன் பணியாற்றுகின்ற அனைத்து நிறுவனங்களையும் முறைமையொன்றினால் ஒருங்கிணைப்பதன் மூலம் இறக்குமதி – ஏற்றுமதிச் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்கு தனிசாளர பொறிமுறையொன்று நிறுவப்படும். ஏற்றுமதியாளர்களை தரப்படுத்துவதற்கும் உயர் தரத்தினைப் பெற்ற ஏற்றுமதியாளர்களுக்கு இலவச சுங்க வசதிகளை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டாளரினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற 1766 எச்எஸ் குறியீடுகள் காணப்படுகின்றன. இறக்குமதியாளர்கள் பல்வேறு நிறுவனங்களிலிருந்து தேவையான அனுமதியினைப் பெறவேண்டும் என்றவகையில் அதிகளவான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதேவேளை, பெரும் எண்ணிக்கையிலான எச்எஸ் குறியீடுகள் செஸ் வரிக்குட்படுவதனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் செலவினம் அதிகரித்துள்ளது. மதுபானம், சிகரட்டுகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விவசாய உற்பத்திகள்

தொடர்பான எச்எஸ் குறியீடுகள் நீக்கப்படுவதுடன், சுங்கத் தீர்வை மற்றும் செஸ் வரி வீதம் மற்றும் இறக்குமதியாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் பெறுதல் செயன்முறையும் இலகுபடுத்தப்படுத்தப்படும். தரப்படுத்தல் நிறுவனம் மற்றும் தொற்றுத் தடைக்காப்பு அதிகாரசபைகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருப்பின் அத்தகைய இறக்குமதியாளர்களுக்கு சுங்க அனுமதி வழங்கப்படும்.

5.4.18 வரி செலுத்துநர்களின் 20 சதவீதம் கொண்ட வரி சேகரிப்பினை முகாமை செய்கின்ற ஆயினும் **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால்** ஈட்டப்படுகின்ற 80 சதவீத வருவாய்க்கு வகைகூறுகின்ற பாரிய வரி செலுத்துநர் அலகுகளின் ஒன்றுதிரட்டிய நிர்வாகத்தினூடாக அரசாங்கத்தின் வரி சேகரித்தலினை வலுப்படுத்துவதற்கும், அதனூடாக அத்தகைய வரி செலுத்துநர்களிடமிருந்து கிடைக்கப்பெறவேண்டிய வரிகளை முறையாக சேகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2013 இல் முதன்முயற்சியெடுக்கப்பட்டு 2018 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) கருத்திட்டம் பல்வேறு காரணங்களினால் முழுமையாக செயற்படுத்தப்பட முடியாமற் போனது. கொவிட் - 19 காரணமாக கடந்த காலங்களில் தாமதமடைந்த கருமங்களுக்கு விரைவாக கவனம் செலுத்துவதன் மூலம் முறைமையினை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணையவழி வரிக்கொடுப்பனவு தளத்தினைப் பயன்படுத்தி லங்கா கிளியருடன் (Lanka Clear) அனைத்து வங்கிகளையும் நிதி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தலானது வரி நிர்வாகத்தின் அடிப்படை கூறொன்றாக அமைந்திருக்க வேண்டும். டிஜிட்டல் அடையாள இலக்கங்களின் பயன்பாடு மற்றும் வேறு சட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் வரிச் சட்டத்திற்கான திருத்தங்களைத் துரிதமாக அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட எளிமைப்படுத்தப்பட்ட வரிமுறைமையின் கீழ், வரிகளைச் செலுத்துவதற்கு வேண்டப்பட்ட ஆட்களும் கம்பனிகளும் வரிகளைச் செலுத்த வேண்டும். அவர்கள் எச்செயன்முறையின் கீழ் வரி செலுத்துகின்றார்களோ அச்செயன்முறை மேலும் எளிமைப்படுத்தப்பட்டு வருவதுடன் தமது உயர்வான வருமானங்களை குறைத்துக் காட்டுவதிலிருந்தும் பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வரிக் கொடுப்பனவுகளைப் பிற்போடுவதிலிருந்தும் அவர்கள் தவிர்ந்திருத்தல் வேண்டும். தனிப்பட்ட வருமான வரி செலுத்தப்படுகின்றமை தொடர்பில் வரி செலுத்துநர்கள் ஒரு வருமான மூலத்தை மாத்திரம் கொண்டிருப்பார்களாயின் அது வங்கிகளுக்கு தெரியப்படுத்தப்படலாம் என்பதுடன் வரிகள் மாதாந்த அடிப்படையில் செலுத்தப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

வரி இணங்குவித்தலுக்கும் வரி செலுத்துநரின் நம்பிக்கைக்கும் உத்தரவாதமளிக்கின்ற விதத்தில் முக்கிய நேரடியற்ற வரிகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிர்வாகத்தினை வலுப்படுத்துவதற்கான தேவை காணப்படுகின்றது.

வரி நிலுவையாக இருந்து சேகரிக்கப்படாத வரி வருமானம் ரூபா 200 பில்லியனுக்குமேல் என்பதை திறைசேரி அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இது மொத்த தேசிய உற்பத்தியில் ஏறத்தாழ 1.5 சதவீதமாகும். பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி, செலுத்தவேண்டிய வரியைச் செலத்துவதை வரிசெலுத்துநர்கள் தவிர்க்கின்றனர். மேலும், வரி ஏய்ப்பாளர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரி மதிப்பீட்டு அறிவித்தல் அனுப்பப்படுகின்ற போதிலும் திணைக்களத்திற்கு குறித்த தண்டப்பணமொன்றினைச் செலுத்துவதன் மூலம் செலுத்தவேண்டிய வரிக் கொடுப்பனவு தவிர்க்கப்படலாம் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இந்நடைமுறைகளை மாற்றும் பொருட்டு

வரி நிர்வாகத்திற்கு தொழில்நுட்ப செயன்முறைகளை பிரயோகிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை தாபிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

5.4.19 2021 வரவுசெலவுத்தினால் முன்மொழியப்பட்டவாறு, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியினை அமுல்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். 2022 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சட்டத்தினால் உள்ளடக்கப்படுகின்ற அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளையும் உள்ளடக்குவதற்கு இதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே வரையப்பட்டுள்ளன.

5.4.20 செல்லிட தொலைபேசிகளினதும் இணையத்தள சமிக்ஞைகளின் போதாமையின் தீவிரம் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் நடைமுறை ரீதியாக உணரப்பட்டது. முழு நாட்டுக்கும் செயற்பரப்பினை விஸ்தரிப்பதற்கும் **நாட்டிலுள்ள அனைத்து 10,155 பாடசாலைகளுக்கும்** பைபர் ஒப்டிக் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அதிவேக அகலப்பட்டை இணைய இணைப்புகளை வழங்குவதற்கும் **தொலைத்தொடர்பு வலையமைப்பினை** நிறுவுவதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.21 முச்சக்கரவண்டிச் சேவையானது நாடுபூராகவும் அதிகளவு பரவியுள்ள போதிலும், இச் சேவையினை ஒருங்குமுறைப்படுத்துவதற்கு இதுவரையிலும் பொறிமுறையொன்று காணப்படவில்லை. பாரியளவில் அது விரிவடைதல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சனைகள் காரணமாக இச்சேவையினை ஒழுங்குபடுத்துவதற்கான தேவை தோற்றம்பெற்றுள்ளது. இந்நோக்கில், **முச்சக்கரவண்டி ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையொன்றினை** தாபிப்பதற்கும் அதிகாரசபையினூடாக முச்சக்கரவண்டிக் கட்டணங்கள் மற்றும் சேவையினைத் தரப்படுத்தல் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

5.4.22 **அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள்** மூலம் வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல் நிதியங்களை ஒதுக்கீடு செய்தல் அத்துடன் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் பால் மற்றும் இன ரீதியான மற்றும் வேறு கலாசார ரீதியான வேறுபாடுகள் அத்துடன் வயதுக்குழு என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என நாம் நம்புகின்றோம். தொடர்புடைய அமைச்சுடனான இணைப்புடன் தொடர்புடைய கண்காணித்தல் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நான் முன்மொழிகின்றேன்.

5.4.23 **சனத்**தொகை மதிப்பீடுகளின் பிரகாரம் துரிதமாக வயதடைகின்ற சனத்தொகையினைப் பாதுகாப்பதற்காக தணித்துவமான **சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கான** தேவை காணப்படுகின்றது. இந்நோக்கில், தற்போது ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்ளாத சிரேஷ்ட பிரசைகளுக்கென பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றை நிறுவுவதற்கு முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக இயைபுடைய சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகளை தாபிக்கின்ற பொறுப்பினை நான் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கின்றேன்.

5.4.24 இலங்கையில் கணிசமான எண்ணிக்கையான **மாற்றுத் திறனாளிகள் காணப்படுகின்றன.** அவர்களும் சமவாய்ப்புகளையும், சமமான சலுகைகளையும் சமமான பொறுப்புகளையும் பெற்றிருக்க வேண்டும். ஆகையினால், அனைத்து பிரசைகளையும் சமத்துவமாக நடத்துதல் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரைக்கு அமைவாக **மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மீதான சட்டத்தினை** அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். அவர்களது தொழில்முயற்சிக்கும் திறன் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்குவதற்கும் நான் மேலும் முன்மொழிகின்றேன்.

5.4.25 **பிள்ளை மற்றும் உளநலம்** தொடர்பில் தற்போது நிலவுகின்ற அடிப்படைப் பிரச்சனைகளை இனங்காண்பதற்கும் அப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குமான சீரான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.26 சேவைப் பொருளாதாரத்தில் கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புக்களை அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துகின்ற அதேவேளை, உற்பத்திப் பொருளாதாரத்தின் மீது அதிக கவனத்தை இடம்பெறச்செய்வதற்கு இலங்கை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இந்நாட்டின் படித்த இளம் சந்ததியினர் தொழில் தேடிச்செல்கின்ற மனப்பாங்கிலிருந்து விடுபட்டு தொழில்முயற்சியாளர்களாகவும் தொழில் வழங்குநர்களாகவும் மாற்றம்பெறுவதற்கு பாடுபடுகின்ற போக்கினை நாம் உருவாக்க வேண்டியுள்ளது. அதற்கமைவாக, புதிய தொழில் முன்னெடுப்புகளுக்கு தூண்டுதலை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, 2022 ஆம் ஆண்டிலிருந்து வியாபாரப் பதிவு கட்டணத்தை அறவிடாதிருப்பதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.27 முதலீட்டுச் சபை மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றில் புதிய வியாபாரப் பதிவிற்காக தற்போது காணப்படுகின்ற சிக்கலான முறைமையை இலகுபடுத்துவதற்கும் அதற்காக பல்வேறு நிறுவனங்களால் அறவிடுகின்ற கட்டணங்களை ஒன்றிணைப்பதற்கும் நிதிச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்படும்.

5.4.28 **உற்பத்திப் பொருளாதாரத்தினை** ஊக்குவிக்கும் பொருட்டு பழங்கள், மரக்கறி வகைகள், மீன் அடிப்படையிலான உற்பத்திகள், திரவப் பால் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பயிர்ச் செய்கையிலுள்ள பிரச்சினைகள், தேவைப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.4.29 மலர்கள் மற்றும் இலைவகைகள் பயிர்ச்செய்கைத் துறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங் கண்டு மலர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான அறிவை வழங்குவதற்கும், ஊக்குவிப்பதற்கும், ஏற்றுமதிச் சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்மொழிகின்றேன். இப்பணிக்காக தலைமைவகிப்பதற்கும் பொறுப்பிணை சுற்றுலாத்துறை அமைச்சின்கீழ் காணப்படுகின்ற தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்திடம் ஒப்படைக்கின்றேன்.

5.4.30 தற்போது அரசாங்கம் **மருந்துப் பொருட்கள் உற்பத்திக்காக** எடுத்துள்ள வழிமுறைகளை தொடர்ந்தும் மேம்படுத்தி இலங்கையில் சர்வதேச அங்கீகாரத்தைக் கொண்ட நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சர்வதேச சந்தைகளை இலக்காகக் கொண்ட அதிகூடிய தரத்தைக்கொண்ட மருந்து வகைகளை இலங்கையில் தயாரிப்பதற்காக தனியார்த் துறைக்குத் தேவையான வசதிகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கு முன்மொழிகின்றேன். மருந்துகளின் விலையை நிலையாகப் பேணுவதற்குப் பொருத்தமான விலைப் பொறிமுறையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள சகல தரப்பினர்களையும் உள்ளடக்கிய குழுவின் ஆலோசனைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.31 ஏற்றுமதியையும் உள்நாட்டுத் தேவைகளையும் நோக்காகக் கொண்ட கருத்திட்டமாக **ஆடைக் கைத்தொழிலுக்குத்** தேவையான மூலப் பொருட்களை உற்பத்திசெய்து ஆடை உற்பத்திகளை ஊக்குவிப்பதனூடாக சர்வதேச சந்தையில் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு முன்மொழிகின்றேன். அதேபோன்று உள்நாட்டுக் கைத்தறி பொருட்கள் உற்பத்தி மற்றும் பத்திக் உற்பத்திக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு 2025 ஆம் ஆண்டளவில் ஐ.அ. டொலர் 1 பில்லியன் வருடாந்த வருமானத்தை ஈட்டுவதற்கு தேவையான துரித நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.32 இரத்தினக்கல் மற்றும் இயற்கை கனிய வளங்களுக்கு உலகச் சந்தையில் காணப்படுகின்ற இலங்கையின் பங்கை அதிகரிப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள வழிவகைகளைத் தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். உலகச் சந்தையில் இரத்தினக்கற்களைக் கொள்வனவு செய்வதற்கான முக்கிய மையமாக இலங்கையை மாற்றுவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.33 எமது நாடு உலகத்தில் இறப்பர் பொருட்கள் தொடர்பான உற்பத்திகளில் சிறந்த தரத்தைக் கொண்ட ஒரு நாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கும், உள்நாட்டு இறப்பரை மூலப்பொருளாக ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக இறப்பர் சார்ந்த முடிப்புப் பொருள் உற்பத்திக்கான முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் முன்மொழிகிறேன்.

5.4.34 **மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்** உற்பத்திற்கு போது தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குள்ள தடைகளை நீக்குவதற்கும், சர்வதேச சந்தையில் இலக்குகளை வெற்றி கொள்வதற்கும் தனியார் துறையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்தி, கரியமில வாயுவை உமிழும் எரிபொருள் எரிவதையும் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலையும் குறைத்து, மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்குத் தேவையான துணைப் பாகங்களையும் கருவிகளையும் உள்நாட்டில் உற்பத்திசெய்வதற்கு முன்மொழிகிறேன்.

5.4.35 ஆரோக்கியச் சுற்றுலா மையமாக இலங்கையை அபிவிருத்திசெய்வதற்கு தேவையான பின்புலத்தை துரிதமாக உருவாக்கி, ஐ.அ. டொலர் 700 பில்லியன் பெறுமதியான உலகளாவிய ஆரோக்கியச் சுற்றுலாத்துறையுடன் எமது நாட்டையும் இணைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோன்று, சுற்றுலாத்துறை நன்மைகளை பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்வதற்காக கண்காட்சி, மாநாடுகள் போன்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா நிகழ்வுகளையும் அடைவிட சுற்றுலா நடவடிக்கை மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு வீடுகள் சார்ந்த தங்குமிட வசதிகள் போன்ற சுற்றுலா மாதிரிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5.4.36 ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களை புதிதாக ஏற்படுத்துவதற்காகவும், பாரம்பரிய சுதேச மருத்துவத்தையும் இயற்கை சிகிச்சை முறையையும் ஊக்குவிப்பதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்மொழிகிறேன்.

5.4.37 நிலைபேறான அபிவிருத்தி கொள்கைகளின் ஊடாக பொதுமக்களின் சுகாதார மற்றும் போசாக்கினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு, சேதனப் பசளை உற்பத்தியின் இயலளவை அதிகரிப்பதற்கும், தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கி இலக்கிடப்பட்ட வேளாண்மைகளுக்கு / பயிர்களுக்கு விசேட பசளை மாதிரிகளை தயாரிப்பதற்கும் தேவையான கருத்திட்டங்களை கிராமசேவகர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகிறேன்.

5.4.38 ஆராய்ச்சி ரீதியான கட்டங்களைக் கொண்ட முறையான வேலைத்திட்டத்தினூடாக விவசாய உற்பத்திகளை பல்வகைப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல் ஆகியவற்றினூடாக வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகின்ற வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகிறேன்.

5.4.39 பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் விசேட அடிப்படையில் பயிரிடப்படாத காணிகளை வழங்கி புதிய விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கும் உயர் தொழில்நுட்ப விவசாய பூங்காக்களை ஏற்படுத்தி விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறையில் பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவை விரிவாக்கம்செய்வதற்கு முன்மொழிகிறேன்.

5.4.40 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் அதேபோன்று பொது மக்களுக்கும் சொந்தமான காணிகளைப் பயன்படுத்தல் மற்றும் தனியார் காணிகள் அத்துடன் கட்டடங்களினதும் வேறு சொத்துக்களினதும் உயர்ந்தபட்ச பயன்பாடு தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நான் மேலும் முன் மொழிகின்றேன்.

5.4.41 எமது அரசாங்கமானது எப்போதும் விவசாயிகளை பாதுகாப்பதற்கு அர்ப்பணித்துள்ளது. ஆனாலும் அதற்கான தெளிவான சட்டம் இதுவரை வகுக்கப்படவில்லை. விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கின்ற விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலைகளை பெற்றுத் தருகின்ற, விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற, விவசாய இடர்நேர்வை முகாமைசெய்கின்ற விவசாய, பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற தேசிய வேலைத்திட்டமொன்று இருக்க வேண்டும்.

இதுதொடர்பில், மண் மற்றும் நீர் வளங்களின் பாதுகாப்பு, வனசீவராசிகளின் சேத முகாமைத்துவம் பற்றிக் கவனம் செலுத்தி, எமது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. மரபணுப் பொறியியல் ரீதியான விவசாய உற்பத்திகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற அதேவேளை அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய சேதங்களை தவிர்ப்பதற்கும் மூலோபாயத் திட்டமொன்று காணப்பட வேண்டும்.

ஆதலால், எமது விவசாயிகளின் பாரம்பரிய அறிவை பாதுகாக்கின்ற, அவர்களின் காணி உரிமை மற்றும் பகிரப்பட்ட நீர் வளங்களுக்கான உரிமையை பாதுகாக்கின்ற, விவசாயம் தொடர்பில் மேற்கொள்கின்ற செயல்முறைக்கு விவசாயிகளின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துகின்ற **பசுமை விவசாய அபிவிருத்தி சட்டமொன்றைத்** தயாரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

5.4.42 இலங்கை ஆசியாவின் மையத்தில் அமைந்துள்ளது. கிழக்காசியாவிலிருந்து மேற்காசியாவினை இணைக்கின்ற பாதை இலங்கைக்கு மிக நெருக்கமாக அமைந்துள்ளது. இது 2010 ஆம் ஆண்டில் ''மஹிந்த சிந்தனை'' எதிர்கால நோக்கு கொள்கை பிரகடனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மையங்களின் கீழ் முதற்தடவையாக இனங்காணப்பட்டது. எமது எதிர்கால உலகளாவிய பொருளாதார செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் நிலையில் காணப்படுகின்றன.

இந்தவகையில், இலங்கையினை ஆசியாவின் மையமாக மாற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**துறைமுக மையம்**

5.4.42.1 கிழக்காசியாவிலிருந்து மேற்காசியாவை இணைக்கும் கப்பற் பாதையில் இலங்கையின் அமைவிடத்தினை கருத்திற்கொண்டு குதப்படுத்தல், உணவு மற்றும் வழங்கல்கள் என்பவற்றுக்கான மையமாக மாத்திரமின்றி மாலுமிகளை மாற்றுவதற்கான மத்திய நிலையமாகவும் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக நாட்டில் கப்பற் திருத்தத்தொழில்களை மேற்கொள்ளவும் முடியும்.

கொழும்புத் துறைமுகம் தெற்காசியாவில் நுழைவுத் துறைமுக வர்த்தகத்திற்கான மையமாக ஏற்கனவே காணப்படுகின்றது. கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு மற்றும் மேற்கு முனையங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதுடன் நுழைவுத்துறைமுக வர்த்தகம் விரிவாக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய கொழும்புத் துறைமுகத்தினை நுழைவுத் துறைமுக மையமாக அபிவிருத்தி செய்வதற்கும் திருகோணமலைத் துறைமுகத்தை கைத்தொழில் துறைமுகமாகவும், காலி துறைமுகத்தை சுற்றுலாத் துறைமுகமாகவும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை சேவைத் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

துறைமுகங்களின் ஏற்கனவே அபிவிருத்திசெய்யப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளுடன் இணைந்து இலங்கையின் உபாயரீதியான அமைவிடத்தினைக் கவனத்தில் கொள்ளும்போது, இலங்கையை சர்வதேச சுதந்திர துறைமுகமாக தாபிப்பதற்கான சகல வாய்ப்புகளும் காணப்படுகின்றன. அதற்கமைவாக, புதிய நிதிச் சட்டத்தின் கீழ் சுதந்திர துறைமுகம் ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன். மேலும் கப்பல்களை பதிவுசெய்வது தொடர்பில் தற்போது காணப்படுகின்ற கடுமையான விதிகளை இலகுபடுத்தி, திட்டங்களை இலகுபடுத்தி, இந்நோக்கத்திற்காக கவனம் செலுத்துவதை வசதிப்படுத்தி அதிகரிப்பதற்கும் முன்மொழிவதுடன் அதன்மூலம் சர்வதேச அரங்கில் பௌதீக ரீதியில் கடல்சார் கேந்திரமையமாக இலங்கையை மாற்றுவதற்கு நான் முன்மொழிகிறேன்.

**ஆகாய மையம்**

5.4.42.2 டுபாய் மற்றும் சிங்கப்பூர் என்பன ஆசியாவின் ஆகாய மையாமாக இருந்தபோதிலும் அவற்றின் அமைவிடம் நீண்ட விமானங்களைப் பொறுத்தவரை பல பிரச்சனைகளை கொண்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கையின் அமைவிடம் மையப் புள்ளியில் இருப்பதனால் அவ்வாறான நீண்ட விமானங்கள் மிக இலகுவாக வந்து செல்ல முடியுமாக உள்ளது. அதேவேளை, உலகத்தில் இரண்டாவது பெரிய சனத்தொகையைக் கொண்ட இந்தியாவுக்கான மையமாகவும் இலங்கை காணப்படுகிறது. மில்லியன் கணக்கான இந்தியர்கள் வாழுகின்ற ஆபிரிக்காவிற்கான மிகக் குறுகிய பாதை இந்தியாவிலிருந்து இலங்கையூடாக அமைந்துள்ளது.

தற்பொழுது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது ஓடு பாதை நிர்மாணிக்கப்பட்டுவரும் அதேவேளை சேவைகளின் ஏற்பாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. அதேநேரம் மத்தளை விமான நிலையம் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதுடன் பொருட் போக்குவரத்துக்கும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. அதற்கு அண்மையில் வைத்தியசாலை மற்றும் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கும் உதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**சக்தி மையம்**

5.4.42.3 தனது கடற்கரையில் ஒரு சொட்டு எண்ணெய்யாவது சிந்தாமல் சிங்கப்பூர் உலகத்தில் குதப்படுத்தல் நடவடிக்கைகளில் 25 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. சிங்கப்பூர் மசகு எண்ணெயினை இறக்குமதி செய்து பெற்றோல், டீசல், குதப்படுத்தல் எண்ணெய் என்பவற்றுடன் ஏற்றுமதிக்கான பிட்டுமென், பிளாஸ்திரிக்கு மற்றும் நைலோன் ஆகிய துணை உற்பத்திப் பொருட்களையும் தயாரிக்கின்றது.

இலங்கையின் உபாயரீதியான அமைவிடம் மசகு எண்ணெய் இறக்குமதி செய்து பெற்றோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஆசியாவின் சக்தி மையமாக மாற்றுவதற்கான ஆற்றல்கள் காணப்படுகின்றன. இப்பின்னனியில் 8 மில்லியன் பீப்பாய் எண்ணெயினை களஞ்சியப்படுத்தக்கூடிய திருகோணமலை எண்ணெய்தாங்கி பண்ணை பயன்படுத்தப் படாதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

ஏற்றுமதிகள் மீது கவனம் செலுத்தக்கூடிய இரண்டு புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலையில் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை இலங்கையின் சக்தி தேவையினை காற்று, சமுத்திர அலை மற்றும் சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கக்கூடிய மூலங்களிலிருந்து மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்கான ஆற்றலினையும் கொண்டுள்ளது.

**வர்த்தக மையம்**

5.4.42.4 உலகத்தில் பெரிய இரண்டு சந்தைகளான இந்தியா மற்றும் சீனாவுக்கு மிகவும் நெருக்கமாக இலங்கை அமைந்துள்ளது என்ற வகையில் தமது பொருட்களுக்கான விற்பனை நிலைய மொன்றாக நாட்டினை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, அபிவிருத்தியடைந்த பிணையங்கள் மற்றும் நிதித்துறை சந்தையுடன் வங்கித் தொழில், காப்புறுதி, நடுத்தீர்ப்பு மற்றும் சட்ட சேவைகள் போன்ற உயர் தொழில் சேவைகளை வழங்க முடியும்.

**அறிவு மையம்**

5.4.42.5 இரண்டு மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அனுராதபுரத்திலுள்ள மஹா விகாரை ஆசியாவின் அறிவு மையமாகக் காணப்பட்டது. ஆசியாவில் மாத்திரமின்றி ஐரோப்பாவில் உள்ளவர்களும் அறிவு தேடி இறுதியில் இலங்கைக்கு வந்துள்ளனர். வெளிநாட்டு மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை கவரும் நோக்கத்துடன் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். பௌத்தம், சுதேச மருத்துவம், தியானம் மற்றும் சூழல் நட்பு வாழ்க்கைமுறை தொடர்கான அறிவினை உலகில் ஏனைய பகுதியினருடன் பரிமாறிக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை நாம் கொண்டுள்ளோம்.

5.4.42.6 தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் செயற்கை நுண்மதி ஆகியவற்றின் மூலம் உருவாகுகின்ற புதிய மென்பொருளையும் அவற்றின் அபிவிருத்திகளை தரப்படுத்தல் மூலம் சுயாதீன இளைஞர் தொழில்முயற்சியாளர்களால ஈட்டப்படும் வெளிநாட்டுச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தடையாக இருக்கின்ற சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் திருத்துவதற்கு முன்மொழிகிறேன்.

புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தமது வியாபாரங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான தேவை காணப்படுகின்றது. எனவே, டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்ந்தும் விருப்பத் தேர்வொன்றாக இருக்கமாட்டாது.

வினைத்திறன், தொழிற்பாட்டு வினைத்திறன், செலவின முகாமைத்துவம் என்பவற்றினை மேம்படுத்துவதன் மூலம் உள்ளக முறைமையினை வலுப்படுத்துவதற்கு தடுப்புச் சங்கிலியாக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது.

பாரம்பரிய வங்கிகள் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் வகையில் தம்மை மாற்றுதல் வேண்டும். புத்தாக்கங்கள் மிகவும் விரைவான சந்தையில் தேவையாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் வங்கிகள் தமது கிளைகளை டிஜிட்டல் மயப்படுத்தலினைப் பயன்படுத்தி ஸ்மாட் வங்கிகளாக மாற்றுவதற்காக ஊக்கமளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். எனவே, மத்திய வங்கி மூலதன தேவைப்பாடுகள், அனுமதி வழங்குதல் உள்ளடங்களாக தேவையான சட்டங்கள், ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

தொழில்நுட்ப தொழில்முயற்சியான்மை பொருளாதாரத்தினை ஊக்கம் பெறச் செய்வதற்கு 2021 வரவுசெலவுத் திட்டம், 2023 அளவில் குருநாகல் (ரத்கல்ல) மற்றும் காலி (அக்மீமன) ஆகிய பிரதேசங்களில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட இரண்டு தொழில்நுட்பப் பூங்காக்களுடன் ஹபரன, நுவரெலியா (மஹகஸ்தொட்ட), கண்டி (திகன) ஆகிய இடங்களில் மூன்று புதிய தொழில்நுட்பப் பூங்காக்களைத் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

5.4.43 இலங்கைக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் கவருவதில் இலங்கை முதலீட்டுச் சபை பின்பற்றுகின்ற நடைமுறைகள் பற்றி ஆழமான பகுப்பாய்வினையும் மீளாய்வினையும் மேற்கொள்வதற்கு முன்மொழிகின்றேன். வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்தீர்ப்பதனை வசதிப்படுத்துவதற்கு தற்போது விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் எளிதாக்கப்படவேண்டும் என்பது பற்றியும் துரிதமாக ஆராய்ந்து பொருத்தமான முறைகளை அடையாளங்கண்டு அதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.44 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு, வெளிநாட்டு நடைமுறைக் கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்றல்கள் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் மீது மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட நிலைமைகளை இலகுபடுத்துவதற்கும் விசேட நிதிச்சட்டமூலமொன்றினை சமர்ப்பிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.45 கல்வி மற்றும் சுகாதார வசதிகளில் அடையாளங்காணப்பட்ட மாவட்ட ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக எப்போதும் எமது அரசாங்கம் அக்கறை செலுத்துகின்றது. இதற்காக, தனியார் துறையும் எப்போதும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளது. இம்முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் நவீன பாணியில் சர்வதேசப் பாடசாலை ஒன்றையும் வைத்தியசாலை ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான காணிகளையும் வரிச் சலுகைகளையும் வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.46 புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஆனால் வினைத்திறனான முறையில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத காணிகளைப் பயன்படுத்தி கடைத் தொகுதிகள், நிதிச்சேவைகள், ஹோட்டல்கள், அலுவலக வசதிகள், திரையரங்குகள், பொழுதுபோக்கு மையயங்கள் மற்றும் தொடர்மாடி வீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க மற்றும் தனியார் ஒத்துழைப்பு முதலீடுகள் மற்றும் அல்லது உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களில் இருந்து முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.47 பணி வலைய முகாமைத்துவம், சமூக மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு சுற்றாடல் உணர்திறன் என்பன மீதான கட்டுமானதாரர்களின் கடமைப்பொறுப்பினை தொடர்ச்சியாகப் பேணுவதற்கும் அத்தகைய கருத்திட்டங்களை விரைவாகவும் உற்பத்தித்திறன் மிக்கவாறும் நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் அனைத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களினதும் கண்காணித்தலினை பரவலாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

5.4.48 வினைத்திறன், செயற்றிறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றினைப் பேணி பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட செயன்முறை மற்றும் இலத்திரனியல் பெறுகை செயன்முறை என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாகவும் பெறுகைச் செயன்முறை நவீனமயப்படுத்தப்படும். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்தரப்பு நிறுவனங்களினால் ஏற்கனவே பின்பற்றப்பட்ட அச் செயன்முறைகளை புதிய செயன்முறை உள்ளடக்கியிருக்கும். அதேவேளை சட்டரீதியான இடையூறுகளை நீக்குவதற்கும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் முதலீட்டு நிலையியற் குழுவொன்று உருவாக்கப்படும்.

5.4.49 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் கிடைக்கின்ற வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிக்கும் பொருட்டு தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தேவையான அறிவு, பயிற்சி மற்றும் ஏனைய தேவைகளை வழங்குவதற்கும் வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களுடனான ஆலோசனையுடன் அதற்காக காணப்படுகின்ற வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

5.4.50 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தற்போது தொழிற்படுகின்ற பசுமை நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பசுமைப் முறி நிதியிடல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கின்ற வெளிநாட்டுத் தரப்பினருடன் கலந்துரையாடல்களைத் தொடங்குவதற்கும் அந்தக் கருத்திட்டங்களின் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு பதிலிறுத்துவதற்கும் முன்மொழிகின்றேன். அரச வங்கிகளுக்கும் அதேபோன்று தனியார் வங்கிகளுக்கும் இந்த நிதியிடல் வசதிகளை விருத்திசெய்வதற்கு தேவையான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.51 உலகளாவிய காலநிலை மாற்றங்களுடன் **இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்ததன் காரணமாக** மண்சரிவு போன்ற திடீர் அனர்த்தங்கள் பாரியளவில் இடம் பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், தனியார் வீடுகள், தொழிற்சாலைகள், பொது வசதிகள் உட்பட சகல நிருமாணங்களுக்குமான பரிந்துரைகளை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதனை கட்டாயப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

5.4.52 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் உரித்தான சேவைக்குரிய தொழில்சார் அமைப்பொன்றில் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளபோது பிறிதொரு தொழில்சார் அமைப்பொன்றில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வது அனுமதிக்கப்படவில்லை. மேலும், வேறுபட்ட சேவைகளில் உள்ள பல்வேறு தொழில்சார் அமைப்புக்களை ஒருங்கிணைதல், ஒன்றுதிரட்டல் மற்றும் மத்தியமயப்படுத்துதல் என்பனவும் அனுமதிக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட விதமாக வரையறைகளை தொழிற்சங்கச் சட்டத்திற்கு செய்கின்ற திருத்தங்கள் மூலம் குறைப்பதற்கு முன்மொழிகின்றேன்.

## 6. தேசிய பொருளாதார அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

6.1 அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சகல செலவினங்களையும் பொது மக்களுக்காக மேற்கொள்ளப்படும் முதலீடாகவே நான் காண்கிறேன். இம்முதலீட்டின் மூலம் பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன், சொத்துக்களையும் உருவாக்குகிறது. குறித்த சொத்துக்கள் நாட்டு மக்களுக்கு நீண்டகாலத்தில் நன்மை பயக்கக்கூடிய நிரந்தர மூலவளங்களாக அமையும். அவ்வாறின்றேல், குறித்த சொத்துக்களை குறுகியகால நன்மையாக நாணயப் பெறுமதிக்கு மாற்றுவதற்கு முடியும். இதனை அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் பலமாக நாம் குறிப்பிடுகின்றோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

6.2 இதன் அடிப்படையில், 2022 நிதி ஆண்டுக்காக அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் செலவின முன்மொழிவுகளை அல்லது முதலீட்டுத் திட்டத்தினை நான் இவ்விடத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்கின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

6.3 நாம் 2021 ஒக்டோபர் 07 ஆந் திகதி அரசாங்க செலவினம் தொடர்பான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை இந்த உயரிய சபைக்கு சமர்ப்பித்துள்ளோம். அரசாங்கம் அடுத்த வருடத்தின் போது தேசிய வரவு செலவுத்திட்டதில் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ள பிரதான செலவினத் தலைப்புகளை அது கொண்டுள்ளது. இது பாரம்பரியமொன்றாமாகும். நாம் அதனைப் பாதுகாக்க வேண்டும். நாம் இந்த சம்பிரதாயத்திற்குள் இருந்துகொண்டு குறித்த செலவினத் தலைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த செலவின முன்மொழிவுகளுக்குள், அல்லது முதலீட்டுத் திட்டத்திற்குள் பிரதான 10 துறைகளினூடாக நாட்டின் அபிவிருத்தியினை ஒழுங்குபடுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

## 6.4 உற்பத்திப் பொருளாதாரமும் வாழ்வாதார அபிவிருத்தியும்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1960 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவின் பொருளாதாரங்களை விட உயர்வாகக் காணப்பட்டது. 1961 இல் சிங்கப்பூரின் பொருளாதாரம் 0.76 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகும். அவ்வேளையில் இலங்கையின் பொருளாதாரம் 1.44 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகும்.

ஆயினும், 2020 இல் சிங்கப்பூரின் மொத்தத் தேசிய உற்பத்தி ஐக்கிய அமெரிக்க டொலர் 340 பில்லியனாகும். இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி 81 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகும். இதன் மூலம் எமது நாட்டுக்குள் எவ்வாறான பொருளாதார வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதன் மூலம் எமக்கு அவசியமாவது பின்னடைவுகளிலிருந்து மீண்ட முழு மொத்த மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற பல்வகைத் தன்மைக்குட்பட்ட, துரித பொருளாதார அபிவிருத்திக்கான ஆரம்பமாகும்.

### 6.4.1 விவசாயத் துறை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது சனத்தொகையில் 80 சதவீதத்தற்கு அதிகமானவர்கள் விவசாயத் துறையைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உற்பத்திப் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் போது விவசாயத்துறைக்கு கட்டாயமாக முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். எனவே, விவசாயத்துறைக்கு என்றுமில்லாதவாறு முதலீடு செய்வதற்கு அரசாங்கம் தீர்மாணித்துள்ளது. விவசாயத்துறையில் அரசாங்கத்தினால் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சனைகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவை;

- நிர்ணயிக்கப்படாத காணி உரித்து
- பயிர்ச்செய்கைக்குப் போதிய நீர்கிடைக்காமை
- உயர்தரமுடைய விதைகள் கிடைக்காமை
- உரம் தொடர்பான பிரச்சனைகள்
- தேவையற்ற நிர்வாக சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்
- விவசாய விரிவாக்கல் சேவைகளின் பற்றாக்குறை
- நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுப் பற்றாக்குறை
- விவசாய இயந்திரம் மற்றும் உபகரணம் காணப்படாமை
- விலங்குகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள்
- போதிய சந்தைப்படுத்தல் வசதிகள் காணப்படாமை
- கிராமிய விவசாய உற்பத்திகளுக்கான உள்ளக உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை.
- விவசாய நடவடிக்கைகளுக்காக போதிய மற்றும் துரிதமான நிதிக் கடன் வசதி காணப்படாமை

### 6.4.2 நச்சற்ற களைநாசினி பயன்பாட்டினை ஊக்குவிக்க விவசாயிகளுக்கான நிவாரணம்

அதிக நச்சுத்தன்மையுடைய இரசாயண பாவனையினைத் தவிர்த்தலும் மாற்று களைநாசியினை முறையாகப் பயன்படுத்தலும் பின்பற்றவேண்டிய சிறந்த விவசாய நடைமுறைகளாகும். எனவே, மாற்று களைநாசிகளின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக ரூபா 4,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்தவகையில், விவசாய நிலங்களை தயார்படுத்தும்போது களைகளையும் களைநாசிகளின் பாவனையினைக் குறைப்பதற்கும், ஆகக்கூடியது 2 ஹெக்ரேயர்களுக்கு, ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 5,000 நிதி உதவி வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.4.3 சேதனப் பசளைப் பாவனையினை ஊக்குவித்தல்

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டது, மக்களுடன் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னராகும். இதன் அடிப்படையில் நச்சற்ற உணவைப் பெற்றுக் கொள்வதற்கான மக்களின் உரிமையினைச் சான்றுப்படுத்துவதற்கு தெளிவான மக்கள் ஆணையொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. நாடொன்றின் அபிவிருத்தி தங்கியிருப்பது நீண்டகால நோக்கங்கள் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதேயன்றி குறுகிய கால தீர்வுகளினாலல்ல. எனவே சிறந்த நோக்கத்திற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயிகளின் நோக்கத்திற்காக நாம் முன்னிற்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

எனவே, சேதனப் பசளைப் பொருளாதாரத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு இதுவரை காணப்பட்ட இரசாயணப் பசளை நிவாரணத்தற்குப் பதிலாக 2021/2022 பெரும்போகத்திலிருந்து விவசாயி ஒருவருக்கு தமது பயிர்ச்செய்கைக்குத் தேவையான உள்நாட்டு சேதனப் பசளையினை உற்பத்தி செய்வதற்கும் இரசாயண கிருமி நாசினிகளுக்குப் பதிலாக சேதன கிருமிநாசினி தயாரிப்பதற்கும் தேவையான ஆரம்ப தொழிற்படு மூலதனத்தினை வழங்குவதற்கும் களைநாசினியினைப் பயன்படுத்தாமல் வயல்களில் களைகளைப் பிடுங்குவதற்கு விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற மேலதிக செலவினை ஈடு செய்வதற்கு நிவாரணம் வழங்குவதற்கு தற்பொழுது ரூபா 35,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4.4 புதிய விவசாயத் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உலகில் விவசாயத்துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் விவசாயத் துறையினை நவீனமயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்தல் வேண்டும். புதிய விவசாயத் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கு இதுவரை ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 17,005 பில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 5,000 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.4.5 பெருந்தோட்டத்துறை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சர்வதேச சந்தையினை வெற்றி கொள்வதற்கு புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய, பெறுமதி சேர்க்கப்பட்ட பெருந்தோட்டத்துறையினை உருவாக்குவது எமது நோக்கமாகும். இதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது,

- வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தினை அதிகரித்தல், மற்றும்
- பயிர்ச்செய்கையாளர்களின் வருமானத்தினை அதிகரித்தல்.

எனவே, பெருந்தோட்டத் துறையிலிருந்து ஆகக்கூடிய பயனைப் பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது பயிரிடப்பட்டுள்ள தேயிலை, தெங்கு, இறப்பர், கறுவா, மிளகு, கோப்பி, சிட்ரஸ் வெனிலா, ஏலக்காய்,

கராம்பு உள்ளடங்கலான ஏனைய ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள பின்னடைவினை இனம் காணுதல் வேண்டும். இதனடிப்படையில் பின்வருவனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

- மீள் பயிரிடல்
- இடைப் பயிரிடல்
- புதிய பயிர்ச்செய்கை

நீர் வழங்கலினை உறுதிப்படுத்துவதன் மூலம் குறித்த பயிர்களின் உற்பத்தியினை வினைத்திறன் மிக்கதாக அதிகரிக்க முடியும். மேலும், தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் ஏற்றுமதிச் சந்தையினை உபாய ரீதியில் வெற்றி கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதற்காக ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 10,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.4.6 கடற்றொழில் மற்றும் நீரியியல் வளத்துறை

கௌரவ சபாநாயகர் அவர்களே

- மீன் உற்பத்தி
- நன்னீர் மீன் வளர்ப்பு
- உவர் நீர் இறால் வளர்ப்பு
- அலங்கார மீன் வளர்ப்பு, மற்றும்
- உள்நாட்டு குளங்களில் மீன் வளர்ப்பு

என்பன எமது பொருளாதாரத்தில் கைத்தொழில் என்ற வகையில் முக்கிய துறையாக மாறியுள்ளது. அதேபோன்று, எமது அலங்கார மீன்களுக்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பெருமளவு கேள்வி காணப்படுவதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த தொற்றுநோய்க் காலத்தில் இவற்றின் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. பதனிடப்பட்ட மீன், கருவாடு, மாசிக் கருவாடு, தகரத்தில் அடைத்த மீன் உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் மேலும் விரிவாக்கப்படும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கடற்றொழில் மற்றும் நீரியியற் துறையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில்,

- 2022 நிதி வருடத்தில், 200,000 ஹெக்டேயரளவு நன்னீர் நிலைகளில் 196 மில்லியன் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டது. இதன்மூலம் ரூபா 18,000 மில்லியன் பெறுமதியான 125,000 மெற்றிக் தொன் அறுவடையினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- மீன்பிடி நங்கூரத்தளங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களின் அபிவிருத்தி மற்றும் நிருமாணம் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந் நடவடிக்கைகளுக்காக தற்பொழுது ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.4.7 கால்நடை வளத்துறை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இலங்கை ஏற்கனவே முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றில் தன்னிறைவு இலக்கை அண்மித்துள்ளது. நீண்ட காலமாக பொதுமக்களின் புரதத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளது. அவற்றின் பெறுபேறாக முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியை நாம் பாரியளவில் அதிகரித்துள்ளோம். 2021 ஆம் ஆண்டில் கோழி இறைச்சியை எம்மால் ஏற்றுமதி செய்யவும் முடிந்தது.

இருப்பினும் பால் உற்பத்தி சம்பந்தமாக தொடர்ந்தும் நாம் முயற்சிக்க வேண்டியுள்ளது என்பதை உணர்கிறேன். பெருந்தொகையினை பால்மா இறக்குமதிக்காக செலவிடுகிறோம். அதன் காரணமாக பால் உற்பத்தி அதிகரித்து திரவப்பால் நுகர்வை அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் பால், முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திக்காக தனியார் துறையின் நடுத்தர மற்றும் பாரியளவு முதலீடுகளையும் ஊக்கிவிக்கின்ற அதே வேளையில் அந்த உற்பத்திக்காக செலவாகின்ற மூலப்பொருள் மற்றும் புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் செலவை குறைப்பது அவசியமாகும்.

அதற்கமைவாக, கால்நடை வளத்துறை அபிவிருத்திக்காக தொடர்ந்தும் முதலீடு செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. அதற்காக தற்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக மேலும் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

### 6.4.8 பாரம்பரிய குடிசைக் கைத்தொழில்துறை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இலங்கை புராதன காலத்திலிருந்து விவசாய கலாச்சாரத்தின் மூலம் போசிக்கப்பட்ட நாடு ஆகும். எமது மக்கள் ஓய்வு கிடைக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் கலை வடிவான தயாரிப்புகளை மேற்கொள்வதில் ஈடுபட்டு இருந்தனர். அதன் பெறுபேறாக அந்த கலை வடிவான தயாரிப்புகள் பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலாக வளர்ச்சியடைந்தது. இதேவிதமாக பிரம்பு, பண் பாய் மற்றும் பித்தளை போன்ற கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட ஹன்தெஸ்ஸ, தளகுணே, தித்தகல்ல, பரதூவ மற்றும் பம்பகஹதெனிய போன்ற சுமார் 273 கிராமங்கள் நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்றது என்பதை தற்போது நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்தப் பாரம்பரிய கைத்தொழிலில் எமது இலங்கையின் அபிமானம் மற்றும் அடையாளம் பொதிந்து காணப்படுகின்றது. அவர்களது தயாரிப்புகளுக்காகக் காணப்படுகின்ற பல பிரச்சனைகள் இருக்கின்றன. மூலப்பொருள் போதுமானதாக இல்லாமை அவற்றில் பிரதானமானதாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நவீன தொழில்நுட்ப மற்றும் தரத்தை உற்பத்தியுடன் ஒன்றிணைப்பது அவசியமானதாகும். தமது தயாரிப்புகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் பிரவேசிப்பதற்குள்ள தடைகளை நீக்கிக் கொடுப்பது எமது பொறுப்பாகும்.

அதனால் உள்நாட்டு பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஓர் அமைச்சுக்கு நாம் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளோம். அதற்கமைவாக பிரம்பு, களிமண், பித்தளை, அரக்கு, முகமூடி, சிரட்டை, ஆபரணங்கள், சிற்பங்கள் மற்றும் பண் வடிவம் போன்ற பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக மேலும் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

### 6.4.9 கைத்தறி, பத்திக் உட்பட புடைவைக் கைத்தொழில்துறை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கடந்த காலங்களில் இந்தியா, சீனா போன்ற நாடுகளைப் போன்று இலங்கையும் புடைவைக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றிருந்தது. கைத்தறிப் புடைவைக் கைத்தொழிலிலும் எமது நாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள பாரம்பரிய கைத்தொழிலாகும். கடந்த காலங்களில் சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட பின்னடைவும் இந்தக் கைத்தொழிலுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தியது.

அதேபோன்று இலங்கையின் பத்திக் கலைக்கும் நீண்ட வரலாறு இருக்கின்றது. அது எமது மரபுரிமை ஆகும். இருப்பினும் அந்தக் கலையைப் பயில்கின்ற நபர்களில் குறைபாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காகப் பயன்படுத்துகின்ற மூலப் பொருட்களின் விலை அதிகரித்தமை அதற்குக் காரணமாக இருக்க முடியும். இருப்பினும் அந்தக் கலையை நேசிக்கின்ற தரப்பினர்களும் எம்மிடையே இருக்கின்றனர். இந்த பத்திக் கலையில் தொழில் ரீதியாக அல்லது சுயதொழில் ரீதியாக ஈடுபடுகின்ற பல நபர்கள் இருக்கின்றனர். திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்றினூடாக இந்தக் கைத்தொழில்களின் தயாரிப்பகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் நல்ல கேள்வியைப் பெற்றுக் கொள்ள முடியும். 2025 ஆம் ஆண்டளவில் கைத்தறி மற்றும் பத்திக் உள்ளிட்ட தயாரிப்புகளுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு பில்லியனை ஏற்றுமதி வருமானமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதனால் இந்த கைத்தறி மற்றும் பத்திக் உள்ளிட்ட புடைவைக் கைத்தொழிலை முன்னேற்றுவதற்கு ரூபா 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 6.5 புதிய உற்பத்தி முதலீட்டு வலயம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உணவு, வாயு மற்றும் நீர் போன்ற மனிதனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானதன் பின்னர் அவர்கள் உயர் வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட வாழ்க்கை முறையொன்றை எதிர்பார்க்கின்றனர். அதனால் அந்தக் கேள்வியை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தயாரிப்புகளை உருவாக்குவதற்கு எமக்கு வாய்ப்பு இருக்கின்றது. அந்தத் தயாரிப்புகளின் மூலம் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ததன் பின்னர் அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பாரியளவில் அந்நியச் செலாவணியை சம்பாதிக்கக் கூடியதாக உள்ளது. அதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்கின்ற உற்பத்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அதன் ஊடாக ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். அதற்காக அரசதுறை, தனியார் துறை ஆகியவை ஒன்றிணைந்த பொறிமுறையொன்றைத் தயாரித்து ஒவ்வொரு ஏற்றுமதித் துறைக்கும் உரிய வருடாந்த இலக்குகளை வழங்கி அவர்கள் முகங் கொடுக்கின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக எப்போதும் தலையீடு செய்கின்றோம்.

அதற்கமைவாக உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட பல துறைகள் இருக்கின்றன. அவற்றினிடையே பின்வரும் உற்பத்தித்துறைகள் காலத்திற்கேற்ப மிக முக்கியமானதாகும்.

- சேதனப் பசளை உற்பத்தி கைத்தொழில்கள்
- மருந்துப்பொருள் உற்பத்தி
- புடைவை, ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் உற்பத்தி
- இறப்பர் சார்ந்த உற்பத்திகள்
- ஏற்றுமதிக் கைத்தொழில் திட்டங்கள்

- கால்நடை வளங்கள்
- விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதன தயாரிப்பு
- மீன்பிடி மற்றும் நீர்வாழ் உற்பத்திகள்
- மின்சார மற்றும் இலத்திரணியல் உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள்
- விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பு
- உருக்கு மற்றும் பார உலோகக் கைத்தொழில்

இந்தத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தனியார்துறைக்கு அழைப்பு விடுக்கின்றேன். இந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவது எமது பொறுப்பாகும். அதற்கமைவாக புதிதாக உருவாக்குகின்ற உற்பத்தி முதலீட்டு வலயத்துக்கு தேவையான காணி, மின்சாரம், நீர், உள்ளக மற்றம் வெளியக அணுகுகை வீதி போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுக்கும் பொருட்டு **ரூபா 5,000 மில்லியனை** ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதன்போது அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு உற்பத்தித் துறைக்கும் அமைவாக தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி முதலீட்டு வலயங்களாக

- சேதனப் பசளை உற்பத்திக்காக - விவசாய மாவட்டங்கள் அனைத்தும்
- மருந்து உற்பத்திக்காக - ஒயாமடுவ, மில்லெனிய மற்றும் ஆருகம்பொக்க பிரதேசங்களும்
- புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில்கள் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு - ஏறாவூர், மொனராகலை, புத்தளம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களும்
- ஏற்றுமதி, விவசாய பதனிடல் வலயத்துக்கு - மத்தளை, அல்பிட்டிய, அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களும்
- கால்நடை வளங்கள் வலயத்திற்கு - நாவலப்பிட்டி, வாரியபொல, பொலநறுவை ஆகிய பிரதேசங்களும்
- தனியார் முதலீட்டின் ஊடாக தாபிக்கப்படுகின்ற மீன்பிடி மற்றும் நீர்வாழ் உற்பத்தி வலயத்திற்கு- புத்தளம், மன்னார், அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் கொக்கட்டிச்சோலை போன்ற பிரதேசங்களும்
- இரசாயணப் பொருள் உற்பத்திக்கு - பரந்தன், புல்மோட்டை மற்றும் எப்பாவல போன்ற பிரதேசங்களும்
- மின்சார மற்றும் இலத்திரணியல் உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உற்பத்தி முதலீட்டு வலயத்திற்கு - ஹேனயகம, சூரியவெவ, குண்டசாலை மற்றும் ஹோமாகம பிரதேசங்களும்
- விளையாட்டுப் பொருள் உற்பத்திக்காக - அம்பாந்தோட்டை, சூரியவெவ போன்ற பிரதேசங்களும்
- உருக்கு மற்றும் பாரமான உலோகக் கைத்தொழிலுக்கு - மிரிஜ்ஜவில பிரதேசங்களும் அடையாளங் காணப்பட்டுள்ளன.

### 6.5.1 பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மேலே கூறப்பட்ட புதிய உற்பத்தி முதலீட்டு ஏற்றுமதி வலயங்களில் பாரியளவு உற்பத்தியாளர்களுக்கு வசதிகளை வழங்கியதைத் தொடர்ந்து சிறிய மற்றும் நடுத்தர அளவு உற்பத்தியாளர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

தற்போது அவ்வாறான கைத்தொழிலாளர்கள் மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களை தாபிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர்.

அதனால், மேல் மாகாணத்திற்கு வெளியில் அவர்களின் கைத்தொழில்களை தாபிப்பதற்கு தேவையான காணிகளை வழங்குதல், மின்சாரம், நீர், பாதைகள் மற்றும் பாதுகாப்பு வேலிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதினூடாக கைத்தொழில் நகரங்களிலிருந்து கிராமத்திற்கு கொண்டு செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதனால், பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில் வலயங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதனூடாக பிரதேச மட்டத்தில் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்களை பாரிய அளவில் உருவாக்க முடியும். அதற்காக **ரூபா 5,0000 மில்லியன்** ஏற்பாட்டினை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

### 6.6 அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கையினை யதார்த்தமானதாக மாற்றும் பணிக்கு உன்னதமான ஆரம்பத்தை வழங்கி பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நிதி அமைச்சராக 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

> ''இந்நாட்டின் பொதுமக்கள் நிவாரண உதவிகளை அல்லது இலவசமாக எது எதனையும் அரசாங்கத்திடம் கோரி இருக்கவில்லை. அவர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக கிராமத்தில் உள்ள பாடசாலைக்கு ஆங்கில, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் விளையாட்டு ஆசிரியர்களை பெற்றுத்தருமாறும் கிராமத்தில் உள்ள வைத்தியசாலையை செய்து தருமாறும் ஒரே குரலில் கோரிக்கை விடுத்தனர். பாடசாலை விளையாட்டு மைதானம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு வசதிகளை செய்துதருமாறு பிள்ளைகள் குரல் எழுப்பினர். சுயமான சக்தியின் மூலம் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு குளங்களின் அணைக்கட்டுகள், கால்வாய் அணைகள் ஆகியவற்றை செய்துதருவது போன்று வன விலங்குகளிடமிருந்து தமது பிள்ளைகளை சொத்துக்களை மற்றும் தமது பயிர்ச் செய்கைகளை பாதுகாத்துத் தருமாறு அவர்கள் கோரி நின்றனர். அதேபோன்று தமது அன்றாட கடமைகளை மேற்கொள்வதற்கும் நமது தயாரிப்புகளை நகரத்திலுள்ள சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கு கிராமத்திற்கு தரமான வீதி ஒன்றை அமைத்து தருமாறும் குடிநீரை பெற்றுத் தருமாறும் அவர்கள் மேலும் கோரியிருந்தனர்.''

அந்த உட்கட்டமைப்பு வசதிகள், மின்சாரம், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப வசதிகள், பொருளாதாரம், சமூக நடவடிக்கைகள் ஆகியவற்றுக்காக நிதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள் அவர்களுக்கும் தேவைப்பட்டிருந்தது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளினதும் அத்திவாரம், அடிப்படை வசதிகளின் அபிவிருத்தியின் மீது தங்கியிருக்கின்றது. அதனால் அரசாங்கம் இந்த வருடத்தில் உட்கட்டமைப்பு வசதிகளில் அபிவிருத்தியை 05 துறைகளின் ஊடாக உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

#### 6.6.1 அனைவருக்கும் குடிநீர்

பல திசைகளிலிருந்தும் சமுத்திரத்துக்கு வழிந்தோடுகின்ற பெருமளவான நீரைக்கொண்ட ஆற்றுத் தொகுதிக்கு உரிமை கோருகின்ற ஒரு நாடாகவிருக்கின்ற போதிலும் எமது நாட்டின் மக்கள் தொகையின் குறிப்பிடத்தக்க மக்கள் சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லாமையினால் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர். மக்கள் தொகையில் 6 சதவீதத்தினருக்கு மாத்திரமே தூய்மையான குடிநீர் வழங்கல் காணப்படுகின்றது. அதனால் குடிநீர் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வது எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பொறுப்பாகும். ''அனைவருக்கும் நீர்'' எனும் அரசாங்கத்தின்

இலக்கை நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டில் 200,000 கிட்டிய வீடுகளுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குவதனை தொடர்ந்தும் விரிவுபடுத்தி மக்கள் நீர்க்கருத்திட்டத்தையும், நீர்த்தேக்கங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் நீர் மூலங்களைப் பாதுகாப்பதற்கும் கவனம் செலுத்துகிறோம்.

அதனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அத்தனகல்ல, மினுவாங்கொட, குருநாகல், கண்டி, அனுராதபுரம் வடக்கு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட நீர்வழங்கல் திட்டங்களை துரிதமாக நிறைவு செய்து நாடு பூராவும் இலக்கு வைக்கப்பட்டுள்ள 3,314,500 புதிய நீரிணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதற்கமைவாக 24 மணித்தியாலங்கள் முழுவதும் சுத்தமான நீரை தொடர்ச்சியாக வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட "அனைவருக்கும் நீர்" நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதான நீர் வழங்கல் திட்டங்களை துரிதப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 33,963 மில்லியன் ஏற்பாட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 15,000 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிக்கின்றேன். அதற்கமைவாக குடிநீர்த் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் 90 சதவீத இலக்கை நாம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் அடைந்து கொள்வோம்.

### 6.6.2 நீர்ப்பாசன சுபீட்சம் (*வாரி-சௌபாக்கியா)*

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டு போகங்களுக்கும் நீர்ப்பாசனத்தை வழங்கி விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகளின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை அதிகரிக்கும் பொருட்டு,

- நீர்ப்பாசனத்தை வழங்கி நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வசதிகளை வழங்குவதைப் போன்று,
- கைத்தொழில் மற்றும் சேவைகளுக்கான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும்,
- தேசிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத்தி இலக்கை நிறைவேற்றும் பொருட்டு உதவியளிப்பது வாரி-சௌபாக்கிய (நீர்ப்பாசன சுபீட்சம்) நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னனிக் குறிக்கோள்களாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அதேபோன்று,

- உமா ஓயா பன்நோக்க அபிவிருத்திக் கருத்திட்டம்
- யான் ஓயா போன்ற பாரியளவு நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகளில் தற்போது சுமார் 90 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

வடமேல் பெரிய கால்வாய், வடமத்திய பெரிய கால்வாய், மினிப்பே கால்வாய், முந்தனி ஆறு நீர்த்தேக்கத் தொகுதி மல்வத்துஓயா கீழ் பள்ளத்தாக்கு நீர்த்தேக்கம் மற்றும் சிறிய விலச்சிய நீர்த்தேக்கம் போன்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் திட்டமிட்டவாறு தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மேலும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ''கமசமக பிலிசந்தரக்'' (கிராமத்துடனான கலந்துரையாடல்) நிகழ்ச்சித்திட்டத்தில் கிராம மக்களினால் அடையாளம் காணப்பட்டுள்ள குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல் உள்ளிட்ட,

- உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி
- ஹிம்பிளியாகட வத்தேகெதர நீர்ப்பாசன வசதிகளின் அபிவிருத்தி
- குச்சவெளி பேராறு நீர்ப்பாசன அணையை நிர்மாணித்தல்
- கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க அபிவிருத்தி
- மாதுறு ஓயா தெற்குக்கரை அபிவிருத்தி
- நில்வள கங்கை கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தர மற்றும் பாரிய அளவு கருத்திட்டங்களாகும்.

கால்வாயின் கரை, குளக்கட்டு மற்றும் வரம்பு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் மழைநீரை சேகரிப்பதற்கும் தற்போது காணப்படும் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்க் கொள்ளளவை அதிகரிப்பதற்காக ''நீர்ப்பாசன சுபீட்சம்'' நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அடையாளங் காணப்பட்டுள்ள 5,000 சிறிய குளங்களை / அணைக்கட்டுகளை புனரமைப்பதற்கு எதிர் பார்த்தோம். அதில் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ள 1,050 சிறிய குளங்களுக்கு / அணைக்கட்டுகளுக்கு மேலதிகமாக 2,000 சிறிய குளங்களை / அணைக்கட்டுகளை அடுத்த வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அதற்கமைவாக வாரி-சௌபாக்கிய (நீர்ப்பாசன சுபீட்சம்) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 48,237 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக மேலும் ரூபா 20,000 மில்லியன் ஏற்பாடொன்றை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். முழுநாட்டையும் உள்ளடக்கும் விதமாக நடைமுறையிலுள்ள இந்த நீர்ப்பாசனக் கருத்திட்டம் அனைத்தும் அடுத்த மூன்று (03) வருடங்களுக்குள் அதாவது 2024 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

### 6.6.3 வீதி அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பொது மக்களுக்குத் தமது அன்றாட தேவைகளுக்காகவும் தொழில் தேவைகளுக்காகவும் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகப் பொறிமுறையை வலுவூட்டுவதற்காகவும் தொலைவிலுள்ள கிராமங்கள், அரைச்சார்பு நகரங்கள், நகரங்கள் மற்றும் தலைநகரங்களை ஒன்றோடொன்று இணைத்து நவீன வீதித் தொகுதியை உருவாக்கும் பொருட்டு எம்மால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டததை அடுத்த மூன்று (03) வருடங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சகல கிராமங்களையும் உள்ளடக்கும் விதமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற 100,000 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இந்த வருடத்துக்குள் முடிவடைகின்ற 18,000 கிலோ மீற்றர்களுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டிலிருந்து வருடத்துக்கு 25,000 கிலோ மீற்றர் வீதம் வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

பின்தங்கிய கிராமங்களுக்கு நுழைவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள 10,000 கிராமியப் பாலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள 200 பாலங்களுக்கு மேலதிகமாக எஞ்சிய பாலங்களை துரிதமாக நிர்மாணிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை ஒதுக்குவோம்.

கொழும்புத் துறைமுக நுழைவு வீதி பேலியகொட-அத்துறுகிரிய அதிவேக நெடுஞ்சாலை, கண்டி அதிவேக நெடுஞ்சாலை, குருநாகல்-தம்புள்ள அதிவேக நெடுஞ்சாலை, ருவன்புர அதிவேக

நெடுஞ்சாலை, கொழும்பு-மொறட்டுவ கரையோர வீதி மற்றும் கொழும்பு நகரின் மேம்பாலங்களை 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வோம்.

இதற்காக 2022 ஆம் ஆண்டுக்கு ரூபா 260,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மேலும் ரூபா 20,000 மில்லியன் ஒதுக்கீடுசெய்யப்படும்.

### 6.6.4 மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி - அனைவருக்கும் மின்சாரம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தேசிய மற்றும் சர்வதேச புதிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இணங்கியதாக சூழல் நட்பான துரித அபிவிருத்தியை நோக்கி பயணிப்பது எமது அரசாங்கத்தின் முன்னனி நோக்கு ஆகும். இதன்போது மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மிக முக்கியமானதாகும். மின்சாரத்தின் மூலம் இயங்குகின்ற முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்களின் பக்கம் எமது கவனத்தைச் செலுத்தியுள்ளோம். கரியமிலவாயுவை வெளியேற்றும் எரிபொருளின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்திலிருந்து மின்னூட்டம் செய்யப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்திலிருந்து பொருளாதாரத்திற்கும் சூழலுக்கும் பிரயோசனம் கிடையாது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்குச் செலவாகின்ற அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பதற்கும் பசுமைப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியும் (Renewable Energy) தூய சக்தியும் (Clean Energy) மிகப் பிரயோசனமானதாகும்.

அதற்காக தனியார்துறைக்கு மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி துறையில் முதலீட்டு வாய்ப்புக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனூடாக 2030 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி தேவையில் 70 சதவீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் ஊடாக பூர்த்தி செய்வதற்குத் தேவையா முதலீடுகளை 2022 ஆம் ஆண்டில் துரிதப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியை மேம்படுத்தி தனியார்துறையின் முதலீட்டை ஊக்குவிக்கும் பொருட்டு தேவையான வசதிகளை வழங்குவதற்கான தற்போது ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 190 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் சுமார் ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

அதற்கமைவாக தனியார் துறையின் ஒத்துழைப்புடன் அடுத்த மூன்று (03) வருடங்களுக்குள் தேசிய மின்சாரத் தொகுதிக்கு கிட்டத்தட்ட 2,000 மெகா வோட் மேலதிக மின்சாரத்தை உமா ஓயா, பூநகரி, சியம்பலாண்டுவ, மன்னார், புரோட்லாண்ட், மொறகொல்ல மற்றும் சீதாவக்க ஆகிய மீள் மின் புதுப்பிக்கத்தக்க மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்து மின்சாரத் தொகுதிக்கு சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

உலகில் எண்ணெய் உற்பத்தி செய்கின்ற பிரதான நாடுகள்கூட 2030 ஆம் ஆண்டளவில் அந்த உற்பத்தியைக் குறைத்து மீள் புதுப்பிக்கத்தக்க சக்திகளுக்குள் பிரவேசித்து வருகின்றன. எண்ணெய் இறக்குமதியின்மீது தங்கியிருக்கின்ற எமது நாட்டின் சகல அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சூரிய சக்திகளுக்கு துரிதமாக ஈடுபடுத்துவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகின்ற வீதி ஒளியூட்டல் (Streets Lighting) மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கருத்திட்டங்களுக்கு மாறுவதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.6.5 வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

"சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்கத்தின் கொள்கை ஆவணத்திற்கேற்ப அனைத்துக் குடும்பங்களும் தமது சொந்த வசதியான வீடுகளில் வாழ்வதற்கான சூழல் ஒன்றினை உருவாக்குவது எமது நோக்கமாகும்.

இதனை யதார்த்த பூர்வமாக மாற்றும் வகையில் நகர, கிராமிய மற்றும் தோட்டத்துறைகளில் குறைவருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு அனைத்துக் கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி வீடமைப்பு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சிலர் தமக்கான சொந்த வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கான பொருளாதார ஆற்றலினைக் கொண்டுள்ளனர். இன்னும் சிலர் வீடுகளை நிர்மாணிப்பதற்கு வங்கிகளிலிருந்து கடனைப் பெற முடியுமாக இருக்கின்றனர். இருந்தபோதிலும் நகர, கிராமிய மற்றும் தோட்டத்துறைகளில் வாழ்கின்ற அப்பாவி சமூகங்கள் தமது வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்குத் தேவையான உதவியினை அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக நகர வீடமைப்புக்காக ரூபா 2,000 மில்லியன் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக ரூபா 5,000 மில்லியன் கிராமிய வீடமைப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள புற நகர்ப் பகுதிகளில் ஏற்கனவே, நிர்மாணப்பணிகள் இடம்பெற்றுவரும் கூட்டாதனங்களின் நிர்மாணத்தினை 2024 வருடமளவில் அளவில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தோட்டமக்களின் வீடமைப்பு நிலைமைபற்றி விளக்குவதற்கு தேவையில்லையென நான் நினைக்கின்றேன். அவற்றின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. குறித்த ஊழியர்கள் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான தேயிலைக்கான அடிப்படையினை வழங்குகின்றனர். எனவே, அந்த சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். எனவே, தோட்டத்துறையில் வீடமைப்பு அபிவிருத்திக்காக அடுத்த மூன்று (03) வருடத்திற்குள் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நகர அபிவிருத்தி என்பது எமது அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் பிரதானமானதொரு அங்கமாகும். ஒருங்கிணைந்த வீதி மற்றும் போக்குவரத்து வலையமைப்பு, வசதியான வீடு மற்றும் சூழல் நட்பு நகரக் காடுகள் உள்ளடங்களாக நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். வத்தளை, ஜாஎல, கட்டான, கம்பஹா மற்றும் களனி போன்ற வெள்ளத்தினால் பாதிக்கப்படும் தாழ் நிலங்களில் குளங்கள் மற்றும் கால்வாய்கள் அதேபோன்று ஹமில்டன் கால்வாய்க்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களையும் சூழல் நட்பு முறையில் அபிவிருத்தி செய்தல் இந்த வகையில் 2022 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் ரூபா 7,000 மில்லியனுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அடுத்து கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கு விரும்புகின்றேன். ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட உற்பத்தி பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இது தொடர்புபடுவதுடன் அடிப்படை உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

## 6.7 “கமசமக பிலிசந்தர” (கிராமத்துடனான கலந்துரையாடல்) – கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், கிராமிய உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்வதற்கும் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் நான்கு-முனை முறைமை ஏற்கனவே முன்னெடுக்கப்படுகின்றது. அவையாவன

- வாழ்வாதார அபிவிருத்தி
- பொது உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி
- சுற்றாடல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி
- சமூக நலனோம்புகை மற்றும் சமூக அபிவிருத்தி

கிராமியக் குழுக்குள் ஊடாக சமூகப்பங்கேற்பின் வாயிலான சொல்லப்பட்ட துறைகளில் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது அரசாங்கமானது சமூக அபிப்பிராயங்கள், புதிய போக்குகள், உலகளாவிய சமூக – பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களுக்கு ஒத்திருக்கின்ற உணர்திறன்மிக்கதாகவுள்ள கொள்கை தீர்மானங்களை எடுக்கின்றது.

எனவே, குறிக்கோள் சார்ந்த தீர்மானங்கள் எடுப்பதில், தற்சார்பு மற்றும் பிராந்திய முன்னுரிமைகள்,போன்ற மரபுசார்ந்த காரணிகளுக்குப் பதிலாக, விஞ்ஞானக் காரணிகள் பரிசீலணையில் கொள்ளப்படுகின்றன. அதன் யதார்த்தம் உங்களுக்கு தெளிவாகியுள்ளது என நம்புகின்றேன். கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியங்களை ஒதுக்கீடு செய்யம் விதம் பல்வேறு நிர்வாக அலகுகள் ஊடாக இருக்கவேண்டும் என நாம் கருதினோம்.

### 6.7.1 கிராம சேவையாளர் பிரிவு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நாம் அனைவரும் அறிந்ததைப்போன்று மிகச்சிறிய நிருவாகப் பிரிவும் பொது மக்களுக்கு மிகவும் அண்மித்ததும் கிராம சேவகர் பிரிவாகும். ஒட்டுமொத்த நிர்வாகக் கட்டமைப்பும் 14,024 கிராம சேவகர் பிரிவுகளைக்கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அபிவிருத்தி நிதியியல் ஒதுக்கீடுகள் வெவ்வேறாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அதிகாரமிக்கவர் இருப்பதனால் அப்பிரிவுக்கு அதிக நிதியங்கள் ஒதுக்குவதும் அதிகாரமிக்கவர்களை கொண்டிராத பிரிவென்பதால் குறைவான நிதியங்களை ஒதுக்குதலும் இம்முறை நிகழாது. 399 மெதமுலன என்ற எனது கிராம சேவகர் பிரிவு உள்ளடங்கலாக அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் சமமான தொகைகளே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது அரசாங்கத்தின் சமத்துவமா அல்லது நியாயத்தன்மையா அல்லது சனநாயகமா என இது எவ்வாறு அழைக்கப்படுவதென்பதை எதிர்காலமே தீர்மானிக்கும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

ஒவ்வொரு பிரிவுக்கும் ரூபா 3 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதன் அர்த்தம் ஒவ்வொரு கிராமமும் ரூபா 30 இலட்சத்தினைப் பெற்றுக்கொள்ளும் என்பதுடன் மொத்த ஒதுக்கீடு ரூபா 42,063 மில்லியனாகும். அபிவிருத்தி கருத்திட்டங்களைத் தீர்மானிக்கின்ற சக்தி அக்கிராமத்தின் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கிராமிய விகாரையின் பிரதம மதகுரு, கோவிலின் அல்லது கிறிஸ்தவ தேவாலயத்தின் பூசகர், கிராமிய சமூகத்தலைவர்கள் அத்துடன் கிராமவாசிகள் அனைவரும்

இச்செயல்முறையில் தாமாக ஈடுபடலாம். அரசாங்க அலுவலர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைக்கொண்ட அமைப்பொன்றின் மூலம் கிராமிய தேவைகள் இனங்காணப்படலாம்.

### 6.7.2 உள்ளூராட்சிப் பிரிவுகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

உள்ளூராட்சி நிறுவனங்களின்கீழ் வருகின்ற உள்ளூராட்சிப் பிரிவு அரசியல் கட்டமைப்பின் மிகச் சிறிய பிரிவாகும். உள்ளூராட்சிப் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை 4,917 ஆகும். ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரிவுக்குமென வெவ்வேறாக வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் 4 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது 40 இலட்சமாகும். அதற்கமைய 4,917 உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கு ரூபா 19,668 மில்லியன் வழங்கப்படுமென்பதைக் குறிப்பிடவேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அரசியல் ரீதியாகவோ அன்றி வேறு ஏதும் காரணங்களுக்காகவோ பாரபட்சம் காட்டுவது எமது முறைமையில் காணப்படாது என்பதனை இவ் கௌரவம்மிக்க சபைக்கு பணிவுடன் வலியுறுத்தப்படுகின்றது. ஆகவே, அபிவிருத்தி எதிர்பார்க்கைகளுக்கு உருக்கொடுப்பதற்கு பிரிவுகளுக்கு அரசியல் கட்சியினைக் கருத்திற்கொள்ளாது 2022 மதிப்பீடுகள் ஊடாக ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளன. இதே விதத்தில் இவ்வரசாங்கமானது புதிய அரசியல் கலாசாரத்தினைத் தோற்றுவிக்கின்றது. இம்முன்மாதிரிகள் எதிர்காலத்திலும் பின்பற்றப்படுமென நான் எண்ணுகின்றேன்.

### 6.7.3 பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதனூடாக நீங்கள் உள்ளடங்களாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்பார்க்கைகள், மாவட்ட மட்டத்தில், பரந்தளவில் எய்தப்படக்கூடியதாகவிருக்குமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களது உரிய பிரிவுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை ரூபா 5 மில்லியனால் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 2022 ஆம் ஆண்டுக்காக அபிவிருத்தி வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளைக்கொண்ட ரூபா 15 மில்லியன் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுமென்பதுடன் மொத்த ஒருக்கீடு ரூபா 3,375 மில்லியனாகவிருக்கும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்த உயரிய சபையின் அனுமதிக்குட்பட்டு கண்டிப்பான நிதியியல் ஒழுக்கம், நிதியியல் முகாமைத்துவ வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பவற்றுடன் வரவுசெலவுத்திட்டம் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை முதலிடுவதற்கு ஆக்கபூர்வமான சூழ்நிலை காணப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

### 6.7.4 பிரதேச மற்றும் மாவட்ட முதலீடுகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கிராமிய அபிவிருத்திக்காக அத்தகைய பாரிய தொகை நிதியங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் எதனை எதிர்பார்க்களாம், என்ற கேள்விக்கு தெளிவான பதில்ஒன்றை தருவதற்கு அடுத்த சில நிமிடங்களை நான் பயன்படுத்த விரும்புகின்றேன். எமது முதன்மைக் குறிக்கோளானது கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும் கிராமிய குடும்பங்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதும்

பிழைத்தால் போதுமென்ற எண்ணப்பாங்கிலிருந்து அவர்களை விடுவிப்பதும் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முக்கிய நடவடிக்கைகளுக்கு உட்செலுத்துவதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதும் வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதுமாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

ஆகையால், பொருளாதார செயன்முறைகள், வீட்டுத்தோட்டம் தொடக்கம் பாரிய பண்ணைக் காணிகள் வரையும் வீட்டு உற்பத்திகள் தொடக்கம் தொழிற்சாலை உற்பத்திகள் வரையும் கட்டமைப்பு சார்ந்த நிகழ்ச்சித்திட்டமூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வரவுசெலவுத்திட்டமானது அவ்வாறான வரலாற்று ரீதியான பொறுப்பினை ஏற்றியுள்ளது. இப்பரந்த எண்ணக்கரு மும்முனை எதிர்பார்க்கைகள் ஒன்றினூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- இழந்த வருமான மூலங்களை மீளப்பெறுதல்
- கிடைக்கப்பெறுகின்ற வருவாய் மூலங்களை விருத்திசெய்தல்
- புதிய வருவாயீட்டும் மூலங்களை உருவாக்குதல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் பிரதேசச் செயலாளர்களுக்கும் இதுபற்றி விழிப்பூட்டப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அவர்கள் உள்ளடங்களாக அனைத்து அலுவலர்களும் புது உட்சாகத்துடன் கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குவதற்கு எதிர்பார்த்திருக்கின்றனர். அனைத்து 335 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 25 மாவட்டங்களையும் உள்ளடகுகின்ற மொத்த ஒதுக்கீடு மேலும் ரூபா 19,894 மில்லியன் தொகையினை எட்டுகின்றது. இவ்வொதுக்கீடுகளுக்கான ஏற்பாடானது,காணி, சனத்தொகை மற்றும் ஏனைய சமூக – அரசியல் காரணிகளின் காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

"கமசமக பிலிசந்தர" கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 85,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1886 ஆம் ஆண்டிலிருந்து அண்மைக் காலம்வரை அனைத்து வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும் நாம் தேடிப்பார்க்க முடியும். கிராமிய அபிவிருத்திக்கென அத்தகைய பாரிய ஒதுக்கீட்டுத் தொகை வழங்கப்படுகின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமென நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

### 6.8 கொவிட்- 19 உலகளாவிய நோய்த்தொற்றினால் நிவாரணம் வழங்கல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

வரலாற்றில் எந்தவொரு அரசாங்கத்தினாலும் ஒருபோதுமே எதிர்கொள்ளாத மோசமான சவால்களை தற்போதய அரசாங்கம் எதிர்கொண்டது. சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது. அரசாங்க வருவாய் குறைவடைந்தது. வருவாயில் அத்தகைய குறைவுடன் ஒப்பிடுகையில் அரசாங்க செலவினம் எதிர்பாராதளவு உயர்வடைந்தது.

எவ்வாறாயினும் அத்தகைய சவால்களுக்கு மத்தியில் தடுப்பு மருந்து மீதும் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து மக்களைக் குணப்படுத்துவதற்கும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும் பாரிய தொகை செலவுசெய்யப்பட்டது. பணத்தொகையின் 75 சதவீதமானோருக்கு தடுப்பு மருந்தேற்றல் மக்களின் மிகப்பெரிய வெற்றியாக விளங்குகின்றது.

பாதிக்கப்பட்ட அத்துடன் தமது வாழ்வாதாரங்களை இழந்த அனைவருக்கும் நிவாரணப் பொதிகளை வழங்குவதன் மூலம் அனைவரையும் அரசாங்கம் கவனித்தது. ஆயினும் மேலும் சலுகைகளை வழங்குவது மூலம் இன்னும் செயலூக்கம் மிக்கவர்களாக ஆக்கவேண்டிய சிறிய மற்றும் நடுத்தர வியாபார சமூகங்களின் முக்கிய பொருளாதாரத்திற்கு மீளவும் இணைத்துக் கொள்வதற்கான தேவை இன்னும் நிலைத்திருக்கின்றது.

### 6.8.1 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்கான நிவாரணம்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நுண்பாக மற்றும் சிறிய வர்த்தகர்களுக்கு விசேடமாக கடலை, வெற்றிலைக்கூறு, வடை, கஞ்சி, அப்பம், செவ்விளநீர், இளநீர் விற்பனை செய்கின்றவர்களுக்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு வியாபாரம் செய்வதற்கு இயலாமல் உள்ளவர்களுக்கும் நிவாரணம் வழங்குகின்ற முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரித்துள்ளோம். அதேபோன்று நடுத்தர அளவில் கைத்தொழில் செய்பவர்களும் நிவாரணம் பெறவேண்டியவர்களே. ஆகையால், கொவிட்- 19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட நடவடிக்கைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருந்த அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக ரூபா 500 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 6.8.2 நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியின்போது வருமானத்தை இழந்த பாடசாலை வேன் உரிமையாளர்களுக்கான நிவாரணம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கடந்த மாதங்களின் போது பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையினால் தமது வருமான மூலத்தினையிழந்த பாடசாலை வேன் உரிமையாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ரூபா 400 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.8.3 நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் வருமானத்தினை இழந்த முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கான நிவாரணம்

எமது நாளாந்த வாழ்க்கையில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் அத்தியவசிய சேவை வழங்குநர்களாக பணியாற்றுகின்றனர். கடந்த சில மாதங்களாக தமது வாகனங்கள் செலுத்தப்படாமையினால் அவர்களது வருமானத்தினை இழந்த முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.8.4 நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் தமது வருமானத்தினை இழந்த தனியார் பேரூந்து உரிமையாளர்களுக்கான நிவாரணம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதேவிதத்தில் முடக்கல் காலப்பகுதியின் போது தமது பேரூந்துகள் தொழிற்படுத்தப்படாமையினால் அவர்களது வருமானத்தினை இழந்த தனியார் பேரூந்து உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.8.5 முடக்கல் காலப்பகுதியின் போது வருமானத்தை இழந்த விசேட துறைகள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கொவிட் - உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக கலைகள் மற்றும் பொழுது போக்கு அத்துடன் திருமணங்கள் மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் மீது தங்கியிருந்த வருமானத்துறைகள் முழுமையாக

ஸ்தம்பிதமடைந்தன. தொழில் மற்றும் வருமானம் இழத்தல் என்பன மிகவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றது. துறையில் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய சாதனங்களின் பராமரிப்பு போதாமையினால் தொழிலை மீளத் தொடங்குவதில் சிக்கலான நிலையில் உள்ளது. சிலரைப் பொறுத்தவரையில் நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கு மேலதிக செலவுகள் செலவிடப்பட வேண்டியுள்ளது. பல கலைஞர்கள் தற்போது மிகுந்த அழுத்தத்துடன் காணப்படுகின்றனர்.

நாம் செய்ய வேண்டியது, அனைவரினதும் நலனுக்காக அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மீளத்தொடங்குவதாகும். அதனை வசதிப்படுத்துவதற்கு அரசாங்கமானது தடுப்புமருந்தேற்றல் உள்ளடங்களாக அதன் அடிப்படைப் பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. ஆனாலும் நாம் இன்னும் சில பணிகளை செய்ய வேண்டியுள்ளது. இத்துறைக்கு வசதியளித்து ஊக்கமளிப்பதற்கு ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

## 6.9 சூழல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சூழலும் அபிவிருத்தியும் நெருங்கியிணைந்துள்ள துறைகளாகும். சமகாலத்தில் துரிதமான அபிவிருத்தியுடன் மனிதனுக்கும் சூழலுக்குமிடையில் முரண்பாடொன்று தோற்றம் பெறுகின்றது. எனவே, அதனை முகாமை செய்வது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

### 6.9.1 சூழலைப் பாதுகாத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சூழலுக்கு குப்பைகளை அகற்றுவது தேசிய பிரச்சனையொன்றாக தோற்றம் பெற்றுள்ளது. நாம் நீர், மண், பாதுகாப்பு, ஒலி முகாமைத்துவம், திண்மக்கழிவு முகாமைத்துவம், ஆறுகளைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்களாக நகர வனங்கள் மற்றும் அழகுபடுத்தல் என்பவற்றுக்கு எமது கவனத்தைச் செலுத்தியுள்ளோம். ''ஆறுகளைப் பாதுகாப்போம்'' பேணிக்காத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நாடுபூராகவும் சுற்றாடல் நட்புமிக்க விதத்தில் 103 நதிகளையும் நதிப்பள்ளத்தாக்குகளையும் பாதுகாப்பதற்கும் முத்துராஜவன சூழல் உணர்திறன்மிக்க பிரதேசத்தினை பாதுகாப்பதற்கும் ஈரநிலமாக ரம்சர் அபிவிருத்திக்கும் முன்னுரிமை அளித்துள்ளோம். அதற்கமைய சூழல் பாதுகாப்புக்காக ஏற்கனவே செய்யப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக ரூபா 2000 மில்லியன் மேலதிகமாக ஒதுக்கப்பட்டது

### 6.9.2 வனப்பாதுகாப்பு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சனத்தொகை வளர்ச்சி குடியிருப்புக்கள் வளர்ச்சியடைவதற்கேற்ப வனப்போர்வை மீதான தாக்கமும் அதிகரித்துள்ளது. எனவே, எம்மிடம் கிடைக்கப்பெறுகின்ற வனங்களை பாதுகாப்பதற்கும்

- வனப்போர்வையினை 30 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும்
- நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கும்
- ஊடுருவி வளருகின்ற தாவரங்களை அகற்றி நன்மை பயக்கின்ற தாவரங்களைக் கொண்டு வனப்போர்வையினை அதிகரிப்பதற்கும்

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.9.3 வனசீவராசிகள் பாதுகாப்பு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மிருகங்களுக்கு வனங்களுக்குள்ளிருந்தே நீரினையும் உணவினையும் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு சிறிய குளங்களும் வாழ்விடங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயத்திற்கு சேதம் விளைவிக்கின்ற விலங்குகளைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை வனசீவராசிகளைப் பாதுகாப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். ஆகையினால் வனசீவராசிகளைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக ரூபா 1,000 ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.10 பொதுச் சேவைகளும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளும்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பொதுச் சேவைகள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் கல்வி, சுகாதாரம், சுதேச மருத்துவ அபிவிருத்தி, விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி சிறு நீர்ப்பாசனம், வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வசதிகள் மற்றும் பயணிகள் போக்குவரத்து என்பவற்றுக்கு நாம் முதன்மையாகக் கவனம் செலுத்துகின்றோம்.

### 6.10.1 கல்வி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பாடசாலைக் கட்டடங்களின் பௌதீக அபிவிருத்திகள் ஊடாக கல்வியில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் கல்வியின் உண்மையான நன்மைகளை வெளிப்படுத்துவதில்லை என்பது அதிமேதகு சனாதிபதியின் ''கமசமக பிலிசந்தர'' (கிராமத்துடனான கலந்துரையாடல்) – கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் அநேகமான கிராமங்களில் பாடசாலைப் பிள்ளைகளின் கோரிக்கையின் ஊடாக நிரூபனமாகியுள்ளது. அதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

கிராமிய பாடசாலைகளை கவர்ச்சிகரம் மிக்கதான நோக்குடன் ''1000 தேசிய பாடசாலைகள்'' நிறுவும் நிகழ்ச்சித்திட்டமானது தேசிய பாடசாலைகளில்லாத 123 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தேசிய பாடசாலைகளை நிறுவுதல் மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் வசதிகளைத் தரம் உயர்த்தல் வாயிலாக அரசாங்கத்தின் முன்னுரிமை அபிவிருத்திக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதனூடாக, வகுப்பறைகள், மேசைகள், கதிரைகள், மலசலகூடங்கள், குடிநீர், மின்சாரம், ஆசிரியர் விடுதிகளை புனரமைத்தல், பாடசாலைச் சாதனங்கள், ஆய்வுகூடக் கட்டடம், மற்றும் தேவையான உபகரணங்களை வழங்குதல், அருங்கலை அலகுகள் மற்றும் தேவையான வசதிகள் என்பன வழங்கப்படவுள்ளதுடன் தொழில்நுட்ப பாடத்துறையினை பேணுவதற்கு மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

1000 தேசிய பாடசாலைகளை நிறுவுவதற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினூடாக ரூபா 2,200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தினை 3 வருடங்களினுள் துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்தினைத் துரிதப்படுத்தும் பொருட்டும் கல்வித்துறையிலுள்ள வேறு அபிவிருத்திகளுக்காகவும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக வரவுசெலவுத்திட்ட முன்மொழிவாக ரூபா 5,300 மில்லியன் கொண்ட ஒதுக்கீட்டினை உள்ளடக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.10.2 சுகாதார / சுதேச மருத்துவ அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இது தொடர்பில் பிள்ளைகள் மற்றும் உளநல சிகிச்சை நிலையங்கள், கிராமிய வைத்தியசாலைகள், மருந்தகங்கள், சுகாதார வைத்திய அலுவலகங்கள், ஆயுள்வேத வைத்தியசாலைகள், யோகா மற்றும் உளநல சிகிச்சை நிலையங்கள் என்பவற்றை தொடர்ந்து முன்னெடுக்கின்ற முகவராண்மைகளின் அபிவிருத்திக்காக ரூபா 32,650 மில்லியன் கொண்ட ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக ரூபா 5000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.10.3 விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

விளையாட்டு என்பது உடல் ரீதியான உள ரீதியான நல்வாழ்வை பேணுவதற்கு அத்தியவசியமானதாகும். நகரம் கிராமம் இரண்டிலும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவது எமது பொறுப்புடைமையாகும். எனவே கிராமங்கள் மற்றும் பாடசாலை விளையாட்டு மைதானங்கள் அத்துடன் உள்ளக விளையாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு அமைய ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக விளையாட்டு அபிவிருத்திக்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.10.4 சிறிய நீர்ப்பாசனம்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் சிறிய குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள், குளக்கட்டுகள் என்பவற்றின் புனரமைப்பு உள்ளடங்கலாக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 2,000 மில்லியனால் ஒதுக்கீட்டினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.10.5 வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியவசியமானவர்களாகும். தேர்ச்சி பெற்ற தொழிற்படை நாட்டின் சொத்தொன்றாகும். தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களினால் கொண்டுவரப்படுகின்ற வெளிநாட்டு வருவாய்கள் மிகவும் உயர்வானதாகும். தனியார் துறையிலும்கூட பல்துறை தேர்ச்சிபெற்ற இளம் தொழிலாளர்களுக்கு பாரிய கேள்வி காணப்படுகின்றது.

தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியல் கல்விக்காகவும் நகரப் பல்கலைக்கழகங்களுக்காகவும் வசதிகளை வழங்குவதற்கும் பாடசாலைக் கல்வியின் பின்னர் வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்வதற்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக ரூபா 2000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 6.10.6 பயணிகள் போக்குவரத்து (புகையிரதம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை)

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அபிவிருத்திச் செயன்முறைகளுக்காக ஒட்டுமொத்த நாட்டினதும் பங்களிப்பினைப் பெற்று நாட்டின் தேவைகளை நிறைவு செய்வதில் கட்டாயமாகக் காணப்படுகின்ற வினைத்திறன் மிக்க மற்றும்

செயல்திறன் வாய்ந்த போக்குவரத்து முறைமையினை தாபிப்பதன் மூலமே சுபீட்சத்தைக் கொண்ட தேசமொன்றை நோக்கிய பாதையில் செல்லமுடியும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்நோக்கில் பொதுப்போக்குவரத்தும் போக்குவரத்துத்துறையும் தனியார் துறைக்குள்ள வாய்ப்புகளை விரிவுபடுத்தலும் முக்கியமானதாக கருத்திற் கொள்ளப்படுகின்றன. புதிய தொழில்நுட்ப முறைகளுடன் அவை வழங்குகின்ற சேவைகளைப் பேணுவதற்கும் நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையில் தற்குதடையற்ற தொடர்பினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு வசதியான வினைத்திறன்மிக்க, மற்றும் ஒழுக்கமுடைய போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைப் புகையிரதம் ஆகியவற்றுக்காக வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினூடாக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

## 6.11 பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஒழுங்கு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பொதுமக்கள் பாதுகாப்பிற்கு அரசாங்கம் மிகவும் அதிக முன்னுரிமை அளித்துள்ளது. அந்நோக்கத்திற்காக நிறுவப்பட்ட நிறுவனம் பொதுப் பாதுகாப்பு மாத்திரமின்றி மக்களின் நலனோம்புகையிலும் பாரிய பங்காற்றி வருகின்றது.

போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களுடன் நெருங்கிப் பணியாற்றுகின்ற சமுதாய பொலிஸ் சேவையொன்றினை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பொலிஸ் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கிராமிய மட்டத்தில் தொடங்கப்படவுள்ள சமுதாய பொலிஸ் சேவை வசதிகளை வழங்குவதற்கும் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 7,885 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதனை முன்மொழிகின்றேன்.

### 6.11.1 நீதித்துறை மறுசீரமைப்புகளும் உட்கட்டமைப்பு வசதி வழங்கலும்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நீதிமுறைச் செயன்முறைகளில் தாமதங்களை தவிர்ப்பதற்கும் வினைத்திறமின்மைகளை இல்லாதொழிப்பதற்கும் கணிசமான தொகை நிதியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. ரூபா 6,937 மில்லியனுக்கு மேலதிகமாக குற்றவியல் மற்றும் சிவில் மற்றும் வர்த்தகம் தொடர்புபட்ட சட்டங்களில் மறுசீரமைப்புக்களுக்குத் தேவையான மனித வளங்களின் டிஜிட்டல்மயப்படுத்தலூடாக நீதிமுறைத் தொழிற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும் நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்தை தடையின்றி பேணுவதற்கும் ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.11.2 பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அரசாங்கம் பொதுமக்கள் பாதுகாப்புக்காக மிக உயர்ந்த முன்னுரிமையினை வழங்கியுள்ளது. இந் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் பொதுமக்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குவது மாத்திரமன்றி மக்களின் நலனையும் பாதுகாக்கின்றது.

போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களுடன் மிக நெருக்கமாக சேவையாற்றும் சமுதாய பொலிஸ் சேவையொன்றினை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பொலிஸ் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 7,885

மில்லியனுக்கு மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கும் ஏற்கனவே இருக்கின்ற சமுதாய பொலிஸ் தேவைக்கான வசதிகளை வழங்குவதற்கு மேலும் ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 6.11.3 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்துள்ளமையினால் சிறைச்சாலைகளில் நெருக்கடி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படாமை காரணமாக சுகாதார பிரச்சனைகள் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகையினால் அனைத்து சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக ரூபா 200 மில்லியனை மேலதிகமாக ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

### 6.11.4 எமது சிரேட்ட பிரசைகள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு வசதிகளை வழங்குதல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

விசேட தேவையுடையவர்களுக்கு வசதிகளை வழங்கும் அதே வேளை முதியோரினை பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 6.12 மனைப் பொருளாதாரத்தினை பாதுகாத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அரசாங்கம் சமூக நலன்புரி மற்றும் மானியம் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களை பாரியளவு செயற்படுத்துகின்றது. எண்ணிக்கையில் பார்க்கும்போது அது கிட்டத்தட்ட ஐம்பது (50) ஆகும். அவற்றினை இங்கு விபரிக்க வேண்டுமாயின் நீண்டதொரு அறிக்கையினை வாசிக்க வேண்டியேற்படும் எனவே அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். ஓய்வூதியம் சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர் உதவுதொகை, பாடசாலை சிறுவர்களுக்கான போசாக்குணவுக் கொடுப்பனவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான *சுரக்ஷா* காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் என்பன இவற்றுள் முக்கியமானவையாகும் இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கான இவ்வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 600,000 மில்லியனாகும்.

கொவிட் தொற்றுநோய் ஏற்பட்டதுடன் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்ததுடன் எரிவாயு விலை அதிகரிப்பு, கப்பற் கட்டணம் அதிகரித்தமை, பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திச் செலவினம் அதிகரித்தமை போன்ற காரணங்களினால் உலகளாவிய ரீதியில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. எனவே, உள்நாட்டுச் சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு காரணமாக பொது மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது.

மொத்த அரசாங்க செலவினத்திற்கு சமாந்தரமாக சமூக நலன்புரி மற்றும் மானிய வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மிகவும் அதிகமாகும். சமுர்த்தி உதவுதொகை போன்ற ஏனைய நன்மைகள் உண்மையாகக் கிடைக்க வேண்டிய தகுதியுடைய பயனாளர்களுக்கு கிடைக்கின்றதா என்பதனை உறுதிப்படுத்த வேண்டிய காலம் தற்பொழுது வந்துள்ளது. அவர்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தி, சமுர்த்திக் கொடுப்பனவினை அவர்களது அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்துகின்ற மனோபாவத்திற்கு பதிலாக அத்தொகையினை அவர்களது சேமிப்பு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிட வேண்டியுள்ளது. இதனை விமர்சன ரீதியாக நோக்குவதற்கு சமூகம் எம்மை நிர்ப்பணித்துள்ளது.

எனவே, வறியவர்கள் தொடர்பாக நம்பிக்கையுடன் நோக்கி அவர்களது உள்ளார்ந்த ஆற்றல் தொடர்பான சிந்தனையினை அதிகரித்து தொழில் முயற்சியாண்மை ஆற்றலினை அதிகரித்து கிராமங்களின் உற்பத்திகளுக்கு சிறந்த பெறுமதி சேர்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அதிகரித்து நவீன தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதுடன் சந்தை வலையமைப்புடன் அவர்களை தொடர்புபடுத்தி அவர்களது சொந்தக் கால்களில் மீண்டும் எழுந்து நிற்பதற்கான சக்தியினைப் பெற்றதுடன் போசாக்கு நிறைந்த உணவின் மூலம் தன்னிறைவு பெற்றவர்களாக அம்மக்களினை மாற்றுகின்ற வேலைத்திட்டத்தின் அவசியம் அதிகளவு காணப்படுகின்றது. அதற்காக மூன்று தொகுதிகளாக நாம் தயாரித்த வேலைத்திட்டம் மனைப் பொருளாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமாக இனங் காணப்பட்டுள்ளது.

**இதனடிப்படையில், இந்த மனைப் பொருளாதாரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குள் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூபா 31,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.**

### 6.12.1 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் உணவுப்பொதி

**கௌரவ சபாநாயகர் அவர்களே**

மனைப் பொருளாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் அதிகூடிய முன்னுரிமையானது தாயின் தலைமையில் இலங்கையில் உருவாகின்ற எதிர்கால சந்ததியினரின் போசாக்கு பற்றியதாகும். உண்மையில் நாட்டுக்கு அவசியமானது அறிவார்ந்த சந்ததியொன்றாகும். பிறக்கின்ற குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சி அதிகளவு இடம்பெறுவது தாயின் மடியில் என்பதுடன் பிரசவம் நிகழ்ந்ததிலிருந்து ஆரம்ப காலத்திலாகும். எனவே பிறக்கின்ற குழந்தைகளினதும் தாய்மாரினதும் போசாக்கு மிகவும் முக்கியமானதாகும்.

எனவே, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது 10 மாதங்கள்வரை வழங்கப்படுகின்ற ரூபா 10,000 பெறுமதியான உணவுப் பொதியினை 24 மாதங்களுக்கு அதாவது, 2 வருடங்கள் வரை நீடித்து தொடர்ந்து வழங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

இதனடிப்படையில், இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 4,000 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 1,000 ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

### 6.12.2 வீட்டுணவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - சஹன மல்ல உணவுப் பொதி

கௌரவ சபாநாயகர் அவர்களே,

தாய் மற்றும் சேயினது போசாக்குடன் குடும்பத்தினது போசாக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கு, கிராம சேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் பொருளாதார ரீதியாக வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 15,000 மில்லியன் நிதி ஒதுகீடு செய்யப்படுகின்றது.

### 6.12.3 பெண் தொழில்முயற்சியாளர்களுக்காக சிறிய கடைத்தொகுதி வழியமைப்பினை ஏற்படுத்துதல். சிறிய சந்தை வழியமைப்பினை ஏற்படுத்துதல்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இதுவரை தாய், சேய் உள்ளடங்களாக முழு குடும்பத்திற்குமான போசாக்கு தொடர்பாக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு எமது நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று அவர்களது பொருளாதாரத்தினை வலுப்படுத்த வேண்டிய தேவையினை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, பெண் தொழில்முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றினை நாம் நாடுமுழுவதிலும் செயற்படுத்தி வருகின்றோம்.

கடந்த தொற்றுநோய் காலப்பகுதியில் கிராமங்களுக்கு அத்தியவசிய உணவுப் பொருட்களை பகிரந்தளிக்கும் போது எமக்குக் கிடைத்த அனுபவங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான அடிப்படையாக அமைந்தன. அவை,

- கிராமிய மக்களின் உணவுத் தேவையினை நிறைவு செய்தல்
- கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், உள்ளடங்களாக ஏனைய பொருட்களினைச் சந்தைப்படுத்தல்
- தகவல் தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்ட பிரதான வழங்கல் வலையமைப்பு மற்றும் இணைப்பு
- எந்தவொரு அனர்த்தத்தின் போதும் தொடரான வழங்கல் மற்றும் பகிர்வினை உறுதிப்படுத்தல்.

சிறிய கடைத்தொகுதி வலையமைப்பினை கிராம சேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் உருவாக்கும் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 15,000 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### 6.13 அரசாங்க சேவை

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அரசாங்க சேவை தொழிற்பாடுகள் அதிகூடிய செலவினத்தினை ஏற்படுத்தியபோதிலும் வினைத்திறன்மிக்க அரசாங்க சேவை எதிர்பார்க்கப்படுவதுடன் இறுக்கமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் காலநீடிப்பு மற்றும் காலங்கடந்த நிர்வாக முறைமைகள் மற்றம் நடைமுறைகள் காணப்படுவதனால் பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் போது அதிக முயற்சியினை எடுக்க வேண்டியுள்ளதுடன் கால விரையம் செலவு என்பன ஏற்படுகின்றது.

### 6.13.1 அரசாங்க சேவை – டிஜிட்டல்மயப்படுத்தல்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எனவே, அரசாங்க சேவையில் உற்பத்திதிறனை அதிகரிப்பதற்கு அரச சேவையினை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,500 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 6.13.2 அரசாங்க ஊழியர்களுக்கான மோட்டார்சைக்கில்கள்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2014 இல் கள உத்தியோகத்தர்களினால் வழங்கப்படுகின்ற அரசாங்க சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு மோட்டார் சைக்கில்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நாம் ஆரம்பித்தோம். இம் முன்னெடுப்பின் கீழ் 146,381 கள அலுவலர்கள் மோட்டார் சைக்கில்களைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்கள் தமது அரசாங்க சேவையினை வழங்குவதற்கு குறித்த மோட்டார் சைக்கில்களை பயன்படுத்துவதை இன்று நான் காணும்போது மகிழ்ச்சியடைகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இந்நிகழ்ச்சித்திட்டத்தினை மீண்டும்அறிமுகப்படுத்துவதற்கு நான்திட்டமிட்டுள்ளதுடன் அதன் நன்மைகளை அரசாங்க ஊழியர்களுக்கு மாற்றுகின்ற முறைமையொன்றினையும் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**6.13.3 ஆசிரியர் மற்றும் அதிபர் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்.**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

ஆசிரியர் - அதிபர் சேவைகளின் சம்பள முரண்பாட்டினை நீக்குமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்து அரசாங்கத்தின் மூலம் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2021.8.30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினை விரைவாக செயற்படுத்துவதற்காக மேலும் ரூபா 30,000 மில்லியனை சம்பளமாக உட்சேர்ப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

இது ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பளம் தொடர்பாக தற்பொழுது செலவிடப்படுகின்ற ரூபா 109,000 மில்லியனுக்கு அதிக தொகையினைவிட மேலதிக ஒதுக்கீடாகும்.

**6.13.4 பட்டதாரிகளை சேவையில் நிரந்தரமாக்கல்**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

தற்பொழுது பயிலுநராக அரசாங்க சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட 53,000 இற்கு அதிக பட்டதாரிகளுக்கு 2022 சனவரி மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக ரூபா 27,600 மில்லியன் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, குறித்த முழுத் தொகையினையும் இவ் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 20,000 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 7,600 மில்லியன் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.13.5 2015 - 2019 காலப்பகுதியில் அரசியல் பலிவாங்களுக்குட்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்**

வெற்றிபெற்றவர்களினால் எதிர்த்தரப்பினரை துன்பத்திற்கு ஆளாக்குவது நவீன சமூகத்தில் மிகவும் வெறுக்கத்தக்க கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆயினும் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் எதிர்பரப்பு அரசியல் கருத்துடையவர்கள் மிகவும் மனிதாபிமானமற்ற வகையில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்களது மனோநிலையினை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அக்காலப்பகுதியில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது எமது கடப்பாடாக மாறியுள்ளது. இவை அனைத்துக்குமாக நீதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**6.13.6 ஓய்வூதியம் பெறுநர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குதல்**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

மிக நீண்டகாலமாக ஓய்வூதியம் பெறுநர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையான ஓய்வூதிய முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொறுத்தமான செயன்முறையொன்றின்பால் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் ஓய்வூதிய முரண்பாட்டினை தீர்க்கின்ற அடிப்படைச் செயற்பாடுகளுக்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6.14 **ஏனைய விசேட நிதி ஏற்பாடுகள்**

6.14.1 **பௌத்த விகாரைகள் மற்றும் மதஸ்தளங்கள் பராமரிப்பு**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எமது நாகரீகம் கட்டியெழுப்பப்பட்டிருப்பது எமது கிராமிய பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்ட கலாசாரங்களின் பின்னணியிலாகும். இக்கலாசாரமானது மிகவும் செல்வாக்குமிக்கதாகும். ஆயினும் இன்றும் பின்தங்கிய பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் மற்றும் மதஸ் தலங்கள் பல

அடிப்படை வசதிகளைக்கூட பெற்றுக் கொள்ள முடியாதளவு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இவ்வாறான பின்னணியில் காணப்படுகின்ற கஷ்டப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் மற்றும் மதஸ் தளங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

6.14.2 **பல்வேறு காலங்களில் காணாமற்போனவர்களுக்கான நட்டஈடு**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

பல்வேறு காரணங்களினால் பல்வேறு காலப்பகுதியில் காணாமற் போனவர்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கு வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒருக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

6.14.3 **உயர் தொழில்புரிநர் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் பங்களிப்பினை வழங்குதல்.**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

நாட்டின் அபிவிருத்திக்காக உயர் தொழில் புரிநர்கள் வழங்கிவருகின்ற பங்களிப்பு மிகவும் விசேடமானது. உயர் தொழில் புரிநர்கள் வியாபாரிகள் அல்லர். அவர்களது தொழில் நிபுணத்துவம் புதிய சந்ததியினருக்கும் சென்றடைதல் வேண்டும். சர்வதேச மட்டத்தில் உயர் தொழில் புரிநர் நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி உலகளாவிய புதிய நிபுணத்துவத்தினை இந்நாட்டுக்கு வழங்குவது அவர்களது பொறுப்புடமையாகும்.

இவ்வாறான உயர் தொழில் புரிநர்களின் கடமைகளை நிறைவேற்றுவதனை இலகுபடுத்துவதற்கு உயர் தொழில் புரிநர்களின் சங்கங்களுக்கு ரூபா 100 மில்லியனை வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக உட்சேர்ப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 7.0 வருமான முன்மொழிவுகள்

## 7.1 இலங்கையின் அரசாங்க வருமானம்

அரசாங்க வருமானம், மொத்த தேசிய உற்பத்தியில் சதவீதமாக குறைவடைந்து செல்கின்ற வீழ்ச்சியினைக் காணக்கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் 1950-1999 காலப்பகுதியில் 21.9 சதவீதமாக அரசாங்க வருமானம் காணப்பட்டதுடன், 2000-2009 காலப்பகுதியில் 16.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கொவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் தாக்கத்தின் காரணமாக 2020 வருடமாகும் பொழுது அரசாங்க வருமானம் 9.2 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**7.2** இலங்கைப் பொருளாதாரத்தைப் பற்றி திறனாய்வு செய்யும் போது, பெரும்பாலும் ஒப்பிட்டு நோக்குவதற்கு எடுக்கப்படுகின்ற நாடுகளில் அந்த வருமான சதவீதம் இலங்கையுடன் ஒப்பிடும்போது அதிகூடிய பெறுமதியை பெறுகின்றது. மலேசியாவில் அது நூற்றுக்கு 20.2 சதவீதம் தாய்லாந்தில் நூற்றுக்கு 20.6 சதவீதம் இந்தியாவில் நூற்றுக்கு 18.3 சதவீதம் சிங்கப்பூரில் நூற்றுக்கு 17.6 சதவீதமாகும். ஒருசில வளர்ந்துவரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் அரசாங்க வருமானம் நூற்றுக்கு 25 சதவீதத்துக்கும் கூடிய பெறுமதியை பேணி வருகின்றது. உதாரணமாக பிரேசில் நூற்றுக்கு 29.4 சதவீதம் மற்றும் சீனா நூற்றுக்கு 25.3 சதவீதம். அதேபோன்று எமது வரி நிருவாகத்தில் வினைத்திறனின்மையின் காரணமாக இழக்கின்ற அரசாங்க வருமானமும் அதிகூடிய பெறுமதியைத் தருகின்றது. அதனால் வரி இணக்கத்தை (Tax Compliance) அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.3 அரசாங்க வருமானம் அவ்வாறு குறைவடைந்துள்ள போதிலும், செலவினமும் அதிகரித்துள்ளது. கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அமைந்த அசாதாரன தாக்கமும் இதற்கு ஒரு காரணமாகும். அரசாங்கத்தின் வட்டிக் கொடுப்பனவும் அரசாங்க வருமானத்தின் சதவீதமாக 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 71.4 சதவீதமாகும். சம்பளக் கொடுப்பனவு அரசாங்க வருமானத்தின் சதவீதமாக 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 57.8 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. மீண்டெழும் செலவினம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,548 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. அரசாங்க வருமானம் அன்றாடம் செலவாகின்ற மீண்டுவரும் செலவினமும் ஈடுசெய்து கொள்ள முடியாத மட்டத்தை அடைந்துள்ளது. அதற்கு அமைவாக மீண்டெழும் கணக்கின் பற்றாக்குறை அந்த மொத்த வருமானத்திலிருந்து மீண்டெழும் செலவைக் கழித்ததன் பின்னரான பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2010-2014 இல் நூற்றுக்கு 1.1 இலிருந்து 2015-2019 இல் நூற்றுக்கு 1.7 சதவீதம்வரை சதவீத இலக்கம் 0.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அது 2020 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு 7.9 வரை அதிகரித்திருந்தது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.4 அதேபோன்று ஆரம்பக் கணக்கின் பற்றாக்குறை (மொத்த வருமானத்தின் வட்டிக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய செலவினங்களைக் கழித்ததன் பின்னரான பெறுமதி) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான 2010 ஆம் ஆண்டு நூற்றுக்கு 1.5 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளையில் 2015 இல் அது நூற்றுக்கு 2.9 சதவீதம் வரையும் 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4.6 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்தது. இதன் மூலம் வட்டிக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய செலவினங்களுக்கான அரசாங்கத்தின் செலவினம் அதிகரிக்கும் நிலையை பிரதிபலிக்கின்றது. இந்தத் தொகை ஆரம்பக் கடன்தொகையுடன் சேர்ந்து மொத்தக் கடனின் அளவு விசாலமடைகின்றது. அதனால் இந்த ஆரம்பக் கணக்குப் பற்றாக்குறையை நூற்றுக்கு 3 சதவீதம் வரை குறைத்துக்கொள்ளும் தேவை காணப்படுகின்றது. அதற்கு அமைவாக 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்பக் கணக்கில் மிகையொன்றைப் பதிவு செய்வது எமது நோக்கமாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.5. வரவுசெலவு மிகையொன்று பதிவாகிய 1954 மற்றும் 1955 ஆகிய இரண்டு வருடங்களின் பின்னர் தொடர்ச்சியாக வரவுசெலவுப் பற்றாக்குறையொன்று பதிவாகியிருக்கின்றது. அந்தப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான 2020 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு 11.1 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. அதனால் கடன் தொகையும் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் மொத்தக் கடன் சதவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நூற்றுக்கு 101.0 வரை அதிகரித்துள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.6. இதன் காரணமாக அரசிறைத் திரட்சியின் (Fiscal Consolidation) முக்கியத்துவம் முன்னெப்போதும் இல்லாதவாறு அளவில் வெளிப்பட்டுள்ளது. வரவுசெலவுப் பற்றாக்குறை 2022 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 8.8 சதவீதம் வரையிலும் 2024 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 6.1 சதவீதம் வரையிலும் குறைத்து 2025 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு 4.8 சதவீத மட்டம் வரையிலும் குறைத்துக் கொள்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம். 2028 ஆம் ஆண்டளவில் சமநிலையான வரவுசெலவுத்திட்டம் ஒன்றை நோக்கிச் செல்வது எமது எதிர்பார்ப்பாகும். வரவுசெலவுப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக சிறந்த செலவின முகாமைத்துவமும் வரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் நட்டமடைகின்ற அரசாங்கத் தொழில் முயற்சிகளை மறுசீரமைக்கவும் வேண்டியுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.7 இந்த அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர், வரி செலுத்துநர்களுக்கு வசதிகளை வழங்குவதனையும் வரி இணக்கத்தை அதிகரித்துக்கொள்வதையும் நோக்காகக் கொண்டு இலகுவான, வெளிப்படைத் தன்மையைக் கொண்ட மற்றும் வினைத்திறன்மிக்க வரிமுறை ஒன்றை உருக்குவாக்குவற்கு நடவடிக்கை எடுத்தோம். இந்த வரித் திருத்தங்களின் மூலம் விசேடமாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்கள் சிக்கியிருந்த கடுமையான வரி மற்றும் கடன் பொறியிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கும் வரியைக் குறைப்பதன் காரணமாக மிகையினை புதிய முதலீடுகளுக்காக பயன்படுத்துவதற்கும் நாம் எதிர்பார்த்தோம். எவ்வாறாயினும் இந்த எதிர்பார்ப்பு கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஓரளவு விலகிச் சென்றது. இருப்பினும், தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார அழுத்தத்துக்கு மத்தியில் மக்கள்மீது சுமத்தப்பட்ட தாக்கத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அந்த வரித் திருத்தத்தை அரசிறை தூண்டுதலாகவும் செயற்பட்டது என்பதை நாம் நம்புகிறோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

7.8 நாட்டின் அரசிறை நிலைமையை வலுவூட்டுவதற்காக அரசாங்க வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு பின்வரும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அதேபோன்ற கொவிட் நிலைமைக்கு பின்னரும் நாட்டின் பொருளாதாரத்தை சுமூகநிலைக்குக் கொண்டுவருவதற்கு இந்த முன்மொழிவுகள் துணையாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**7.9 ஒரு தடவை மாத்திரம் அறவிடுகின்ற வரி**

i. 2020/2021 மதிப்பீட்டு ஆண்டுக்காக ரூபா 2,000 மில்லியனுக்குக் கூடுதலான வரியை அறவிடக்கூடிய வருமானம் ஒன்றை சம்பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது கம்பனியின்மீது ஒரு தடவை மாத்திரம் அறவிடுகின்ற நூற்றுக்கு 25 சதவீத வரியொன்றை அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன். இந்த வரியின் மூலம் சுமார் ரூபா 100 பில்லியன்களை சம்பாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

ii. நிதிச்சேவை நிறுவனத்தினால் நிதிச்சேவைகளை வழங்குதல் சம்பந்தமான பெறுமதி சேர்த்தலின் அடிப்படையில் நூற்றுக்கு 8 சதவீதத்தின் கீழ் வரியொன்றை அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன். இந்த வரியானது 2022 சனவரி முதலாந் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஒவ்வொரு மாதமும் செலுத்துதல் வேண்டும். அதேபோன்று இந்த வரியை நுகர்வோர் மீது செலுத்துதல் கூடாது. இதன் மூலம் ரூபா 14 பில்லியன்களை சம்பாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

**7.10 சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை**

கொவிட் தொற்றுநோய் காரணமாக தாக்கத்திற்கு உள்ளான இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் சுமூக நிலைக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் ''சமூகப்பாதுகாப்பு பங்களிப்புத் தொகையை'' (Security Contribution) அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன். நூற்றுக்கு 3 சதவீதத்தின்கீழ் ஓராண்டுக்கு ரூபா 120 மில்லியனைத் தாண்டுகின்ற இந்த தொகைக்குக் கீழ் பிறழ்வின் அடிப்படையில் இந்த பங்களிப்புத் தொகையை அறவிடுகின்றோம். இந்தப் பங்களிப்புத்தொகை மூலம் ரூபா 140 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கிறேன். இது 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறுகின்றது.

### 7.11 சிகரெட் மீதான உற்பத்தி வரி

சிகரட்மீது அறவிடப்படுகின்ற வரியை உடனடியாக செயல்வலுப்பெறும் விதமாக அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். அதற்கு அமைவாக ஒரு சிகரட்டின் விலை ஐந்து ரூபாவினால் (5) அதிகரிக்கும். இதன் மூலம் ரூபா எட்டு (8) பில்லியன் வருமானம் ஒன்றை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

### 7.12 மது வரி

உடனடியாக செயல்வலுப் பெறும் விதமாக மது வரியை அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். இந்த வரியை அதிகரிப்பதன் மூலம் ரூபா 25 பில்லியன் மேலதிக வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

### 7.13 மோட்டார் வாகனம்

7.13.1 மோட்டார் வாகன விபத்துக்கு உள்ளாகும் வாகனங்கள் சம்பந்தமாக கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கும், அந்த கட்டணத்தை காப்புறுதியொன்றின் மூலம் மீள்நிரப்பல் செய்துகொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் முன்மொழிகிறேன். இதன் மூலம் இடம்பெறுகின்ற மோட்டார் வாகன விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

7.13.2 அதேபோன்று வாகனத்தை நவீனமயப்படுத்தல், மாற்றுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கும் சலுகைக் காலம் ஒன்றை உள்ளடக்கியதாக தண்டப் பணத்தை செலுத்துவதற்கு உட்பட்டு வாகனத்தை செலுத்துவதற்கு தகுதியான சட்டரீதியல்லாத மோட்டார் வாகனங்களையும் மோட்டார் சைக்கிளையும் சட்டரீதியாக பதிவு செய்வதற்கும் முன்மொழிகிறேன்.

7.13.3 அதேபோன்று விடுவித்துக் கொள்வதற்கு தொடர்புடைய வரித் தொகையை செலுத்தாமை மற்றும் ஏனைய பல்வேறு காரணிகளின் காரணமாக இலங்கை சுங்கத் திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சகல வாகனங்களையும் விடுவிப்பதற்கும் முன்மொழிகிறேன். உரிய வரித் தொகையையும் தண்டப் பணத்தையும் செலுத்துவதற்கு உட்பட்டு அவை இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன.

7.13.4 இந்த முன்மொழிவின் மூலம் ரூபா நான்கு (4) பில்லியன் மேலதிக வருமானத்தை சம்பாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7.14 வரி நிருவாகம்

7.14.1 வரி நிர்வாகத்தை எளிமைப்படுத்துவதற்கும், அதன் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், இந்த அரசாங்கத்தினால் 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் பல முன்னெடுப்புகளை எடுத்திருந்தது. இது சம்பந்தமாக பாரிய வரி செலுத்துனர்களிடமிருந்து (LTU) திரட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரிப்பதற்காக பாரிய வரி செலுத்துனர்களின் பிரிவு மேல் கூட்டுறவுப் பிரிவு (UCU) ஆகியவற்றை தொடர்ந்தும் வலுவூட்டுவதற்காக முன்மொழிகிறேன்.

7.14.2 அதேபோன்று வருமானத்தை திரட்டுகின்ற நிறுவனங்களில் டிஜிட்டல் வருமான சேகரிப்பு தொகுதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் தொகுதி (RAMIS) மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தனிச் சாளரத் தொகுதி (Single Window) சம்பந்தமாக காணப்படுகின்ற பலவீனங்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு முன்மொழிகிறேன்.

7.14.3 இதற்கு மேலதிகமாக, மதுவரித் திணைக்களத்தின் டிஜிட்டல் வருமான சேகரிப்பு தொகுதி நடைமுறைப்படுத்துவதனைத் துரிதப்படுத்துவதற்கு மதுவரி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதனை எளிமைப்படுத்துவதற்கு முன்மொழிகிறேன்.

7.14.4 மேலும், மேலே குறிப்பிடப்பட்ட டிஜிட்டல் வருமான சேகரிப்பு தொகுதியினூடாக வரி அறிக்கையை கோப்பிடும்போது வரி ஆவணங்களின் செம்மை தன்மையை பரிசீலனை செய்வதற்கு உரிய

முறைகளைக் கொண்டதாக செல்லுபடியாகும் ஆவணமாக டிஜிட்டல் இன்வொய்ஸையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க கூடிய எல்லா சந்தர்ப்பங்களிலும் இடமளிப்பதற்கு முன்மொழிகிறேன்.

**7.15 பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்பட்ட பணம்**

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் திகதி வரையான கால எல்லைக்குள் திறைசேரி முறி வெளியிடப்பட்டமை தொடர்பாக பரிசீலனை செய்து, விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மீயுயர் நீதிமன்ற நீதிபதி கே.ரி.சித்திரசிறி அவர்களின் தலைமையில் மூவர் அடங்கிய சனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அப்போதிருந்த அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டது.

அந்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக 2016 பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து 2016 மார்ச்சு 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிடெட் நிறுவனத்தினால் ஊழியர் சேமலாப நிதியம், ஏனைய நியதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு திறைசேரி முறிகளை விற்பனை செய்யும்போது அந்த நிறுவனத்தினால் கிடைத்த இலாபம் பிரதானமாக ''விலை கூறுணர்வு உள்ளகத் தகவல்'' மற்றும் ''சந்தையை முறையற்ற விதத்தில் கையாளுதல்'' காரணமாக பெறப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக 1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட கையிருப்பு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்ப விற்பனையாளர்களுக்கு சிறந்த நடைமுறையை வழங்கும்பொருட்டு வெளியிடப்பட்டுள்ள நடத்தைக் கோவையின் ஏற்பாட்டை வேண்டுமென்றே மீறும் விதத்தில் செயற்பட்டு ரூபா 8.5 பில்லியன் சம்பாதித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நீதிபதி அவர்களினால் எடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு கேடு விளைவிக்காத விதத்தில் பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிட்டெட் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியின் நடத்தைக் கோவையை மீறி சம்பாதிக்கப்பட்ட ரூபா 8.5 பில்லியன் தொகையை பொதுத் திறைசேரிக்கு மாற்றுவதற்கு முன்மொழிகின்றேன்.

**7.16 பொழுதுபோக்கு அனுமதிப்பத்திர கட்டணம்.**

விசேட வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்ட விசேட பிரதேசத்துக்கான பொழுதுபோக்கு நடவடிக்கை சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**7.17 இலங்கை தொடர்பாடல் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம்.**

நிலையான தொலைபேசி செயற்பாட்டாளர்கள். செல்லிடத் தொலைபேசி செயற்பாட்டாளர்கள், இணையத்தள சேவை வழங்குநர்கள் மற்றும் செய்மதி ஒலிபரப்பு செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சேவைகள் சம்பந்தமாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான அனுமதிப் பத்திரங்களை எதிர்பார்ப்பவர்களினால் தொலைத் தொடர்பு சேவை சம்பந்தமாக பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் இவ்வாறான அனுமதிப் பத்திரத்தை ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கு முன்மொழிகின்றேன். மேலும் தகவல் தொழில்நுட்பக் கலத்தில் உள்ளடக்கப்படவுள்ள 5ஜீ அலைவரிசையை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு முன்மொழிகிறேன்.

## 8. புத்துயிரளித்தலுக்கான பேரண்டப் பொருளாதார தொலைநோக்கு

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

இவ்வரவுசெலவுத்திட்டத்தினைத் தயாரிக்கையில் எமது தேசிய உற்பத்தி பொருளாதாரத்தினை வலிமைப்படுத்துகின்ற விதத்தில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் எமது நாட்டைத் திறப்பதற்குத் தேவையான 5 முக்கிய ஐந்தொகைகளை மையப்படுத்துவதற்கு நான் முயற்சித்தேன்.

1. எமது நாட்டின் மக்களை இலக்காகக் கொள்கின்ற மனிதவள அபிவிருத்தி (மனிதவள தொகுப்பு)
2. உயிர்பல்வகைமையினால் செழிப்புற்ற சூழல் பாதுகாப்பு
3. எமது சர்வதேச வர்த்தகத்தையும் நிதியியல் நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்ற சென்மதி நிலுவைகள்
4. அரசாங்க வருவாயினையும் செலவினத்தையும் உள்ளடக்குகின்ற அரசநிதி மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டம்
5. வங்கிகளும் நிதியியல் நடவடிக்கைகளும்

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.1 ''சுபீட்சத்தின் நோக்கு'' என்பது உயிர்பல்வகைமையுடன் செழிப்புற்ற சூழல் நட்புமிகு நிலைபேறான அபிவிருத்தியாகும். இந்நோக்குத் தொடர்பில் நாம் சேதன விவசாயத்தின்மீது தங்கியிருக்கின்றோம். நீர்ப்பாசன சுபீட்சம், ஆறுகளைப் பாதுகாப்போம், ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், வசதிக்குட்படுத்துகின்ற தொடர்புகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம், மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி நிகழ்ச்சித்திட்டம் என்பன இவ் வரவு செலவுத்திட்டத்தின் அபிவிருத்தி அணுகுமுறையாக முன்மொழியப்பட்டன. இவற்றின் மீது கட்டியெழுப்புகின்ற தேசிய உற்பத்திப் பொருளாதாரத்துக்கு தேவையான பல்வேறு துறைகளுக்கான முன்மொழிவுகள் உருவாக்கப்பட்டன. சூழலைப் பாதுகாத்தல், உணவுப் பாதுகாப்பு, பாதுகாப்பான நீர் மற்றும் நிலம், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு என்பன மீது பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

அனைத்து மாகாணங்களுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கக்கூடிய வசதிக்குட்படுத்துகின்ற பொருளாதார அபிவிருத்தியொன்றுக்காக முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. 2021 இன் முதல் இரு காலாண்டுகளினுள் நாடு, உற்பத்திப்பொருளாதாரத்தில் 8 சதவீத வளர்ச்சியினை அடையக் கூடியதாகவிருந்தது. 2020 இன் பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் அதுவொரு வளர்ச்சியாகவிருந்த போதிலும் நான் தயாரித்த முன்மொழிவுகளினூடாக 2022-2027 ஐக்கொண்ட ஐந்து வருட காலப்பகுதியின் போது 6 சதவீதத்திற்கு அதிகமான பொருளாதார வளர்ச்சியினை எதிர்பார்க்கின்றேன். பொருட்கள் மற்றும் சேவைகளின் வளங்கள் மீளமைத்தலுடன் இணைந்து ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட செயன்முறையும் எமது வாழ்க்கைச் செலவு வீதத்தினைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.2 மனித மூலதன அபிவிருத்தியானது எமது பொருளாதார அபிவிருத்தியின் மையமாகக் கருதப்படுகின்றது. மனித வளங்கள் அபிவிருத்திக்கு அதிக முன்னுரிமையளிக்க வேண்டுமென்பதால் இந்நாட்டின் சனத்தொகையின் 75 சதவீதத்திற்குமேல் தடுப்பூசி வழங்குவதற்கும் கொவிட் - 19 வைரசிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியினைப் பேணுவதற்குத் தேவையான செயலூக்க மருந்தினை அவர்களுக்கு வழங்குவதற்கும் பாரிய முதலீடு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு இசைவாக மனிதவள அபிவிருத்தியின் பல்வேறு நோக்குகளையும் உள்ளடக்குவதன் மூலம் நிலம், நீர், உணவு, வீடமைப்பு மற்றும் ஆரோக்கியமான சூழல் அதேபோன்று திறனடிப்படையிலமைந்த கல்வி மற்றும் விளையாட்டு வசதிகள் என்பனவற்றுக்கு விசேட கவனம் செலுத்தியுள்ளேன். சமய மற்றும் கலாசார நன்கொடைகளை பேணிவளர்ப்பதன் மூலம் சுபீட்சமான குடும்பமொன்றினைக் கட்டியெழுப்பும் கடமையின் மீதும் நாம் கவனம்

செலுத்தினோம். தமது பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல், அவர்களது பொருளாதார கஷ்டங்களை ஒழித்தல் மற்றும் அவர்களது மாற்றமடைகின்ற இலக்குகளையும் எதிர்கால எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்தல் என்பவற்றுக்காக பல்வேறு முன்மொழிவுகளை நான் முன்வைத்தேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.3 எமது நாட்டின் சர்வதேச வர்த்தகம் நிதி மற்றும் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் என்பவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்கான தொலைநோக்கொன்றினை நாம் கொண்டிருக்கவேண்டும். தற்போதுள்ளவாறு வெளிநாட்டு ஒதுக்குகளின் குறைவான அளவினை நாம் கொண்டிருப்பது மாத்திரமன்றி அதுவும் கொடுகடன் ஒதுக்கொன்றாகும் என்பதை நான் கட்டாயம் குறிப்பிட வேண்டும். இதனை எமக்குவிட்டுச்சென்ற முன்னைய அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது நட்பு நாடுகளின் ஆதரவுடன் குறுகிய காலோட்டத்தின் இன்நிலைமையினை முகாமை செய்வதற்கு நாம் முயற்சிகளை எடுக்கின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.4 எவ்வாறாயினும், எமது இலக்கு எமது வெளிநாட்டு ஒதுக்குகளை நிலைபெறத்தக்கவாறு உயர்வான மட்டமொன்றுக்கு கட்டியெழுப்பவேண்டுமாக இருக்கவேண்டும். 2027 அளவில் எமது நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 10,000 மில்லியனாக அதிகரிப்பதே எனது இலக்கு. இதனை அடைந்துகொள்வதற்கு, 2022 அளவில் ஐ.அ.டொலர் 19,000 மில்லியனாக இருப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்டு வருகின்ற எமது மொத்த ஏற்றுமதிகளை அதிகரிப்பதே எனது இலக்காகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.5 எமது ஏற்றுமதிகள் 2021 ஒக்டோபர் அளவில் ஐ.அ.டொலர் 10,028 மில்லியனாக அதிகரித்தமை ஊக்கமளிக்கின்றது. முழு வருடத்திற்கும் ஐ.அ.டொலர் 11,900 மில்லியன் கொண்ட இலக்கினை நான் நிர்ணயித்துள்ளேன். அதேபோன்று அதேகாலப்பகுதிக்கான இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 16,588 மில்லியனாகும். இவ்வாண்டுக்காக சுமார் ஐ.அ.டொலர் 18,900 மில்லியன் கொண்ட செலவிடும் இலக்கொன்றினையும் நான் நிர்ணயித்துள்ளேன். எனவே, வர்த்தகப் பற்றாக்குறை சுமார் ஐ.அ.டொலர் 7,000 மில்லியனாகவிருக்கும். இறக்குமதிகளின் செலவு 2027 அளவில் ஏறத்தாள ஐ.அ.டொலர் 26,800 மில்லியனாகவிருக்கும் ஆதலால் இடம்பெறுகின்ற ஆண்டின் ஏறத்தாள அதேமட்டத்தில் வர்த்தகப் பற்றாக்குறையினை நிலைநிறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.6 2021 இல் சுற்றுலா, துறைமுகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முன்னிலையிலான ஏற்றுமதி சேவைகள் என்பவற்றிலிருந்து சுமார் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட வர்த்தகமிகை எதிர்பார்க்கப்படுவதுடன் 2027 இல் அதனை ஐ.அ.டொலர் 8,000 மில்லியனாக அதிகரிப்பதற்கு இவ் வரவுசெலவுத்திட்ட உரையில் கொள்கைகளையும் வழிமுறைகளையும் எடுத்துரைத்துள்ளேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

வெளிநாட்டு தொழில் தொடர்பில் 2021 இல் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ஏறத்தாள ஐ.அ.டொலர் 6,850 மில்லியனாகவிருக்கும் என்பதுடன் 2027 ஆம் ஆண்டளவில் அதனை ஐ.அ.டொலர் 8,000 மில்லியனுக்கு அதிகரிப்பது எனது மற்றுமொரு இலக்காகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.7 சர்வதேச நடைமுறைக் கொடுப்பனவுகள் மற்றும் கிடைக்கப்பெறத் தக்கவைகள் வடிவில் நிகழ்கின்ற பங்குலாபங்கள் வட்டிகள் போன்ற கொடுக்கல் வாங்கல்கள், வெளிநாட்டு முதலீடுகளில் வளர்ச்சிக்குப் பொருந்தும் வகையில் பேணப்பட வேண்டும். எனினும் வர்த்தக நிதியிடலை நோக்கிய முனைப்பு

காரணமாக எமது நாடு வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட இலங்கை தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தனிப்பட்டவர்களை கவரும் விதத்தில் தோற்றம்பெறவில்லை. ஆதலால் கொடுக்கல் வாங்கல்கள் நிலுவையும் பற்றாக்குறையினை அனுபவிக்கின்றது. இங்கு சொல்லப்பட்ட பற்றாக்குறையானது ஆண்டுக்கு ஏறத்தாள ஐ.அ.டொ 2,000 மில்லியனாகும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.8 நான் விளக்குகின்ற மொத்தமும் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையினை வெளிப்படுத்துகின்றது. இதனாலேயே, ஐ.அ.டொ. 11,000 மில்லியன் கொண்ட தற்போதைய பற்றாக்குறையினை 2027 ஆம் ஆண்டில் 6,000 மில்லியன் கொண்ட மிகையாக மாற்றும் பொருட்டு மேலே குறிப்பிட்ட ஏற்றுமதிகள் சுற்றுலா தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு தொழிலிருந்தான வருவாய்கள் என்பவற்றை நோக்கி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் சர்வதேச பொருட்கள் மற்றும் சேவைகள் வர்த்தகத்தினையும் அதேபோன்று சர்வதேச நிதியளித்தல் என்பவற்றை கையாளுகையில் அடுத்துவருகின்ற 5 வருட காலப்பகுதியினுள் ஒவ்வொரு ஆண்டும் சென்மதி நிலுவைக்கு ஐ.அ.டொ. 1,000 கொண்ட குறைந்தபட்ச மிகையினைச் சேர்ப்பது எம் அனைவரினதும் பொறுப்பாகவுள்ளது. சர்வதேச நடைமுறைக் கணக்கு மாற்றுதலும் இக்குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.9 அரசாங்க வரவு செலவுத்திட்டத்தினை சமநிலைப்படுத்தலென்பது ஒன்றில் வருடக்கணக்கான நிலைபேறான தீர்வுகளால் தீர்க்கப்படாமையின் காரணமாக அல்லது அரசியல் நோக்கில் பிரச்சினைகளை நோக்குவதன் காரணமாக குவிந்துள்ள பாரியளவு சமூகப் பொருளாதார சவால்களை முகாமை செய்வதில் எமது அடிப்படை மற்றும் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகத் தோற்றம் பெற்றுள்ளது. சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒவ்வொரு அரசாங்கமும் பற்றாக்குறை வரவு செலவுத்திட்டக் கொள்கையொன்றினை நோக்கியே சாய்ந்திருந்தன. 1960 களில் தேசிய வருமானத்தில் சுமார் 6 சதவீதமாகவிருந்த இப்பற்றாக்குறை 1978 தொடக்கம் அவ்வப்போது 10 சதவீதத்தினை விஞ்சியது. 2020 – 2018 காலப்பகுதியில் இது சுமார் 7 – 8 சதவீதத்திற்கிடையில் தளம்பிக் காணப்பட்டதுடன் தற்போது இது மீண்டும் 10 சதவீதத்தினை விஞ்சியுள்ளது. கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக செயற்பாட்டிலிருக்கின்ற இக்கொள்கைகளின் விளைவாக இவ்விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கின்றோம். மக்களின் பிரதிநிதிகளாக எங்கள் மத்தியிலும்கூட இப்போக்கிலிருந்து விடுபடுவதற்கான அரசியல் மனநிலையும் இப்பிரச்சனையை காலந்தாழ்த்துகின்றவொன்றாகவுள்ளது. மக்கள் எமக்களித்த ஆணை, எமது அதிகாரக் காலப்பகுதியினுள் அப்போக்கிலிருந்து விலகுவதன் மூலம் பொருளாதார ரீதியாக வலுவான நாடொன்றினை கட்டியெழுப்புவதற்கானதாகும் என நாம் கருதுகின்றோம்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.10 அரசாங்கத்தின் நிதியியல் நடவடிக்கைகள் வெறுமனே வரிகளைச் சேகரித்தல், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளூடாக மேம்பாடடையாது. நிலைபேறான நிதியியல் ஒழுக்கமொன்றினை உருவாக்குவதற்கு அரசாங்க செலவினத்தை சிக்கனமாகவும் உற்பத்தித்திறன் மிக்க விதத்தில் கட்டுப்படுத்துவதும் அவசியமாகும். மீண்டெழும் செலவினத்தினை நிறைவேற்றுவதற்கு வருவாய் மூலங்களை தேடுகின்ற மரபுசார்ந்த அணுகுமுறைக்கு பதிலாக அரசாங்க வருவாய் மூலம் நிறைவு செய்யக்கூடிய மட்டங்களில் செலவினத்தை பேணுவதற்கான நிலைபேறான வழிமுறைகளுடன் அரச நிதி முகாமைத்துவ கலாசாரத்தினை கட்டியெழுப்புவதனையும் அத்தகைய வழிமுறைகளின் உற்பத்தித் திறனைத் தொடர்ச்சியாக மதிப்பிடுவதையும் நாம் இனிமேலும் காலந்தாழ்த்த முடியாது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.11 நலனோம்புகைச் செலவினம், பராமரிப்புச் செலவினம், அபிவிருத்திச் செலவினம் என்பவற்றை உரியகாலத்தில் பகிர்ந்தளித்தலானது வட்டி, சம்பளங்கள், ஓய்வூதியங்கள், கடன் தவணைக் கொடுப்பனவுகள், இப்பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மீள்கொடுப்பனவு முன்னுரிமைகள் என்பவற்றுக்கு மத்தியில் தொடர்ச்சியான போராட்டமொன்றாக தோற்றம் பெற்றுள்ளது. அரசாங்க வருவாய் நியதிகளில் நிதியங்கள் மற்றும் இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கடன்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் மற்றும் விரைவுகள் காரணமாக திறைசேரி அதன் தொழிற்பாடுகளில் தோல்வியேற்படும் தன்மையினை தொடர்ந்து எதிர்கொள்கின்றது. இதன் விளைவாக அரச நிதி முகாமைத்துவமானது நெருக்கடியொன்றாக தோற்றம்பெற்று தீர்ப்பனவு செய்யப்படாத வழங்குநர் கொடுப்பனவுகளுக்கு இட்டுச் செல்கின்ற அதேவேளை அபிவிருத்தியும் பொதுச் சேவையின் தரமும் ஸ்திரமற்றுக் காணப்படுகின்றது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.12 கௌரவ சபாநாயகர் அவர்களே இப் பயணப்பாதையை நாம் மாற்றவேண்டியுள்ளது. சுமார் 72 ஆண்டுகளாகப் பேசப்படுகின்ற வரவுசெலவுப்பற்றாக்குறை, ஒட்டுமொத்த பொருளாதார செயன்முறையில் மையப்பிரச்சனையாக தோற்றம் பெற்றுள்ளது. நடைமுறைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளை குறைத்து மதிப்பிடுவதன் மூலமாகவன்றி அரசாங்க வருவாயினையும் செலவினத்தையும் சமநிலைப்படுத்தக்கூடிய மக்கள் வரவுசெலவுத்திட்ட முகாமைத்துவத்தை நாம் அணுகவேண்டிய பல எண்ணிக்கையான வழிகளை நான் எடுத்துரைத்தேன். யதார்த்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். ஆகையினால் எமது தொலைநோக்கு வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை தற்போதய தேசிய வருமான மட்டத்தின் 10 சதவீதத்திலிருந்து 2027 அளவில் 1.5 சதவீதத்திற்கு குறைக்கும் விதத்தில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டத்தினையும் முகாமை செய்வதாகும். தற்போது தேசிய வருமானத்தின் 9 சதவீதமாகவுள்ள அரசாங்க வருவாயினை 2027 அளவில் 18 சதவீதத்திற்கு அதிகரிக்கக்கூடிய வகையில் வரி நிர்வாகத்தை நாம் வலுப்படுத்த வேண்டியுள்ளதுடன் வரித்தளத்தினை விரிவுபடுத்துகின்ற அதேவேளை தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்கள் மத்தியில் வரி இணங்குவித்தலினை அதிகரிக்கின்ற பொருளாதார அபிவிருத்தியினை அறிமுகப்படுத்த வேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.13 ஏலவே நான் குறிப்பிட்டதுபோன்று தனிப்பட்ட சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கு மேலதிகமாக அதன் வரவு செலவுத்திட்ட முகாமைத்துவத்தினூடாகவும் அரசாங்கம் சேமிக்க வேண்டியுள்ளது. இதன் நோக்கம் தற்போது தேசிய வருமானத்தின் சதவீதமாக சுமார் 16 சதவீதம் காணப்படுகின்ற மீண்டெழும் செலவினத்தை 2027 அளவில் 13 சதவீதத்திற்கு குறைப்பதன் மூலம் வரவு செலவுத்திட்ட சேமிப்புகளை 5 சதவீதத்திற்கு அதிகரிப்பதாகும். இதில் தீர்க்கமான ஆண்டு 2024 ஆம் ஆண்டாகும். இதற்குக் காரணம் நடைமுறைக்கணக்கிலுள்ள மிகைகள் இவ்வாண்டில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றமையாகும். இது தொடர்பில் அனைத்து அரசாங்க ஊழியர்களினதும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆதரவைக் கூறுகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.14 தேசிய வருமானத்தின் சுமார் 3.5 சதவீதமாக தற்போது காணப்படுகின்ற அபிவிருத்திச் செலவினம் 2024 அளவில் 6 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் 2027 அளவில் சுமார் 7 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அர்த்தம் இதுவரையிலும் கடன்கள் மீது தங்கியிருக்கின்ற அபிவிருத்திச் செலவினம் வரவுசெலவுத்திட்ட சேமிப்புகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருக்கலாம் என்பதாகும். தற்போது சுமார் 102 சதவீதமாகவுள்ள அரசாங்கப் படுகடனை அத்தகைய அரசநிதி முகாமைத்துவத்தினூடாக மாத்திரமே 74 சதவீதத்திற்கு குறைக்கக்கூடியதாகவிருக்கும். இங்கு தேசிய வருமானத்தின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடனை 36.5 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதத்திற்கு குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குள் இவ்

வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள், ஐ.அ.டொ 8,000 மில்லியன் கொண்ட ஏற்கனவே குறைக்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிக்கடன்களை மேலும் குறைப்பதனையும் நிலைபேறான நிதியளித்தலூடாக வெளிநாட்டுக் கடன்களின் உள்ளமைப்பினை மாற்றுவதனையும் உள்ளடக்குகின்றன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.15 நான் சமர்ப்பிக்கின்ற எனது வரவு செலவுத்திட்ட தொலைநோக்கானது நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து செல்லவேண்டிய சவால்மிக்க பாதையாகும். இது பற்றாக்குறையான வரவு செலவுத்திட்டப் பாதையொன்று என்பதைவிட மிகவும் ஒழுக்கம்மிக்க அரசநிதி கட்டுப்பாடாகும். இதனைப் பழக்கப்படுத்திக் கொள்வது முதலில் கடினமானதாக இருக்கலாம். ஆயினும் நாட்டினை, தேசத்தினை அத்துடன் பொருளாதாரத்தினை வலிமைப்படுத்துவதற்கு இதுவே பாதையாகும் என்பதனை நான் உறுதியாக வலியுறுத்துகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.16 எமது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகளில் நாம் அடைந்த வெற்றிகளை நாம் நினைவுபடுத்த வேண்டும். எமது நாட்டில் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் புறட்சிகர மாற்றங்களாக 1957 இல் ஊழியசேமலாப நிதியம், 1961 இல் மக்கள் வங்கி, 1960 களில் இலங்கை வங்கி மற்றும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை தேசிய மயமாக்கல், 1971 இல் தேசிய சேமிப்பு வங்கி தாபிக்கப்பட்டதனை நாம் பாராட்ட விரும்புகின்றேன். கிராமிய பிரதேசங்களை இலக்காகக் கொண்டு கிளை வலையமைப்பினை திறந்துள்ளதன் காரணமாக நாட்டின் கிராமிய பிரதேசங்கள் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் வசதிகளுக்கு பெறுவழியினைக் கொண்டிருக்கின்றன. அவையின்றி தனியார் வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் அங்கு ஒருபோதும் சென்றிராது.

எவ்வாறாயினும், கடந்த சில தசாப்தங்களாக அரசாங்க வரவுசெலவுத்திட்டத்திற்கு நிதியளிப்பதை நோக்கி அதிகளவில் தங்கியிருக்கின்ற குறிப்பாக பெற்றோலிய, மின்சார மற்றும் இரசாயண உரங்கள் தொடர்பிலான நிறுவனங்களுக்கு அரச வங்கிகளும் காப்புறுதிக் கம்பனிகளும் நிதியளிக்கின்றன. எனவே, தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பம், வீடமைப்பு மற்றும் விவசாயம் அல்லது சாதாரண வைப்பாளர்கள் போன்றவற்றுக்கு நிதியளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்டப்படவில்லை. விவசாய அறுவடைகளைக் கொள்வனவு செய்வதற்கு சலுகை வீதங்களை வழங்கப்படுகின்ற அரசாங்கத்தின் வாங்குறுதிக் கடன்திட்டம் பாரிய வர்த்தகர்களின் கைகளில் நிதியியல் கருவியொன்றாக இருக்கும் விதத்தில் மாற்றமடைந்துள்ளது.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.17 அரச முதலீட்டு மற்றும் ஈட்டுவங்கி, வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கை தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி போன்ற அரச வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் அபிவிருத்தி நிதியளிக்கும் விதத்தில் மாறுதலடையவில்லை. சமுர்த்தி வங்கி முறைமை தவிர கிராமியப் பொருளாதாரத்திற்கு உற்பத்தித்திறன் மிக்கதாக எந்தவொரு நுண்பாக நிதியளித்தல் நிறுவனமும் தோற்றம்பெறவில்லை. கூட்டுறவு கிராமிய வங்கிமுறைமையும் வலுப்படுத்தப்பட வேண்டும். நிதி மற்றும் குத்தகை கம்பனிகளின் தொழிற்பாடுகளும் இதேநிலையிலேயே காணப்படுகின்றன. ஈரிஜ, த பினான்ஸ் கம்பனி போன்ற நிதிக் கம்பனிகள் முறிவடைந்துள்ளன. இது ஒட்டுமொத்த நிதித்துறையினையும் மோசமாகப் பாதிக்கின்றது. கொடுகடன் தகவல் பணியகமானது சிறு மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு தடையொன்றாகியுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கி தனியார் மயப்படுத்தப்பட்டதனுடன் அபிவிருத்தி வங்கிமுறையும் மறைந்துவிட்டது. 2021 வரவுசெலவுத்திட்டத்தில் கௌரவ பிரதம அமைச்சர் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு பணியாற்றுகின்ற மேலே சொல்லப்பட்டஅரச வங்கிகளை இணைக்கின்ற அபிவிருத்தி வங்கியொன்றின் தேவையினை எடுத்துக்காட்டினார்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

8.18 அதேவேளை சேமிப்புக்கள் உள்ளடங்களாக பல்வேறு கொடுக்கல் வாங்களுக்கும் சேவைநாடிகள் மீது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் அறவிடப்படும் கட்டணங்கள் சிக்கலானவையாக தோற்றம்பெற்றுள்ளன. அக்கட்டணங்களை சமமானவையாக ஆக்குவதற்கான தேவை தோன்றியுள்ளது. ஆதலால் இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் (ஈரிஐ) மீதான சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையினையும் கருத்திற்கொண்டு இத்துறைகளின் பரந்தளவிலான மறுசீரமைப்புகளை தொடங்கவேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

**முடிவுரை**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.1 ‘‘நல்லொழுக்கம்’’ அல்லது ‘‘நல்லாட்சி’’ என அழைக்கப்படும் ஆட்சிக்காலத்தின்போது நாடுசென்ற பாதை ஒருபோதும் நாட்டுக்கு நன்மைபயக்கவில்லை. அதிமேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் எதிர்காலத்திற்காக அப்பாதையினை மாற்றுவதற்கு அச்சமின்றி அர்ப்பணித்துள்ளார்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.2 அப்பாதையினை திசைமாற்றுவதற்கு சேதன விவசாயத்தைக் கொண்ட அத்துடன் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி பொருளாதாரத்தினைக் கொண்ட ஒரு நாட்டில் நாம் கால்பதித்துள்ளோம். நாம் நடைமுறைப்படுத்துகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணத்துறை மாத்திரமன்றி சந்தை தொடர்புகை, சுகாதாரம் மற்றும் அரசாங்க சேவைகள், கல்வித்துறை அபிவிருத்தி என்பவற்றுக்கானதாகும். உயிர்பல்வகைமையினை செழிப்படையச் செய்தலும் சுற்றாடல் பாதுகாப்பும் நிலைபெறு தன்மையினை விருத்தி செய்கின்றது. நாட்டின் வரவுசெலவுத்திட்டம், சென்மதி நிலுவைகள் மற்றும் வங்கி அத்துடன் நிதித்துறைகள் இதற்கு ஒன்றுசேர்ந்து பங்களிக்க வேண்டும். உறுதியான சமூகப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு மனிதவள அபிவிருத்தி இலக்காகக் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய அணுகுமுறையினூடாக இறைமையான அரசொன்றை தாபிப்பதற்கான பாதை காணப்படுகின்றது. என நான் நம்புகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.3 பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் சுபீட்சம் மிக்க நிலங்களாக தற்போது தோற்றம்பெற்றுள்ளன. எமது நாட்டின் புத்தி ஜீவிகளும் வர்த்தகர்களும் அந்நாடுகளில் தொழிலுக்காக சென்றுள்ளனர். நவீன விமான நிலையங்கள், துறைமுகங்கள், அதிவேகப் பாதைகள், அடுக்குமாடிமனைகள் போன்ற பௌதிக உட்கட்டமைப்பின் காரணமாக மாத்திரம் அந்நாடுகள் சுபீட்சம்பெறவில்லை. அவற்றின் தேசிய பொருளாதாரம் வலிமை மிக்கதாக உருவாகியது. வங்கிகள், துறைமுகங்கள், சுங்கம், உள்நாட்டு இறைவரி போன்ற நிறுவனங்கள் தொழில்நுட்ப சேவைகள் ஊடாக வேறுநாடுகளுடன் இணைந்து ஒன்றன்பின் ஒன்றாக அபிவிருத்தியடைந்தன. அந்நாடுகள் முதனிலை மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பசார் உற்பத்திகளை மிகையாக்கின 70 வருடங்களுக்குமேல் பற்றாக்குறை வரவுசெலவுத்திட்டங்களை பேணுவதற்குப் பதிலாக செலவினத்தை விஞ்சுகின்ற அரசாங்க வருவாயினை அவை அதிகரித்து வரவுசெலவுத்திட்டத்தினுள் சேமிப்பினை உருவாக்கின.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.4 அந்நாடுகளின் சுபீட்சமானது சொத்தாண்மையின் உடைமை பற்றிய சுலோகங்களுக்குள் முடங்காது இலாபகரமான கூட்டுமுயற்சிகளாக அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் இரண்டும் மாற்றமடைந்த முகாமைத்துவத்தின் ஊடாக காணக்கூடியதாகவுள்ளது. வெளிநாடுகளிலிருந்து மாணவர்களை ஈர்ப்பதற்கு அவை வசதிகளை நிறுவின. சுகாதார வசதிகளை உயர்வான தரணியங்களுக்கு அபிவிருத்தி செய்து அவற்றின் மருத்துவ நிலையங்களுக்கு நாம் உட்பட வெளிநாடுகளிலிருந்து மக்களை அவை ஈர்த்தன. வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் வைப்புகளையும் கடன்

கணக்குகளையும் பேணுகின்ற அடிப்படை வர்த்தக வங்கிகளாக இருப்பதிலிருந்து முழுமையாக வசதிபடைத்த சாதகங்களுடன் கூடிய நிதி நிறுவனங்களாக மாறுதலடைந்தன.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.5 எமது நாட்டை சுபீட்சம் மிக்க நிலமாக மாற்றுவதற்கு நான் முன்வைத்துள்ள வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பு இத்தன்மையிலான அபிவிருத்தி பயணவழியொன்றின்மீது தடம்பதிப்பதன் ஊடாக மாத்திரம் திருப்புமுனையொன்றாக ஆக்கப்படக்கூடியது. இதனாலேயே இப்பொறுப்புடைமை குறித்தொதுக்கப்பட்டுள்ள இவ்வவையின் உறுப்பினர்களின் ஆதரவும் அனுமதியும் வழங்கப்படவேண்டும்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

9.6 எனது வரவுசெலவுத்திட்ட உரையினை முடிப்பதற்குமுன் உங்கள் அனைவருக்கும் நன்றிகூறுவது எனது உயரிய கடமையாகும். வரவுசெலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஆசிர்வாதமளித்தமைக்காக மஹாநாயக்க தேரர்களுக்கும் அனைத்து வணக்கத்துக்குரிய தேரர்களுக்கும் இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மதங்களின் தலைவர்களுக்கும் கண்ணியத்துடன் நன்றிகூறுகின்றேன்.

- இச்சவால்மிக்க நேரத்தில் எதிர்காலத்தைக் கொண்ட மக்கள் வரவுசெலவுத்திட்டத்தினை வகுப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்த அதிமேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களுக்கு எனது முதற்கண் நன்றிகள் உரித்தாகட்டும்
- மேன்மைமிக்க அனைத்து வழிகாட்டலுக்கும் முன்மாதிரியான தலைவர் கௌரவ பிரதம அமைச்சருக்கு நான் ஆசி வேண்டுகின்றேன்.
- எனது கன்னி வரவுசெலவுத்திட்ட உரையினை சமர்ப்பிப்பதற்கு அனைத்து வசதிகளையும் ஆதரவினையும் எனக்கு வழங்கியமைக்காக கௌரவ சபாநாயகருக்கு எனது கண்ணியமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.
- கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு என்றும் மேலானது.
- அதிமேதகு சனாதிபதியின் செயலாளருக்கு, நிதி அமைச்சின் செயலாளருக்கு, நிதி அமைச்சின் ஒட்டுமொத்த அலுவலர்களுக்கும், அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சின் அனைத்து செயலாளர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஒட்டுமொத்த அரச சேவைக்கும் எனது பணிவான நன்றிகளை தெரிவிக்கின்றேன்.
- பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் அவர்களது ஒட்டுமொத்த அலுவலர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.
- கௌரவ ஆளுநர்கள் மற்றும் மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி அதிகாரசபையின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அவர்களது இன்றியமையாத ஆதரவுக்காக நன்றிகூறுகின்றேன்.
- வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்குவதில் அவர்களின் செயலூக்கம்மிக்க ஈடுபாட்டுக்காக அனைத்து தனியார் துறை வர்த்தக சம்மேளனங்கள், சிவில் அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், தொழில்சார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு எனது பணிவான நன்றிகள் உரித்தாகட்டும்.
- கிராமிய சமூக தலைவர்கள் உள்ளடங்களாக அனைத்து பிரசைகளுக்கும் நன்றி கூறுகின்றேன்.
- இலங்கை பொதுசன முன்னணிக் கட்சியின் அனைத்து கூட்டுக் கட்சிகளுக்கும் அதிலுள்ள அனைத்து கட்டமைப்புகளுக்கும் நன்றி கூறுகின்றேன்.
- இவை அனைத்துக்கும் மேலாக கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டு வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பித்தலை ஆர்வத்துடன் எதிர்பார்த்து பொறுமையாகக் காத்திருந்த

இந்நாட்டின் எனது அன்புக்குரிய பிரசைகளுக்கு எனது இதயபூர்வமான நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

எனது வரவுசெலவுத்திட்ட உரையின் முடிவாக எமது நாட்டில் பிரபல்யமான இலக்கியவாதியான மஹகமசேகர என்பவரின் சிந்தனையை மேற்கோள்காட்ட விரும்புகின்றேன்.

தர்மே

காசிம்

இராஜசுந்தரம்

அனைவரும் இங்கு ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றனர்

நாம் ஒன்றுசேருவோம்

நாம் இவ்வுலகை தற்போதிருப்பதைவிட சிறந்த இடமொன்றாக்குவோம்.

மும்மணிகளின் ஆசிகள் உரித்தாகட்டும்..!

# வரவு செலவுத்திட்ட தொகுப்பு (2021- 2022)

ரூ.பில்.

| வகை | 2021 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2022 வ.செ.திட்டம் |
|---|---|---|
| **மொத்த வருவாயும் மானியங்களும்** | **1,561** | **2,284** |
| **மொத்த வருவாய்** | **1,556** | **2,274** |
| **வரி வருவாய்** | **1,325** | **1,987** |
| வருமான வரி | 295 | 496 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 650 | 1,031 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 380 | 460 |
| **வரியல்லா வருவாய்** | **170** | **226** |
| **மாகாண சபைகள் வரிப்பகிர்வு மற்றும் வழங்குதல்** | **61** | **61** |
| **மானியங்கள்** | **5** | **10** |
| **மொத்தச் செலவினம்** | **3,387** | **3,912** |
| **மீண்டெழும்** | **2,817** | **2,996** |
| மாகாண சபைகள் உள்ளடங்களாக சம்பளங்களும் வேதனாதிகளும் | 887 | 1,015 |
| மாகாணசபை உள்ளடங்களாக ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 198 | 203 |
| வட்டி | 1,055 | 1,115 |
| உதவுதொகைகள் மற்றும் மாற்றல்ககள் | 677 | 663 |
| **அரசாங்க முதலீடு** | **582** | **931** |
| **ஏனையவை** | **(12)** | **(15)** |
| **வருமான மிகை (+)/பற்றாக்குறை(-)** | **(1,261)** | **(722)** |
| **முதனிலை மிகை (+)/பற்றாக்குறை(-)** | **(771)** | **(513)** |
| **வரவுசெலவுத்திட்டமிகை (+)/பற்றாக்குறை(-)** | **(1,826)** | **(1,628)** |
| **மொத்த நிதியிடல்** | **1,826** | **1,628** |
| **மொத்த வெளிநாட்டு நிதியிடல்** | **(48)** | **(179)** |
| வெளிநாட்டு கடன்பெறுதல்கள் - மொத்தம் | 489 | 508 |
| கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் | 332 | 358 |
| வெளிநாட்டு வர்த்தக | 157 | 150 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | (536) | (687) |
| **மொத்த உள்நாட்டு நிதியிடல்** | **1,874** | **1,807** |
| வங்கியல்லா கடன்பெறுதல்கள் | 1,569 | 1,397 |
| இலங்கை அபிவிருத்தி முறி | (64) | (91) |
| வங்கிக் கடன்பெறுதல்கள் மற்றும் ஏனையவை | 368 | 501 |
| **வருவாய் மற்றும் மானியங்கள் /மொ.உ.உ** (%) | **9.5** | **12.3** |
| **மொத்த வருவாய் / மொ.உ.உ** (%) | **9.4** | **12.3** |
| வரி வருமானம்/மொ.உ.உ | 8.0 | 10.7 |
| வரியல்லா வருமானம் /மொ.உ.உ (%) | 1.0 | 1.2 |
| மாகாண சபை வரி பகிர்வு மற்றும் செலுத்தல் வருமானம்/மொ.உ.உ (%) | 0.4 | 0.3 |
| **மானியங்கள்/மொ.உ.உ** (%) | **0.03** | **0.05** |
| **மொத்தச் செலவினம் /மொ.உ.உ** (%) | **20.6** | **21.1** |
| மீண்டெழும் செலவினம் **/மொ.உ.உ** (%) | 17.1 | 16.2 |
| மாகாண சபைகள் உள்ளடங்களாக வட்டியல்லாதவை /மொ.உ.உ (%) | 10.7 | 10.2 |
| வட்டி/மொ.உ.உ (%) | 6.4 | 6.0 |
| அரசாங்க முதலீடு /மொ.உ.உ (%) | 3.5 | 5.0 |
| **வருமான மிகை** (+)/**பற்றாக்குறை** (-) **மொ.உ.உ** (%) | (7.7) | (3.9) |
| **முதல்நிலை மிகை** (+)/**பற்றாக்குறை** (-) **மொ.உ.உ** (%) | (4.7) | (2.8) |
| **வரவுசெலவுத்திட்டமிகை** (+)/ **பற்றாக்குறை** (-)**மொ.உ.உ** (%) | **(11.1)** | **(8.8)** |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.*

**பின்னிணைப்பு II**

**மொத்த கடன்பெறல் தேவைப்பாடு – 2022**

**(கணக்கீட்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏற்பாடு செய்தல்**

| **வகை** | **ரூ.மில்** |
|---|---|
| அரசாங்க கடன் பெறுகைகள் தவிர மொத்தக் கிடைப்பனவுகள் | 2,261 |
| படுகடன் மீள் கொடுப்பனவுகள் உள்ளடங்களாக மொத்தக் கொடுப்பனவுகள் | 5,245 |
| முற்பணக் கணக்குகளுக்கான ஏற்பாடு | 6 |
| ஏட்டுக்கான / அரசாங்க பிணையங்கள் காசுப் பெறுமதிக்கான சீராக்கங்கள் | 150 |
| இடர்நேர்வு ஏற்பாடு | 60 |
| அரசாங்க கணக்குகள் பதிவு செய்யப்பட வேண்டிய மொத்த கடன்பெறுதல் தேவைப்பாடு | 3,200 |
| இதில் மொத்தப்படுகடன் மீள் கொடுப்பனவுகள் | 1,531 |

*அரசிறைக் கொள்கை, திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்டத்திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மூலம் தொகுக்கப்பட்டது.*

**பின்னிணைப்பு III**

**வருமான முன்மொழிவுகள்**

| **இல.** | **முன்மொழிவு** | **ரூபா மில்.** |
|---|---|---|
| | | |
| 1 | மிகை வரி | 100,000 |
| 2 | சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு | 140,000 |
| 3 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் ஏனைய அறவீடுகள் | 14,000 |
| 4 | விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி | 50,000 |
| 5 | மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான முன்மொழிவுகள் | 4,000 |
| 6 | உரிமைக் கட்டணங்கள், ஏலங்கள் மற்றும் ஏனைய வரியல்லா வருமானமும் | 25,000 |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.*

பின்னிணைப்பு IV

## செலவின முன்மொழிவுகள்

| இல. | முன்மொழிவு | ஒதுக்கீடு (ரூபா மில்) |
|---|---|---|
| 1. | நஞ்சற்ற களைநாசினிப் பயன்பாட்டுக்கான சலுகைகள் | 4,000 |
| 2. | விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் | 5,000 |
| 3. | பெருந்தோட்டத்துறையின் நவீனமயமாக்கம் மற்றும் சலுகைகள் | 10,000 |
| 4. | கடற்றொழில் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்தி | 1,000 |
| 5. | கால்நடை அபிவிருத்தி | 1,000 |
| 6. | மரபுசார் குடிசைக் கைத்தொழில் அபிவருத்தி | 1,000 |
| 7. | கைத்தறி மற்றும் பத்திக் உள்ளடங்களாக புடவைக் கைத்தொழில் அபிவிருத்தி | 1,000 |
| 8. | புதிய உற்பத்தி முதலீட்டு வலையங்களுக்கான உட்கட்ட அபிவிருத்தி | 5,000 |
| 9. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் வலயங்கள் | 5,000 |
| 10. | அனைவருக்கும் நீர் | 15,000 |
| 11. | *நீர்ப்பாசன சுபீட்சம்* | 20,000 |
| 12. | 100,000 கி.மீ. வீதிகள் (தோட்ட வீதிகள் உள்ளடங்களாக) | 20,000 |
| 13. | மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி | 500 |
| 14. | நகர வீடமைப்பு அபிவிருத்தி | 2,000 |
| 15. | கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி | 5,000 |
| 16. | தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி | 500 |
| 17. | கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 42,063 |
| 18. | உள்ளூர் அதிகாரசபை வாட்டுகள் அபிவிருத்தி | 19,668 |
| 19. | பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 3,375 |
| 20. | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி | 19,894 |
| 21. | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கான நிவாரணம் | 5,000 |
| 22. | பாடசாலை வான் உரிமையாளர்களுக்கான நிவாரணம் | 400 |
| 23. | முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கான நிவாரணம் | 600 |
| 24. | தனியார் பஸ் உரிமையாளர்களுக்கான நிவாரணம் | 1,500 |
| 25. | கலை மற்றும் பொழுதுபோக்குத்துறைக்கான சலு | 500 |
| 26. | சுற்றாடல் பாதுகாப்பு | 2,000 |
| 27. | வனப்பாதுகாப்பு | 2,000 |
| 28. | வனசீவராசிகள் பாதுகாப்பு | 1,000 |
| 29. | பாடசாலை அபிவிருத்தி | 5,300 |

| இல. | முன்மொழிவு | ஒதுக்கீடு (ரூபா மில்) |
|---|---|---|
| 30. | சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் | 5,000 |
| 31. | விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி | 3,000 |
| 32. | சிறுநீர்ப்பாசனங்கள் | 2,000 |
| 33. | வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி | 2,000 |
| 34. | பயணிகள் போக்குவரத்து | 2,000 |
| 35. | நீதித்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் | 5,000 |
| 36. | பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு | 500 |
| 37. | கைதிகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் | 200 |
| 38. | முதியோர்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கான வசதிகளை வழங்குதல் | 1,000 |
| 39. | கர்ப்பிணித் தாய்மார்கள் | 1,000 |
| 40. | மனைப் பொருளாதாரம் | 15,000 |
| 41. | மனை விற்பனை நிலையம் | 15,000 |
| 42. | பொதுத்துறை டிஜிட்டல் மயப்படுத்தல் | 500 |
| 43. | அரசாங்க ஊழியர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் | 500 |
| 44. | ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை அகற்றுதல் | 30,000 |
| 45. | பட்டதாரிப் பயிலுநர்களை உறுதிப்படுத்தல் | 7,600 |
| 46. | அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்குதல் | 100 |
| 47. | ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை அகற்றுதல் | 500 |
| 48. | பௌத்த விகாரைகளை பராமரித்தல் | 500 |
| 49. | காணாமற் போனோருக்கான நட்டஈடு | 300 |
| 50. | தொழில்சார் அமைப்புக்கான பங்களிப்பு | 100 |
| 51. | செலவினச் சேமிப்பு | (30,000) |

**தொழில்நுட்பக் குறிப்பு**

**வரவுசெலவுத்திட்டம் 2022- வரிவிதித்தல்**

## I. வரிவருமான முன்மொழிவுகள்

### 1. ஒருமுறை மாத்திரம் வருமானம்மீது அறவிடப்படும் மிகை வரி

2020.'.2021 மதிப்பீட்டு ஆண்டுக்காக ரூபா 2,000 மில்லியனுக்கு மேற்பட்ட வரி அறவிடக்கூடிய வருமானமொன்றை சம்பாதிக்கும் தனி நபர்கள்மீது அல்லது கம்பனிகள்மீது 2 சதவீத மிகைக் கட்டன வரியொன்றை விதித்தல்.

### 2. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு

3 சதவீத விலையில் வருடமொன்றுக்கு ரூபா 120 மில்லியனுக்கு மேல் பொறுப்புள்ள விற்பனைப் புரள்வின்மீது சமூகப்பாதுகாப்பு பங்களிப்பை அறவிடுதல். இந்தப் பங்களிப்பு 2022 ஏப்ரல் 1ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக அறவிடப்படுகின்றது.

### 3. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்துக்கான திருத்தங்கள்.

3.1 நிதி நிறுவனங்களினால் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதம் வரை நிதிச்சேவைகளை வழங்குதல் தொடர்பான பெறுமதிசேர் வரிக் கட்டணத்தை அதிகரித்தல். இந்த அறவீடு 2022 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 31 ஆந் திகதிவரை ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும்.

3.2 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் விதமாக சுகாதார விடயத்துக்குப் பொறுப்பாக குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சினது செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் நிதி அமைச்சரினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தொற்றுநோய் அல்லது பொதுச் சுகாதார அவசர நிலையை எடுத்துக் கூறுவதற்கு சுகாதார சேவைகளின் ஏற்பாட்டுக்காக அரசாங்க வைத்தியசாலை ஒன்றுக்கு அல்லது சுகாதார அமைச்சுக்கு நன்கொடை அளிக்கப்படும் மருத்துவ உபகரணம், இயந்திர சாதனம், கருவிகள், துணைப்பாகங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள், வைத்தியசாலைத் தளபாடம், மருந்துகள் மற்றும் இரசாயணப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செயதல் அல்லது வழங்கல் தொடர்பில் பெறுமதிசேர் வரி விலக்குகளை அனுமதிப்பதற்கு 2002 ஆம் ஆண்டின் 14 ஆம்இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்தின் 1ஆவது அட்டவணையின் பகுதி (1) இன் பந்தி (அ) இல் நியதியை (xxxi) திருத்துதல்.

### 4. சிகரட் மீதான மதுவரி (விசேட ஏற்பாடுகள்)

சிகரட் மீதான மதுவரித் திருத்தம்

### 5. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் மதுபானம் மீதான மதுவரி

மதுபானம் மீதான மதுவரித் திருத்தம்

## II. வுரி வருமானம் அல்லதவை தொடர்பான முன்மொழிவுகள்.

1. மோட்டார் போக்குவரத்து விபத்துகளுக்கு உள்ளாகும் வாகனங்கள் தொடர்பில் கட்டணம் ஒன்றை அறவிடுதலும் காப்புறுதியிலிருந்து கட்டணத்தை மீள் நிரப்பல் செய்வதற்கு காப்புறுதித்தாரருக்கு அனுமதித்தலும்.

2. வாகனங்களை நவீனமயப்படுத்தல், மாற்றங்களைச் செய்தல் அல்லது மேம்படுத்தல் ஆகியவற்றுக்காக கட்டணமொன்றை அறவிடுதல்.

3. மன்னிப்புக் காலப்பகுதியொன்றில் தண்டப்பணம் ஒன்றைச் செலுத்துவதன்மூலம் அனுமதிக்கப்படாத வீதிகளுக்கு ஏற்ற சகல மோட்டார் வாகனங்களையும் மோட்டார் சைக்கிள்களையும் சட்டபூர்வமாக்குதல்.

4. தொடர்புடைய வரிகளையும் தண்டப்பணத்தையும் அறவிட்டதன் பின்னர் விடுவிப்புக்காக வரி செலுத்தாமை அல்லது ஏனைய காரணங்களினால் இலங்கை சுங்கத்திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவித்தல்.

5. விசேட வலயங்களாக விருத்தி செய்யப்படுகின்ற விசேட வளவுகளுக்கான உல்லாசத்துடன் தொடர்புப்' நடவடிக்கைகளை நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல்.

6. ஏலவிற்பனை ஒன்றின் ஊடாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். நிலையான தொலைபேசி இயக்குனர்கள். செல்லிடத் தொலைபேசி இயக்குனர்கள். இணையத்தள சேவை வழங்குநர்கள் மற்றும் செய்மதி ஒலிபரப்பு இயக்குனர்கள். உள்ளிட்ட தொலைத்தொடர்பு சேவைகள் சம்பந்தமாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

## III. வரி நிருவாகம்

1. பாரிய வரி செலுத்துனர்களிடமிருந்து (LTU) திரட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரிப்பதற்காக பாரிய வரி செலுத்துனர்களின் பிரிவு மேல் கூட்டுறவுப் பிரிவு (UCU) ஆகியவற்றை தொடர்ந்தும் வலுவூட்டுதல்.

2. வருமான நிறுவனங்களின் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட முறைகளுக்குள் பற்றாக்குறையை எடுத்துக் கூறுதல் : உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் RAMIS மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தில் தனிச்சாரளம்

3. மதுவரித் திணைக்களத்தின் டிஜிட்டல் வருமான சேகரிப்பு தொகுதியை செயற்படுத்துவதனை விரிவுபடுத்துதல்.

4. மதுபானத்திற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதனை இலகுபடுத்துதல்.

5. சரியான சரிபார்த்தல் முறையை மேற்குறிப்பிட்ட டிஜிட்டல் முறையின் ஊடாக சாத்தியமான இடங்களில் வரி கோப்புகளை நிரப்பும்போது செல்லுபடியாகும் ஆவணங்களாக டிஜிட்டல் இன்வொயிஸ்களையும் ஆவணங்கைளையம் சமர்ப்பிப்பதனை அனுமதித்தல்.

## IV. ஏனைய முன்மொழிவுகள்

### 1. பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்பட்ட பணம்

கௌரவ சட்டமா அதிபர் அவர்களினால் எடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு கேடு விளைவிக்காத விதத்தில் பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிட்டெட் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியின் நடத்தைக் கோவையை மீறி சம்பாதிக்கப்பட்ட பணத்தை பொதுத் திறைசேரிக்கு மாற்றுதல்

### 2. தொழில்நுட்ப திருத்தங்கள்

2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்துக்கு தொடர்புடைய திருத்தங்களை மேற்கொள்கின்ற அதேவேளையில் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஒருசில (மொழிபெயர்ப்பில் உள்ள வேறுபாடுகள் உட்பட) இரட்டை அர்த்தங்களைத் திருத்துதல்